STATE LEGISLATURE. 13 DEC 1965

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, the 30th July 1965.

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I. QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

New Colleges for Madurai district

* 31 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state the number of applications received so far, to start new colleges in Madurai district and at Madurai City, and the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The University of Madras is the authority to grant affiliations to the Colleges. All applications for permission to open new Colleges should be addressed to the University of Madras. The details of the applications received by the University for 1965-66 are as follows :—

(1) The Director of Public Instruction has applied for affiliation for a Government College for Women at Madurai.

(2) The Managing Trustee, Narayanan Chettiar Trust, Madurai and the Nadar Mahajana Sangam, Madurai have applied for affiliation for the opening of Colleges at Madurai and Nagamalai.

(3) The Government (in the Food and Agriculture Department) have sent an application to the University for starting an Agricultural College at Madurai.

திரு. வை. சங்கரன் : இந்தப் புதிய கல்லூரிகள் அமைக்கப் படுவது, அந்தந்த மாவட்டத்திலேயுள்ள எஸ்.எஸ்.எல்.சி., பி.யூ.சி. தேறிய மாணவர்களின் விண்ணப்பத்தைக் கொண்டு அனுமதிக்கப்படுகிறதா ? இல்லையென்றால், வேறு எந்த அடிப் படையைக் கொண்டு அனுமதிக்கப்படுகிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கல்லூரிகளில் கடிய வரைக்கும் உள்ளூரில் இருப்பவர்களை எடுத்துக்கொள்ளலாம். ஆனால், அந்த ஸ்தலத்தில் இருக்கிறவர்களைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதில்லை.

திரு. எம். எஸ். மணி : மதுரையில் சமீபத்தில் அனுமதிக்கப் பட்ட பெண்கள் கல்லூரி, அங்கேயே நிரந்தரமாக வைக்கப் படுமா ? அல்லது வேறு இடத்திற்கு மாற்றப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இன்னும் இறுதியாக முடிவு செய்யவில்லை. அங்கேயே இதை நிரந்தரமாக வைத்துக் கொள்ளலாம். வேறு கட்டடங்கள் கட்டப்பட்டு அங்கேயிருக்கிற

காரியாலயங்கள் வேறு இடத்திற்கு மாற்றப்பட்ட பிறகு இதை நிரந்தரமாக அங்கேயே வைத்துக்கொள்ளலாம் என்பது அரசாங் கத்தின் யோசனை.

புலவர் கா. கோவிந்தன்: ஐந்து லட்சம் ரூபாய் நன்கொடை கொடுத்தால் கல்லூரி அமைக்க அரசாங்கம் அனுமதிக்கும் என்ற முறை இருக்கிறது. அப்படியிருப்பதால் கல்லூரிகள் ஒரே இடத் திலேயே குவித்துவிடுகின்றன. வட ஆற்காடு மாவட்டத்தில் ஆறு கல்லூரிகள் இருந்தும், அந்த ஆறும் மாவட்டத்தின் வடபகுதி யிலேயே அமைந்திருக்கின்றன. எனவே, கல்லூரிகள் பரவலாக அமைக்கப்படுவதற்கும், தென் பகுதியிலும் இடம் பெறுவதற்கும் அரசாங்கம் வழிவகை செய்யுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அரசாங்கமே எந்த நன் கொடையையும் எதிர்பாராமல் கல்லூரி அமைக்கவேண்டுமென்று கருதினால் அமைக்கிறது. சாதாரணமாக இம்மாதிரி 5 லட்சம் நன்கொடை கொடுத்தால் அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொள்ளும் என்ற வகையில் வழிசெய்யப்பட்டிருக்கிறது. அதன்படி யார் யார் எங்கு முன் வருகிறார்களோ அங்கு கல்லூரிகள் அமைக்கப்படு கின்றன. செய்யாறிலே கல்லூரி அமைக்க வேண்டுமென்றால் கனம் அங்கத்தினர் அவர்கள் அக்கறை எடுத்துக்கொள்ளலாம்.

திரு. ம. கமலநாதன்: புதிய கல்லூரிகளில் பெண்கள் சேர்க்கப் படுவதில்லை. காரணம் கேட்டால் பெண்கள் தங்கும் விடுதி வசதி யில்லை என்று கூறிவிடுகிறார்கள். உள்ளூரிலே இருக்கக்கூடிய பெண்களையாவது சேர்த்துக்கொள்வதற்கு கனம் முதலமைச்சர் அவர்கள் உறுதியளிப்பார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பல்கலைக் கழகம் பெண்களைச் சேர்க்கவேண்டுமென்ற விஷயத்தில் தனி வசதிகள் இல்லையென்றால் அனுமதிப்பதில்லை. ஹாஸ்டல் வசதி இருக்கவேண்டும்; மற்ற வசதிகளும் இருக்கவேண்டும். கட்டட வசதிகளில்லையென்றாலும் அனுமதிப்பதில்லை.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை: உயர்நிலைப்பள்ளிகள் அதிக மாக ஏற்படுத்தப்பட்டு அதிகமான மாணவர்கள் படித்திருப்பதால் மெடிக்கல் காலேஜ், என்ஜினியரிங் காலேஜ் போன்ற கல்லூரிகளில் படிப்பதற்கு பி.யூ.சி.-க்கு மாணவர்கள் இடம் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அதற்கு தகுந்தாற்போல் பி.யூ.சி. படிப்பில் அதிகம் இடம் ஒதுக்க ஏற்பாடு செய்யப் படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கூடியவரையிலும் எவ்வளவு இடம் வேண்டுமோ அது கவனிக்கப்பட்டு வருகிறது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கல்லூரிகள் அமைக்கும் விஷயத் தில் தென் ஆற்காடு மாவட்டத்திலே இப்பொழுது அரசாங்கம் ஒரு கல்லூரியை ஆரம்பித்து நடத்திவருகிறது. அது தவிர, மாவட்டம் பூராவுக்கும் அண்ணாமலை யூனிவர்சிடி இருக்கிறது. அங்கே

30th July 1965]

படிக்கின்ற மாணவர்களுக்குப் போதிய இடவசதியில்லாத காரணத்தால் அடுத்த ஆண்டிலாவது இடவசதி ஏற்படுத்தும் வகையில், ஒரு லட்சம் அல்லது ஒன்றரை லட்சம் ரூபாய் முன்னதாகக் கொடுத்தால், விருத்தாசலம், விழுப்புரத்தில் இரு ஆண்கள் கல்லூரிகளும், கடலூரில் ஒரு பெண்கள் கல்லூரியும் அமைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா? முன்வருவதாக இருந்தால் நன்கொடை வசூல்செய்வதில் இப்பொழுதே ஈடுபடலாமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: முதலிலே ஒரு லட்சம் அல்லது ஒன்றரை லட்சம் ரூபாய் கொடுக்கலாம். ஐந்து லட்சம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டால் அரசாங்கத்தினுல் ஏற்றுக்கொள்ளப்படும்.

திரு. வை. சங்கரன்: தாசாபணன் செட்டியார் கல்லூரிக்கு இந்த ஆண்டு அனுமதி வழங்கப்படாததற்குக் காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை. தனிக்கேள்வி போட்டால் பதிலளிக்கிறேன்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: இந்தக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்படுவது, ஸைஸ்கூல்களின் தொகையை அடிப்படையாகக்கொண்டு ஆரம்பிக்கப்படுகின்றனவா அல்லது பணம் கொடுக்கிற இடத்தில் மட்டும் ஆரம்பிக்கப்படுகிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதற்கு முன்பே விடையளித்தேன். அரசாங்கம் தாமாக கல்லூரி அமைக்கவேண்டுமென்ற அவசியத்தை உணர்ந்தால் கல்லூரி அமைப்பார்கள். ஸ்தலங்களில் உள்ளவர்கள் விரும்பினுல், அதற்காக நன்கொடையளித்தால் அதுவும் கவனிக்கப்படும்.

புலவர் கா. கோவிந்தன்: சில அரசாங்கக் கல்லூரிகளில் முதல்வர்களாக இருந்த தமிழ்ப் பேராசிரியர்கள் நீக்கப்பட்டு, மற்றத் துறை ஆசிரியர்கள் முதல்வர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழ்த்துறையைச் சேர்ந்தவர்கள் முதல்வர்களாக இருக்கக் கூடாது என்று அரசாங்கம் கருதுகிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: முதல்வர்களுக்கு வேண்டிய பல தகுதிகளைப் பொறுத்து முடிவு செய்யப்படுகிறது.

திரு. ம. கமலநாதன்: உள்ளூர் பெண்கள், சென்னையிலும், சேலத்திலும் இதுபோன்ற வெகு தூரத்தில் உள்ள இடங்களுக்கு வந்து படிக்க வேண்டியிருக்கிறது. புதிதாக தர்மபுரியில் ஏற்படுத்தப் போகும் கல்லூரியை பெண்கள் கல்லூரியாக வைக்க கனம் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினர் கிருஷ்ணகிரியைச் சேர்ந்தவர். அவர்கள் தர்மபுரியில் வைப்பதுபற்றி யோசனைகள் சொன்னுல் போதாது. தர்மபுரியில் உள்ளவர்கள் அந்த யோசனை சொன்னுல் நல்லது.

[30th July 1965

திருமதி ஜெகதாம்பாள் வேலாயுதம் : பெண்களுக்கென்று உடையார்பாளையத்தில் ஒரு கல்லூரியை ஏற்படுத்தி எங்கள் தாலுகாவிலுள்ள பெண்களுக்கு படிக்க வசதி செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த ஆண்டிலே அரியலூரிலே ஒரு கல்லூரி ஆரம்பிக்கப்படுகிறது. கள்ளக்குறிச்சியில் அங்கேயுள்ள தேவஸ்தானம் ஒரு பெண்கள் உயர்நிலைப்பள்ளியை நடத்தி வருகிறது.

திரு. சா. கணேசன் : புதிதாக ஆரம்பிக்கப்படுகிற கல்லூரிகளில் கிழைநாட்டுக் கலைகள் என்று சொல்லப்படுகிற நம்முடைய பண்பாட்டுத் துறைகளுக்காக ஒரு பகுதி வைக்க வழிவகை செய்வதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறதா ? இல்லாவிட்டால் அந்த உத்தேசத்தை அரசாங்கம் இப்பொழுது மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பல்கலைக் கழகம் என்ஞல் எல்லாக் கலைகளும் சேர்ந்ததுதான். புதிதாக ஆரம்பிக்கப்படும் மதுரைப் பல்கலைக் கழகத்தில் இவற்றைச் சேர்த்துக்கொள்ளலாம். ஆனல், இப்பொழுதே, பழனி, திருவெண்காடு ஆகிய இரண்டு இடங்களிலுள்ள கல்லூரிகளில் 'ஓரியண்டல் கல்சர்' சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

திரு. சா. கணேசன் : பூம்புகார் கல்லூரியும், பழனி கல்லூரியும் ஓளவு நல்ல சேவை செய்து வருகின்றன என்பது உண்மை. பல்கலைக் கழகத்திலே இடம் இருப்பினும் இந்தக் கல்லூரிகள் இத்தத் துறை எங்களுக்கு வேண்டும். அதற்கு அஃப்லியேஷன் தரவேண்டுமென்று கேட்டால்தான் பல்கலைக் கழகம் அனுமதிக்கும். புதிதாக ஆரம்பிக்கிற கல்லூரிகளிலாவது இந்தத் துறைக்கு அஃப்லியேஷன் கேட்டால்தான் கொடுப்பது என்று இல்லாமல் இதற்கென்று ஒரு தனிப் பிரிவை அனுமதிக்க வழி செய்வார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மாணவர்கள் இதிலே சேரத் தயாராக இருந்தால் இதெல்லாம் படிப்படியாக அமைந்துவிடும்.

திரு. வி. எஸ். எஸ். மணி : ஸார், மதுரையில் ஆரம்பிக்கப்பட்டு இருக்கிற மீனாட்சி பெண்கள் கல்லூரியில் பெண்கள் ஏராளமாகப் படிக்க வருகிறார்கள். ஆனல் அவர்களுக்கு ஹாஸ்டல் வசதி இல்லை. அதற்கு ஏற்பாடு செய்ய உடனடியாக அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பெண்கள் அதிகமாகக் கல்லூரியில் சேர முன் வருகிறார்கள். அங்கு முதலில் 160 ஸ்தானங்களுக்கு அனுமதி இருந்தது. இப்போது பல்கலைக் கழகத்திடம் எடுத்துக் கூறி அவர்கள் 320 ஸ்தானங்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். ஹாஸ்டல் வசதியும் வேண்டும். ஆரம்பத்தில் அதற்கென்று புதிய ஹாஸ்டல் கட்டினுல்தான் போதிய வசதி

30th July 1965]

களுடன் இருக்கும். இப்போது கிடைக்கின்ற வீடுகளை வைத்துக் கொண்டு எந்த அளவுக்கு வசதி செய்து கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

திரு. எம். வி. கரிவேங்கடம்: தலைவர் அவர்களே, புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கிற தர்மபுரி கல்லூரியின் மொத்த எண்ணிக்கை இடங்களின் 20 சத விகிதத்தைப் பெண்களுக்கு என்று ஒதுக்க முன் வருவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பெண்களுக்கென்று ஒதுக்க வேண்டிய அவசியமில்லை. வசதிகள் இருந்தால் பல்கலைக் கழக அனுமதியின் பேரில் பெண்களையும் சேர்த்துக் கொள்ளலாம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: இப்போது உயர்நிலைப் பள்ளி இறுதித் தேர்தலில் பாஸ் பண்ணியவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் பி.யு.சி.-யில் இடம் கொடுப்பதற்கு அரசாங்கம் புதிய கல்லூரிகளை ஆரம்பிக்க உத்தேசித்திருக்கிறதா? இல்லையென்றால் வேறு எப்படி அவர்களுக்கு இடம் கொடுக்கப் போகிறார்கள்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஆண்டுதோறும் எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்கிறவர்களுடைய உயர்படிப்புக்கு வசதிகள் பெருக்கப் பட்டுத்தான் வருகின்றன. ஆனால் உயர்நிலை பள்ளி இறுதிப் பரிட்சை பாஸ் பண்ணுகிறவர்கள் எல்லோருக்கும் கல்லூரியில் வசதி செய்து தரவேண்டுமென்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. எந்த நாடும் ஏற்றுக்கொள்வதில்லை.

திரு. கரு. சிமைச்சாமி: மதுரையில் இருக்கும் அரசினர் மீனாட்சி கல்லூரி நிதிக்காக சினிமாக்காரர்கள் கிரிக்கெட் போட்டி நடந்ததா? எவ்வளவு பணம் வசூலாயிற்று?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதைப்பற்றி நானும் கனம் அங்கத்தினர் அவர்களைப் போல் கேள்விப்பட்டேன். விவரம் தெரியாது.

Sight seeing buses in District Headquarters

* 32 Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to run sight-seeing buses on Sundays and other public holidays in all the district headquarters of the State; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

திரு. வை. சங்கரன்: விடுமுறை இருக்கிற ஒரே நாளிலே முன்னேற்றத் திட்டங்கள் இருக்கும் பகுதிகள், தொழிற்சாலைகள், நீர்த் தேக்கங்கள் போன்றவற்றைச் சுற்றிப் பார்க்க வசதியாக சுற்றுலா பஸ்கள் விட்டால் வரக்கூடிய நிரிஸ்டுகள், பிற

மாவட்டத்தினர் அந்தந்த மாவட்டத்தின் முன்னேற்றத் திட்டங்களை அறிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கும் என்ற காரணத்தால் இந்த மாதிரி சுற்றுலா பஸ்களை விட அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுகின்ற யோசனை பயனுள்ளதாக இருக்கும் என்பதைப் பற்றி யாரும் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் கட்டுபடியாகாது என்பதுதான் குறை.

திரு. வை. சங்கரன்: இவ்வாறு சுற்றுலா பஸ்கள் விடுவது கட்டுபடியாகுமா இல்லையா என்பதை அறிய ஓரிரு மாவட்டங்களிலாவது பரிட்சார்த்தமாக, குறிப்பாக மதுரை மாவட்டத்தில் சுற்றுலா பஸ்களைவிட அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஒவ்வொரு முடிவையும் எடுக்கிறபோது பரிட்சை பண்ணித்தான் எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதை நான் ஒத்துக்கொள்ளவில்லை.

திரு. ம. கமலநாதன்: பஸ்கள் வைத்திருக்கிற மூதலாளிகளுக்குத்தான் நீரிஸ்ட் பஸ் விட பர்மிட் பஸ்கள் கொடுக்கப்படுகிறது. தனிப்பட்ட வர்களுக்குக் கொடுப்பது இல்லை. தனிப்பட்டவர்களுக்கும் அனுமதி அளித்தால் நமது வருவாய் அதிகரிக்கும் என்ற காரணத்தால் அவர்களுக்கும் அனுமதி அளிக்க அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: பஸ் தொழில் நடத்துகிறவர்களுக்கு அனுமதி கொடுத்தால் அவர்களுடைய பஸ் பிரேக்டவுன் ஆனாலும் ஸ்பேர் பஸ் விட முடியும். தனியாக ஒரு பஸ்ஸை வைத்திருப்பவர்களோ அல்லது காண்டிராக்ட் எடுத்து நடத்துகிறவர்களோ பிரேக்டவுனைச் சமாளிக்க முடியாது. அந்தக் காரணத்தால்தான் பஸ் தொழிலைச் செய்கிறவர்களுக்கு அனுமதி கொடுக்கிறோம்.

திரு. மு. கருணாநிதி: ஞாயிற்றுக் கிழமைகளிலும், பொது விடுமுறை நாட்களிலும் பஸ்களை விடுவதால் கட்டுபடியாகவில்லை என்கிறார்கள். பொது விடுமுறை நாட்களில் மட்டுமாவது இந்தச் சுற்றுலா பஸ்களை விட முயற்சி மேற்கொள்ளப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சென்னை நகரத்திலே அவ்வாறு விடப்படுகிறது. மற்ற இடங்களில் கட்டுபடியாகாது என்று கணக்குப் பார்த்ததிலே தோன்றுகிறது.

திரு. வை. சங்கரன்: சென்னையில் விடப்படுகின்ற சுற்றுலா பஸ்கள், குறிப்பாக மகாபலிபுரம், திருக்கழுக்குன்றம் ஆகிய இடங்களுக்கு விடப்படக் கூடிய பஸ்கள் கட்டுபடியாக, லாபகரமாக ஓடுகின்றபோது மற்ற மாவட்டங்களில் அந்த மாதிரி பஸ்கள் விட்டால் லாபகரமாக ஓடாது என்று ஏன் முடிவு செய்ய வேண்டும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சென்னை நகரத்தில் சுற்றுலா பஸ்களில் கட்டுபடியாகின்ற காரணத்தால் மதுரையிலும் கட்டுபடியாகுமென்று சொல்ல முடியாது. சென்னை நகரில் இருப்பது

30th July 1965]

கட்டுபடியாகிறது. குறிப்பாக, மகாபலிபுரம் போன்ற விசேஷ டூரிஸ்டு ஸ்தலங்களுக்கோ, யாத்திரிக ஸ்தலங்களுக்கோ போக வேண்டுமென்று சொன்னால் அந்த இடங்களுக்கெல்லாம் போக இப்போது நாம் போதிய வசதிகளை செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. கோ. சி. மணி : பஸ் கம்பெனி அல்லாத, தனியார் துறையில் ஸ்பேர் பஸ் வைத்திருப்பவர்களுக்கு டூரிஸ்ட் பர்மிட் கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் பேசுவதைப் பார்த்தால் அவருக்கு பஸ் தொழிலைப்பற்றித் தெரியாது என்று நினைக்கிறேன். தனியாரிடம் ஸ்பேர் பஸ் இருக்காது.

திரு. வை. சங்கரன் : சென்னையில் கட்டுபடியாக சுற்றுலா பஸ்கள் ஓடுகின்றபோது மற்ற மாவட்டங்களில் கட்டுபடியாகாது என்பதற்கு விளக்கமளிக்க முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதெல்லாம் பரிசீலனை செய்துதான் கைவிடப்பட்டது.

திரு. ப. உ. சண்முகம் : சுற்றுலா பஸ் பர்மிட் தனியாருக்குத் தனியாக வழங்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போதுதான் அதற்குப் பதில் சொன்னேன். தனியாருக்குக் கொடுப்பதால் சரியான சர்வீஸ் கிடையாது. அவர்களிடம் ஒரு பஸ்தான் இருக்கும். அல்லது கான்டிராக்டில் அவர்கள் பஸ் விடுவார்கள். ஆனால் பஸ் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறவர்களிடம் இரண்டு, நான்கு அதற்கு மேற்பட்ட பஸ்கள் இருக்குமாதலால் பிரேக்டவுன் முதலியவைகளை அவர்கள் சமாளித்துக் கொள்ள முடியும். நாலைந்து பஸ்களை வைத்துக்கொண்டிருப்பவர்கள் டூரிஸ்ட் பஸ் என்றே விடுவதாக இருந்தால் அது கட்டுபடியாகாது. அந்த விதமாக யாரும் எங்களிடத்தில் அனுமதியும் கோரவில்லை.

திரு. கோ. சி. மணி : ஒரு பஸ்ஸை விடுகிறவர்கள் இன்னொரு ஸ்பேர் பஸ்ஸையும் வைத்திருந்தால் அவர்களுக்கு அரசாங்கம் அனுமதி வழங்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த மாதிரி யாரும் கேட்களில்லை. அந்த மாதிரி யாரும் கேட்கவும் மாட்டார்கள்.

MR. SPEAKER : The hon. Member has put a hypothetical question.

திரு .து. ப. அழகமுத்து : சுற்றுலா பஸ்களுக்கு வரிச் சலுகை கொடுக்கப்படுகிறது. அந்த பஸ்களை விடுகிறவர்கள் கட்டணம் வசூலிக்கும்போது அதிகமாக வசூலிக்கிறார்கள். குறைந்த கட்டணத்திலே அந்த பஸ்களைவிட வேண்டுமென்று சர்க்கார் வற்புறுத்துமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : என்ன கட்டணம் வசூலிக்க வேண்டுமென்பதற்கெல்லாம் விதிகள் இருக்கின்றன. அந்த விதிகளுக்கு உட்பட்டுதான் வசூலிப்பார்கள்.

திரு. எம். வி. கரிவேங்கடம் : சுற்றுலா பஸ்களுக்கும், சாதாரண பஸ்களுக்கும் என்ன வரி விகிதம் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனிக் கேள்வி போட்டால் ஷெட்யூல் பூராவையும் மேஜை மேல் வைக்கத் தயாராக இருக்கிறேன்.

New State Transport Bus Routes

* 33 Q.—SRI K. R. SAMBANDAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any representations have been made recently, for the starting of new bus routes between Mayuram and Coimbatore (via) Mayuram, Kumbakonam, Thanjavur and Tiruchirappalli and between Mayuram and Madurai by the State Transport Department; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) There is no such proposal under consideration.

புலவர் கா. கோவிந்தன் : சில பாதைகளில் பொதுமக்கள் நன்மையை உத்தேசித்து புதிய பஸ்கள் விடப்படுகின்றன. அங்கு ஏற்கெனவே இருக்கின்ற பழைய பஸ் முதலாளிகள் தங்களுக்கு அதனால் பாதகம் ஏற்படுகிறது என்று சொல்லி வழக்குத் தொடருகிறார்கள். அதிலே அவர்களுக்குப் பாதகமாக இருக்கிறது என்று சொல்லி நீதி மன்றங்கள் புதிய பஸ்களை நிறுத்தி விடுகின்றன. இப்படிப்பட்ட நிலைமையில் சட்டம் இருக்கிறது. சட்டம் அப்படி இல்லாமல் பொதுமக்களுக்கு வசதி செய்யக் கூடிய முறையில் மாற்றியமைக்க அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த மாதிரித் தடை உத்தரவுகள் எல்லாம் ஹைகோர்ட்டால் பிறப்பிக்கப்படுகின்றன. சட்டத்தின்படி சட்ட விரோதமானது, விதிகளுக்கு மாறுனது, புறம்பானது என்று ஏதாவது காரணம் இருந்தால் அந்த விதமான தடையுத்தரவுகளைப் போடுவார்கள். அந்தந்த இடம், சூழ்நிலைகளுக்கேற்ப அந்த உத்தரவுகள் போடப்படுகின்ற காரணத்தால் இதற்குச் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டிய அவசியம் இடையாது. ஜட்ஜிடந்தான் விடவேண்டும்.

திரு. ஆ. தங்கவேலு : அரசாங்கம் விடுகிற எக்ஸ்பிரஸ் பஸ்கள் பொது மக்களுடைய வேண்டுகோளின் பேரில் விடப்படுகின்றனவா ? அல்லது அரசாங்கமே ஆலோசனை செய்து விடுகிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இரண்டும்தான்.

திரு. மு. கமலநாதன் : புதிதாக பஸ் பெர்மிட்டுகள் கொடுப்பதற்கான விதிமுறைகளை கடைப்பிடித்து வந்தது சரியல்ல என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்ததற்குப் பிறகு இப்போது என்ன விதி முறைகள் அனுசரிக்கப்பட்டு பஸ் பெர்மிட்டுகள் கொடுக்கப்படுகின்றன ?

30th July 1965]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு, விதிமுறைகள் போடக்கூடாது என்பது. அதனால் நாங்கள் விதி முறைகள் போடவில்லை.

திரு. எம். தண்டாயுதபாணி: சென்னையிலிருந்து மாயவரம், கும்பகோணம், பட்டுக்கோட்டை வழி ராமநாதபுரத்திற்கு பஸ் விடும் உத்தேசமுண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அது நோட்டிபை செய்த தாக ஞாபகம் இருக்கிறது.

திரு. க. தா. பெருமாள் ராஜு: கோவையிலிருந்து மைசூருக்கு திம்பம், தாளாடி வழியாக அரசாங்க பஸ் விட டெவலப்மெண்ட் கவுன்சிலில் இருந்து தீர்மானம் வந்திருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்தத் தகவல் என்னிட மில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா: நாகப்பட்டினத்திலிருந்து திருத்துறை பூண்டி, மன்னார்குடி, வடுவூர், தஞ்சாவூர் வழி கோவை அல்லது நாகர்கோவில் செல்லும் பஸ்ஸை விட அரசாங்கம் உத்தேசிக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்த ராஜ்யத்தில் உள்ள எல்லா இடங்களைப் பற்றியும் கேட்டால்—எனக்கு நல்ல ஞாப சக்தி இருக்கிறது என்று நினைத்து வந்திருக்கிறேன், இருந்தாலும் என்னையே மீறிப்போகிறது என்று நினைக்கிறேன்.

திரு. வை. சங்கரன்: தெற்கிலிருந்து வடக்கு வரை போகும் பஸ்களை எடுத்துக் கொண்டால் மதுரை, கோவை, திருச்சி போன்ற ஜங்க்ஷன்களில் இரண்டு ரூட்கள் சேரும்போது ஒரு ரூட்டிலிருந்து அடுத்த ரூட்டுக்கு லிங்க் செய்து விடும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கூடுமான வரை அப்படித் தான் செய்யப்படுகிறது. இன்னும் சில சட்டங்கள், விதிகள் இருக் கின்றன. தொழிலாளர்களுடைய வொர்க்கிங் அவர்ஸ் இருக் கிறது. எல்லாவற்றையும் கவனித்துத்தான் நேரம் நிர்ணயிக்கப் படுகிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: பகல் காலத்தில் தரித பஸ்கள் விடுவது போல் இராக்காலத்திலும் தரித பஸ்கள் விட சர்க்காருக்கு அபிப்பிராயம் இருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அவ்வாறு இரவு காலத்தில் தரித பஸ் விடுவதில்லை என்று முடிவு செய்திருக்கிறோம்.

திரு. அ. ராகவ செட்டி: புதிதாக கொடுக்கப்படும் ஒவ்வொரு பஸ் ரூட்டும் கோர்ட்டுக்குச் செல்லாமல் தொடர்ந்து நடத்த இயலாமல் இருக்கிறது. ஆகவே கோர்ட்டுக்குச் செல்லாமல் இருக்க ஒரு சட்டத்தைப் போட்டு எல்லோரையும் கோர்ட்டுக்கு அனுப்பாமல் இருக்க ஏதாவது ஏற்பாடு செய்வார்களா?

[30th July 1965

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சர்க்காருக்கு சரியான சர்வாதிகாரம் இருந்தால்தான் அதைத் தடை செய்ய முடியும்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை: சில பஸ் ரூட்களில் ஒரே ஓனர் பஸ் விடுவதால், மொனாப்பலி இருப்பதால் பூராவையும் கவனித்து செய்ய முடியாததால் பிரயாணிகளுக்கு சௌகரியம் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, மொனப்பலி இல்லாமல் மற்ற கம்பெனிகளுக்கும் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கூடுமானவரை மொனுப் பலி ரூட் கொடுப்பதில்லை. மொனுப்பலி ரூட்ஸ் இருக்க வேண்டாம் என்பதுதான் சர்க்கார் அபிப்பிராயம். ஆனால் சிலயிடங்களில் ஆங்காங்கு தனிப்பட்டவர்கள் நல்ல சேவை செய்திருக்கிறார்கள் என்றும் பொது மக்களிடத்தில் இருந்து எந்த விதமான புகாரும் வாலில்லை என்றும் இருந்தால் அப்போது அந்த இடங்களுக்கு மட்டும் விதிவிலக்கு கொடுக்கப்படுகிறது.

திரு. வி. எஸ். எஸ். மணி: இராக் காலத்தில் தரித பஸ்கள் விடுவதில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அண்டை மாநிலங்களில் அந்த விதமாக இராக் கால பஸ் விடப்படுகிறது. அதே மாதிரி நாமும் ஏன் விடக்கூடாது என்று சொல்வார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நம் ராஜ்யத்தில் லாரி டிராபிக் கொம்ப அதிகம். இரவு நேரத்தில்தான் லாரி டிராபிக் அதிகமாக சென்று கொண்டிருக்கிறது. அதனால் ஆக்சிடென்ட்ஸ், விபத்துக்கள் ஏற்பட்டுவிடும் என்று நினைத்து நாம் அந்த முடிவை எடுத்திருக்கிறோம்.

திரு. எம். எஸ். மணி: வருமானம் அதிகமாக தரக்கூடிய பல ரூட்களில் தனியார்களுடைய எக்ஸ்பிரஸ் பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் தேசியமாக்குகிற எண்ணம் அரசினருக்கு உண்டா? அப்படியானால் எவ்வளவு நாட்களுக்குள் அது முடியும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சட்டசபையில் இது சம்பந்தமான மான்யக் கோரிக்கை விவாதம் நடக்கிறபோது சர்க்கார் கொள்கையை விளக்கமாகச் சொன்னேன். நூற்று இருபது மைலுக்கும் அதற்கு அப்பாற்பட்டதற்குமுள்ள நீண்ட தூர பஸ்களை எல்லாம் சர்க்கார் எடுத்துக்கொள்வது என்றும் அதற்குக் குறைவாக உள்ள இடங்களில் தனியார்கள் பஸ் ஓட்ட சர்க்காருக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. அதை எடுப்பதற்கு உத்தேசமும் இல்லை.

திரு. எம். தண்டாயுதபாணி: சென்னையிலிருந்து தஞ்சைக்கு செல்லும் நான்கு பஸ்களில் ஒரு பஸ்ஸை பட்டுக்கோட்டை வரை நீட்ட அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: எழுதியனுப்பினால் பரிசீலிக்கப்படும்.

30th July 1965]

சென்னை-திருப்பதி மார்க்கத்தில் அரசாங்க பஸ்கள்

*34 கேள்வி.—திரு. கோ. சி. மணி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-ம் ஆண்டிலிருந்து நிறுத்தப்பட்ட தேதி வரையில் சென்னைக்கும்-திருப்பதிக்கும் இடையில் ஓடிக் கொண்டிருந்த பஸ்கள் எவ்வளவு?

(இ) அதனால் கிடைத்த ஒவ்வொரு ஆண்டு மொத்த வருமானம், செலவு எவ்வளவு?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Five buses were operated on the routes, Madras to Tirupathi since 1962 and five buses were kept as spares exclusively for operating on these routes.

(*b*)

	Total Collections.	Expenditure.
	RS.	RS.
1962	5,38,371	5,82,905
1963	5,36,436	5,82,905
1964 (up to 30th July 1964) ...	3,53,512	3,38,564
Total ..	14,28,319	15,04,374

திரு. கோ. சி. மணி: இந்த திருப்பதி மார்க்கத்தில் சென்று கொண்டிருந்த பஸ்களை இடையில் நிறுத்தியதற்கான காரணம் என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஆந்திரா சர்க்கார், நாம் ஒரு பஸ் ஓட்டினால் ஒரு பஸ் ஸ்பேர் வைத்துக்கொள்ள வேண்டுமென்று விதி போட்டார்கள். அதன்படி ஐந்து பஸ்கள் ஓட்ட பத்து பஸ்கள் வைக்கும்படியான நிலை ஏற்பட்டது. நஷ்டம் அதனால்தான். இன்றைக்கு ஆந்திராவிற்கு செல்கிற பஸ் இன்றே திரும்பக் கூடும் என்ற அனுமதி இருக்குமானால் அதை ஓட்டுவதில் லாபம் இருக்கும். இன்று அங்கு போகும் பஸ்ஸை அங்கே நிறுத்தி விடவேண்டும். வேறொரு பஸ்ஸைத்தான் அந்த ஊரிலிருந்து அன்றைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற ஒரு விதி இருக்கிறது. அதனால் ஐந்து பஸ்சுக்குப் பத்து பஸ்கள் வேலை செய்கிற நிலைமை இருக்கிறது. இரண்டாவதாக, இன்டர் ஸ்டேட் டாக்சில் அவர்கள் அதிகமான ஒரு சர்சார்ஜ் விதித்தார்கள். ராஜ்ய சர்க்காரின் வாதம் அந்த அதிகப்படியான சர்சார்ஜ் விதிக்கக் கூடாது, அவர்களுக்கு அப்படி விதிக்கிற அதிகாரம் இல்லை என்பது. அவ்வாறு நாம் விவாதம் செய்துகொண்டிருக்கிற போது நம் பஸ்களை அவர்கள் லீஸ் செய்து விட்டார்கள். அதனால் பஸ்ஸை நிறுத்திவிட்டோம்.

திரு. கோ. சி. மணி: நம் அரசாங்கமும் ஆந்திரா அரசாங்கமும் இது சம்பந்தமாக ஒரு பேச்சு வார்த்தை நடத்திற்றே, அதன் முடிவைப்பற்றி மத்திய அரசாங்கத்தினிடம் தெரிவித்து ஏதாவது நடவடிக்கை எடுக்க நம் அரசாங்கம் முயற்சித்ததா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்கு மத்திய அரசாங்கத்திடம் தெரிவிப்பதற்கான உத்தேசம் கிடையாது. இரண்டு மாதில அரசாங்கங்களும் லாபகரமாக ஏற்பாடு செய்து கொண்டால் அதை எடுத்து நடத்தலாம். அப்படி லாபகரமான ஏற்பாடு செய்து கொள்ளாவிட்டால் நாங்கள் பஸ் நடத்தப் போவது இல்லே.

திரு. ம. கமலநாதன் : லாபகரமாக பஸ் விடுவதற்கு என் பேச்சு வார்த்தை நடத்தி முடிவு எடுக்கவில்லே என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பேச்சு வார்த்தைகள் பயன் அளிக்கவில்லே.

திரு. எஸ். ஜே. ராமசாமி : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது ஒரு பஸ் அங்கு நின்று இன்னொரு பஸ் வந்தால்தான் அங்கிருந்து எடுத்து வர முடியும் என்று சொன்னார்கள். தனியார் கம்பெனிகள் திருப்பதிக்கு பஸ்கள் விடுகிறார்கள். அரக்கோணத்திலிருந்து போகிறது. அப்படி ஒன்றும் சங்கடமாகத் தெரியவில்லே. பஸ்கள் போய்க் கொண்டும் வந்து கொண்டும் இருக்கின்றன. அதேபோல் பஸ் விட ஏன் நம் அரசாங்கமும் ஆவன செய்யக் கூடாது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனியார்களுக்கு என்னென்ன முறையிலே லாபம் வருகிறதோ அதெல்லாம் எனக்குத் தெரியாது. சட்டபூர்வமாக கணக்குகள் வைத்துக் கொண்டு நாம் நிர்வாகத்தை நடத்துகிற காரணத்தினால் இது எங்களுக்கு நஷ்டம் என்று ஏற்பட்டு விட்டது. அந்த நஷ்டத்தால் நாங்கள் பஸ் விடவில்லே.

திரு. எஸ். ஜே. ராமசாமி : கணக்கு வைத்துக்கொண்டு நடத்துகிறோம் சட்டப்படி என்றால் தனிப்பட்ட முதலாளிகள் கணக்குகள் வைத்துக்கொள்ள மறுக்கிறார்கள் என்றுதானே பொருள்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவரவர்கள் இஷ்டம்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: சென்னை-திருப்பதிக்கு ஐந்து பஸ்கள் விட்டதாகச் சொல்கிறார்கள். திருப்பதியிலிருந்து சென்னைக்கு ஆந்திரா சர்க்கார் அதேபோல் ஐந்து பஸ்கள் விட்டு நம் அரசாங்கம் ஐந்து பஸ்கள் ஆப்பரேட் செய்வது என்ற பேச்சு வார்த்தையை நம் அரசாங்கம் ஆந்திரா அரசாங்கத்தோடு நடத்தினார்களா? அப்படி நடத்தவில்லே யென்றால் இனிமேலாவது நாம் எவ்வளவு பஸ்கள் விடுகிறோமோ அதேபோன்று அவர்களும் சென்னை நகரத்திற்கு வந்து போகிற அளவிற்குப் பஸ்கள் விட்டால் வரி விகிதத்தில் மாற்றம் இல்லாமல் விடலாம் என்பதுபற்றி நம் அரசாங்கம் அந்த அரசாங்கத்தோடு தொடர்பு கொள்ளுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தவிதமான ஆலோசனை ஆந்திரா சர்க்காரிடமிருந்து வந்தால் பரிசீலிக்கப்படும்.

30th July 1965]

திரு. மீ. கலியாணசுந்தரம் : இதை லாபகரமாக நடத்துவதற்கு நம் அரசாங்கம் ஆந்திரா அரசாங்கத்திடம் தெரிவித்த யோசனைகள் என்னென்ன ? அவைகளில் எதை ஆந்திர சர்க்கார் நிராகரித்தது ? 9-00 a.m.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் அவர்கள் நான் இதற்கு முன்பு பதில் சொன்னபோது சபையில் இல்லை என்று நினைக்கிறேன். இதைத் திரும்பவும் சொல்லுகிறேன். இங்கிருந்து போகின்ற பஸ் அன்றைய தினமே சென்னைக்குத் திரும்பி வரவேண்டும் என்று சொன்னோம். அவர்கள் அதை ஒப்புக்கொள்ளவில்லை. இரண்டாவது இங்கிருந்து போகின்ற பஸ்களுக்கு சர் சார்ஜ் போடக் கூடாது என்று கேட்டோம். அதையும் அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, முன்பு ஒரு முறை நமது தொழில் அமைச்சர் அவர்கள் அரசாங்கம் பஸ் நடத்துவது லாபத்தை மட்டும் உத்தேசித்து அல்ல, மக்களுக்கு நன்மை செய்து கொடுக்கவேண்டும் என்பதுதான் நமது குறிக்கோள் என்று இந்தச் சபையிலேயே அறிவித்திருக்கிறார்கள். அதன் பிரகாரம் திருப்பதிக்கு இரண்டு பஸ்களையாவது ஓட்டுவதற்கு அனுமதித்து, அதை நஷ்டமில்லாத, லாபகரமான முறையில் ஓட்டுவதற்கு ஏதாவது சீர்திருத்தம் செய்து பஸ்களை விடுவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம்முடைய ராஜ்யத்திற்குள்ளே இருக்கும் திருத்தணிக்கு பஸ் விடவேண்டும் என்று சொன்னால் அதைப்பற்றி ஆலோசிக்கலாம். இன்னொரு ராஜ்யத்திலிருக்கும் இடத்திற்கு நாம் நஷ்டத்திலேயே பஸ் போக்குவரத்து நடத்த வேண்டும் என்று சொல்வது எதற்காக என்று எனக்குப் புரியவில்லை.

திரு. ப. உ. சண்முகம் : அரக்கோணத்திலிருந்து திருப்பதிக்குப் போய்க் கொண்டிருக்கின்ற பஸ்கள் எல்லாம் அன்றைக்கே திரும்பி வந்துவிடுகின்றன. அப்படியிருக்கும்போது, சர்க்கார் பஸ்கள் மட்டும் அங்கேயே நிற்க வேண்டும் என்று அவர்கள் சொல்கிறார்களே அதற்கு என்ன காரணம் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : என்ன காரணம் என்று எனக்குத் தெரியாது. அது அவர்கள் போட்டிருக்கும் விதி.

திரு. எம். எஸ். மணி : இந்த மாதிரி மாநில அரசாங்கங்களுக்கிடையே தகராறுகள் ஏற்படும்போது, இதை என் மத்திய சர்க்காரிடத்தில் சொல்லித் தீர்த்துக் கொள்ளக் கூடாது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அது அவசியமில்லை.

சென்னை-தஞ்சாவூர் மார்க்கத்தில் அரசாங்க பஸ்கள்

* 35 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து தஞ்சாவூருக்கு எத்தனை சர்க்கார் பஸ்கள் விடப்படுகின்றன ?

(இ) 15—3—1965-ல் வழக்கமாக விடப்படும் பஸ்கள் விடப் பட்டனவா ?

(உ) ஆம் எனில், அவை யாவும் குறித்த காலத்தில் தஞ்சாவூர் போய்ச் சேர்ந்தனவா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) There are 8 buses on the route with 4 buses from either end.

(b) Yes.

(c) No.

திரு. ஆ. கு. சுப்பையா : ஸார், 15—3—1965 அன்று சென்னையிலிருந்து புறப்பட்ட தஞ்சாவூர் எக்ஸ்பிரஸ் பஸ், பாண்டிச்சேரி மெடிக்கல் காலேஜ் அருகில் போய் நின்றுவிட்டது. காலையில் நின்றுபோன பஸ் மாலை வரையிலும் போவதற்கு வேறு பஸ் அனுப்பப்படவில்லை. நான் அந்த பஸ்லிலேயே பிரயாணம் செய்தேன். இப்போது அமைச்சர் அவர்கள் அப்படி ஒன்றும் நடக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். இவ்விதம் இடையிலே நின்று விட்டால் உடனடியாக ஸ்பேர் பஸ் விடுவதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஸ்பேர் பஸ் விடுவதுதான் சர்க்காருடைய நடவடிக்கை, அவ்விதம் தான் செய்து கொண்டிருக்கிறது. அன்றையதினமும் ஸ்பேர் பஸ் விடப்பட்டது. ஆனால் காலதாமதமாயிற்று என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஏனென்றால், சென்னையிலிருந்து பஸ் வர வேண்டியிருந்தது.

திரு. பி. முருகையன் : சென்னையிலிருந்து தஞ்சாவூர், நாகப்பட்டினம் செல்லுகின்ற பஸ்கள் கடலூரில் சிற்றுண்டிக்காக ஒரு ஹோட்டல் சமீபத்தில் நிறுத்தப்படுகிறது. கடலூரில் 'பிருந்தாவனம்' என்ற ஹோட்டலில் பஸ்லில் வருகின்ற டிரைவர்களுக்கும் கண்டக்டர்களுக்கும் இலவசமாக (ப்ரீ) சிற்றுண்டி கிடைக்கிறது என்பதற்காக அங்கேயே நிறுத்திவிடுகிறார்கள். அதே நேரத்தில் பிரயாணிகளுக்குப் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இதை டிரைவர்கள், கண்டக்டர்கள் கவனிப்பதில்லை. இதைச் சர்க்கார் கவனித்து பிரயாணிகளுக்கு வசதியான இடத்தில் பஸ்களை நிறுத்துவதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கின்ற கேள்வி எனக்குப் புரியவில்லை. டிரைவர்களுக்கும் கண்டக்டர்களுக்கும் இலவசமாகச் சிற்றுண்டி கொடுக்கக் கூடாது என்று உத்தரவு போடச் சொல்லுகிறார்களா அல்லது எல்லா பிரயாணிகளுக்கும் பிருந்தாவனம் ஹோட்டலில் இலவசமாகச் சிற்றுண்டி கொடுக்க வேண்டும் என்று சொல்லச் சொல்லுகிறார்களா என்று தெரியவில்லை. இதெல்லாம் சிறிய அட்மினிஸ்ட்ரேஷன் காரியம். இதில் நாம் தலையிடுவது சரியல்ல.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, கடலூரில் பஸ்களை நிறுத்தும் இடத்திற்கு சமீபத்திலுள்ள ஹோட்டலில் பிரயாணிகளுக்கு சில நேரங்களில் போதுமான அளவு உணவு

30th July 1965]

கிடைப்பதில்லே. அம்மாதிரி நிறுத்தப்படுகிற இடத்தை மாற்றினால் என்ன என்று தான் திரு. முருகையன் அவர்கள் கேள்வி கேட்டார்கள். பிரயாணிகளுக்கு உணவு கிடைக்க வசதியாக இருக்கும் இடத்தில் பஸ்களே நிறுத்துவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதைப்பற்றி தனியாக கடிதம் எழுதி அனுப்பினால் சர்க்கார் அதைப்பற்றி பரிசிலீனை செய்யும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : சென்னையிலிருந்து தஞ்சாவூர், நாகப்பட்டினம், சேலம் முதலிய இடங்களுக்குப் போகின்ற பஸ்கள் சுமார் 8 இருக்கும், இவைகள் எல்லாம் கடலூரில், இந்த ஒரே இடத்தில் தான் வந்து நிற்கின்றன. சில நேரங்களில் இட நெருக்கடி காரணமாகப் பிரயாணிகளுக்குச் சரியானபடி உணவு கிடைப்பதில்லே. கனம் அமைச்சர் அவர்கள் இரண்டு வருடங்களுக்கு முன்னால் இதே சபையில் கடலூரில் தனியாக ஒரு பஸ் ஸ்டான்ட் கட்டுகிறோம், ஹோட்டல் போன்ற வசதிகளுடன் ஒரு புதிய பஸ் ஸ்டான்ட் கட்டுகிறோம் என்று 1963-ம் வருடம் பட்ஜெட் உரையில், மேஜை மீது வைத்த குறிப்பின் மீது சொல்லியிருக்கிறார்கள். இப்போது இரண்டு வருடங்களாகியும் தனியாக இந்த பஸ் ஸ்டான்ட் அமைக்கவில்லே. இதற்கு என்ன காரணம் என்பதைச் சொல்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஹோட்டல் வைக்க வேண்டும் என்று சர்க்கார் சொல்லவில்லே. பஸ் ஸ்டான்ட் கட்ட வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. நிதி வசதி கிடைத்தவுடன் பஸ் ஸ்டான்ட் அமைக்கப்படும்.

பெட்ரோல் சுத்திகரிப்பு நிலேயம்

*36 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளே : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் பெட்ரோல் சுத்திகரிப்பு நிலேயம் ஒன்று நிறுவும் திட்டம் எந்த அளவுக்கு இதுவரை நிறைவேற்றப் பட்டுள்ளது ?

(இ) மத்திய அரசாங்கம் அதற்காக ஒதுக்கியுள்ள நிதி எவ் வளவு ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The Site Selection Committee appointed by the Government of India to investigate and recommend a place for the establishment of an oil refinery in Madras State has selected the Manali village near Madras for the establishment of the oil refinery. The lands are under acquisition.

(*b*) This Government have no further information.

[30th July 1965

Shortage of diesel oil

*37 Q.—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR :
SRI V. SANKARAN :
SRI K. CHEEMAICHAMY :
SRI K. S. MANI :
} Will

the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government are aware of the shortage in the supply of diesel oil for running transport vehicles in the State; and

(*b*) if so, the action taken theron?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) Meetings with the representatives of the Oil Companies have been held frequently and according to the latest decision, the State Government will indicate to the Oil Companies the areas of shortage and ask the companies which have stocks to move them to such areas. When the stocks reach the destination the Collector will indicate the manner of distribution. To facilitate smooth working, the Collectors periodically meet Sales Representatives of all the Companies and arrive at workable arrangements.

திரு. சா. கணேசன் : டீசல் வகையரு கிடைக்காத காரணத்தால் கிட்டத்தட்ட 60 சதவிகிதம், 65 சதவிகிதம் வரையில் லாரிகள், பஸ்கள் ஓட முடியாத நிலை இருந்தது நம் எல்லோருக்கும் தெரியும். இந்த நிலையில் லாரி சொந்தக்காரர்கள், பஸ் சொந்தக்காரர்கள் இவர்களுக்கு நஷ்டம் ஏற்படாத வகையில் குறைந்த பட்சம் கட்டணத் தொகையில் 50, 60 சதவிகிதம் அளவுக்கு ஈடு செய்து கொள்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தளவிற்கான உத்தேசம் எதுவுமில்லை.

திரு. கரு. சீமைச்சாமி : லாரி, டீஸல் எண்ணெய் பஸ்கள், லாரிகள் இவைகளுக்குக் கிடைக்காததோடு மட்டுமல்ல, விவசாயிகளுக்கு பம்புசெட்டுகளுக்கு டீசல் எண்ணெய் கிடைக்காததின் காரணமாக, லட்சக்கணக்கான ரூபாய்கள் சேதம் ஏற்பட்டிருக்கிறது. டீசல் வருகிறது, கப்பலில் வருகிறது என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தார்களே தனிர விவசாயிகளுக்குத் தேவைப்பட்ட நேரத்தில் வாங்க முடியவில்லை. ஆகவே, விவசாயிகளுக்கு எளிதான முறையில் டீசல் எண்ணெய் கிடைப்பதற்கு எதாவது ஏற்பாடு செய்ய முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : டீசல் எண்ணெய் கிடைக்காமல் இருந்தது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். விவசாயிகளுக்கும் சரி, இண்டஸ்ட்ரியலிஸ்ட்களுக்கும் சரி, பஸ் ஆப்ரேட்டர்களுக்கும் சரி, டீசல் எண்ணை கிடைப்பதற்கு வேண்டிய எல்லா முயற்சிகளையும் அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது.

30th July 1965]

திரு. வை. சங்கரன்: திடீரென்று இந்த நெருக்கடி அல்லது பற்றாக்குறை ஏற்படுவதற்கு உண்மையான காரணம் என்ன என்பதை சர்க்கார் விளக்க முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்தத் தகவல் மத்திய சர்க்காரிடத்தில் தான் உண்டு.

திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, டீசல் எண்ணெய்க்குப் பஞ்சம் ஏற்பட்டதின் காரணமாக, லாரிகள், பஸ்கள் இவைகள் மண்ணெண்ணெயை உபயோகித்ததன் காரணமாக மண்ணெண்ணெய்க்கும் பஞ்சம் ஏற்பட்டது என்று சொல்லப்பட்டது? அதல்லாமல் மண்ணெண்ணெய் கிடைக்காமல் இருந்ததற்கு வேறு என்ன காரணம்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: மண்ணெண்ணெய்யைக் கலந்து உபயோகித்து லாரிகள், பஸ்கள் ஓட்டலில் அவர்களே ப்ரொவிக்யூட் செய்யலாம் என்று விதிகள் இருக்கின்றன. சட்ட பூர்வமாக அவ்விதம் மண்ணெண்ணெய்யைக் கலந்து உபயோகிக்கக் கூடாது. அந்த நேரத்தில் மண்ணெண்ணெய் கிடைப்பது குறைவாக இருந்தது என்று காரணம் சொல்லப்பட்டது.

திரு. எம். தண்டாயுதபாணி: குறிப்பாகத் தஞ்சாவூர் ஜில்லாவில் டிராக்டர்களுக்கு டீசல் எண்ணெய் போட வேண்டும் என்றால் பங்க்-களுக்குக் கொண்டு வந்தான் எண்ணெய் போட வேண்டும் என்று நிர்ப்பந்தம் இருக்கிறது. இதனால் விவசாயிகளுக்குப் பல கஷ்டங்கள் இருக்கின்றன. ஆகவே, இந்த விதியை மாற்றி ஒவ்வொரு டிராக்டருக்கும் இத்தனை காலன் என்று நிர்ணயித்து அதைப் பங்க்-கில் கொடுப்பதற்குச் சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: டீசல் எண்ணெய்யை தனியாக விற்கலாம் என்று சொல்லிவிட்டால், அதை தனியாக வாங்கிக் கொண்டு போய் வேறு விதியில் விற்றுவிடக் கூடும். அதற்காக நேராக வண்டியைக் கொண்டு வந்து எடுத்துக் கொண்டு போக வேண்டும் என்று விதி செய்யப்பட்டிருக்கிறது.

திரு. மு. கருணாநிதி: லாரிகளுக்கு மண்ணெண்ணெய்யை உபயோகித்தால் ப்ராசிக்யூட் செய்யலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு 100-க்கு 90 லாரிகளும் மண்ணெண்ணெய்யைக் கலந்து உபயோகித்தகான் ஓடுகின்றன. ஆகவே அரசாங்கத் தரப்பிலிருந்தே இதைக் தடுக்கின்ற முறையில் தக்க நடவடிக்கை எடுக்க முயலுவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இதைப் பற்றி பண்டை காலமும் கஷ்டம். லிவ்வொரு லாரியையும் நிறுத்தி அதனுடைய டாங்கிலுள்ள எண்ணெயை எடுத்துப் பரிசோதனை செய்ய வேண்டும். அதில் எத்தனை சதமானம் மண்ணெண்ணெய் சேர்க்கப் பட்டிருக்கிறது என்பதைக் கண்டறியவேண்டும். இப்படிப்பட்ட கஷ்டங்கள் இருக்கின்றன. ஆனால் நல்ல ஊர்ஜிதமான தகவல் கிடைத்தால், விதிகளின்படி எவ்விதம் நடவடிக்கை எடுக்கலாம்

வேண்டுமோ அவ்விதம் நடவடிக்கை எடுப்பதற்குச் சர்க்கார் தயாராக இருக்கிறது.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இதைப் பரிசோதிப்பது கஷ்டம் என்று சொன்னார்கள். பாலில் கலக்கப்பட்ட தண்ணீரை அதிகாரிகள் பரிசோதித்து நடவடிக்கை எடுக்கிறார்களே அந்த மாதிரி ஒன்றிரண்டு பஸ்களையாவது பிடித்து நடவடிக்கை எடுத்தாலேயே மற்ற லாரி, பஸ்காரர்கள் பயப்படுவார்கள், அதனால் நல்ல முடிவு ஏற்படும் என்று அரசாங்கம் கருதுகிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஒன்றிரண்டு நடவடிக்கை கள்கூட எடுக்கப்படவில்லை என்று என்னால் சொல்ல முடியாது. இது போன்ற ரிப்போர்ட்டுகள் என்னிடத்திலும் அதிகாரிகளிடத்திலும் வந்துகொண்டிருக்கின்றன. பல இடங்களில் பரிசோதனைகள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பரிசோதனைகளையும் நடத்துவார்கள் என்று நம்புகிறேன்.

திரு. சா. கணேசன்: திடீரென்று இப்படி டீசல் பஞ்சம் வருவதற்கு உண்மையான அடிப்படைக் காரணம் என்ன என்று தெரிவிப்பார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அது மத்திய சர்க்காரிடத்தில் இருக்கிற தகவல் என்று நான் மூன்றேயே சொன்னேன்.

திரு. கரு. சிமைச்சாமி: ஸார், டீஸல் போடவேண்டுமென்று சொன்னால் பெட்ரோல் பங்குக்கு லாரி, பஸ் அல்லது டிராக்டராக இருந்தால் அவைகளைக் கொண்டு வந்து வாங்கலாம். ஆயில் என்ஜினுக்கு டீஸல் வேண்டுமென்றால் அதை எப்படித் தூக்கிக் கொண்டு போவது? டீஸல் என்ஜினுக்கு ஆயில் வேண்டுமென்று பெட்ரோல் பங்கில் போய்க் கேட்டால் கொடுக்கமாட்டேன் என்று சொல்லுகிறார்கள். இதற்கு ஒரு ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்தப் பஞ்சம் தீர்ந்தால் கஷ்டமெல்லாம் தீர்ந்துவிடும். இந்தப் பஞ்சம் தீர வழிகளையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதிக டீஸல் இறக்குமதி செய்ய ஏற்பாடு ஆகிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

திரு. கே.ஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்: பம்ப் செட் இயங்கவில்லை என்றால் விவசாய அபிவிருத்தி தடைபடுகிறது. தற்காலிகமாகவாவது கிடைப்பதற்கு ஏதாவது வழி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு.)

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் அங்கத்தினர் டீஸல் கிடைக்காமல் இருப்பதற்கு பரிகாரம் செய்யப்படுமா என்று தான் கேட்கிறார். கலெக்டர் அவர்களைப் பார்த்தால் அந்தந்தப் பகுதிகளில் உடனடியாக நிவாரணம் கிடைக்க வழி இருக்கிறது.

திரு. எம். எஸ். மணி: ஸார், திருச்சி மாவட்டத்தில் ஓடுகிற லாரிகள், பஸ்கள் அத்தனையிலும் டீஸலோடு மண்ணெண்ணெய் கலந்து ஓட்டுகிறார்கள் என்பது நிச்சயமாகத் தெரியும். இதைக்

30th July 1965]

கண்டுபிடிப்பதற்கு ஒரு வழி இருக்கிறது. டீஸலுக்கு வெய்ட் அதிகமாக இருக்கும். மண்ணெண்ணெய்க்கு வெய்ட் குறைவாக இருக்கும். இதை வைத்துக் கொண்டு பார்த்தால் சுலபமாகக் கண்டு பிடித்து விடலாம். அந்த மாதிரி முறையை அனுசரித்துக் கண்டு பிடிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்தத் தகவலைத் தனியாக எழுதி அனுப்பினால் அதோடு பெயரையும் சேர்த்து எழுதி அனுப் பினால், பெயரை வெளியிடாமல் நான் பார்த்துக் கொள்ளுகிறேன், வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுகிறேன் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. மு. சண்முகம் : டீஸல் எண்ணெய் பற்றுக்குறைக்குக் காரணம் மத்திய அரசாங்கத்திற்குந் தான் தெரியும் என்று கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். பற்றுக்குறை நம் மாநிலத் தில் இருக்கிறவர்களைப் பாதிக்கும் போது அதற்கான காரணத்தை கண்டுபிடித்து நம் அரசாங்கம் பரிகாரம் தேட வேண்டும் என்ற கவலை கொள்ள வேண்டாமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கவலை எடுத்துக் கொள்ளா விட்டால் இத்தனை நேரம் நம் ராஜ்யத்தில் டீஸல் கிடைக்கும் நிலை ஏற்பட்டிருக்காது. என்ன நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமோ எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். காரணம் என்ன என்று இந்தச் சர்க்காருக்கு நேரடியான தகவல் கிடையாது அதனால் காரணம் என்ன சொல்ல முடியாது என்று கூறினேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : காரணங்கள் சம்பந்தப்பட்ட வரையிலாவது நமது அரசாங்கத்திற்குத் தகவல் இல்லாமல் போகட்டும். இந்த மாதிரி பற்றுக்குறை இருக்கிறது என்றாவது மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவித்தார்களா ? எவ்வளவு நம் ராஜ்யத்திற்கு மாதம் ஒன்றுக்கு ஒதுக்கப்படுகிறது ? குறைந்த தற்குக் காரணம் என்ன என்று கேட்டார்களா ? அதிகமாக ஒதுக்க வேண்டும் என்றாவது கேட்டார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினருடைய கேள்வியில் மாறி, மாறி இரண்டு பகுதிகள் இருக்கின்றன. ஒரு பகுதி சரி, ஒரு பகுதி இல்லை. மத்திய சர்க்காருக்கு இந்த ராஜ் யத்தில் பற்றுக்குறை இருக்கிறது என்று தெரிவித்தார்களா என்று கேட்டால் 'ஆம்'. இந்த ராஜ்யத்திற்கு அதிகப்படியான அளவு எண்ணெய் ஒதுக்கப்பட வேண்டும் என்று கேட்டார்களா என்றால் அதற்கும் 'ஆம்'. என்ன காரணத்தினால் பற்றுக்குறை என்று கேட்டார்களா என்றால் 'இல்லை'.

திரு. கரு. சீமைச்சாமி : ஸார், டீஸல் ஆயில் பம்ப்செட்டுக்கு கலெக்டரைப் பார்த்தால் வேண்டியதைச் செய்வார்கள் என்று சொன்னார்கள். உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு டீஸல் பம்ப்செட்டுகள் அவசியம் என்பது எல்லோருக்கும் தெரியும். இதற்கு உடனடியாக ஏற்பாடு செய்தால் நல்லது. என்ன ஏற்பாடு செய்யப் போகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

[30th July 1965

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நான் என்னுடைய முதல் பதிலிலேயே சொன்னேன்.

'To facilitate smooth working, the Collectors are asked to periodically meet the representatives of the companies and arrive at workable solutions'. என்று.

இதில் ஏதாவது கஷ்டம் இருக்குமானால் கலெக்டரிடத்தில் சொன்னால் ஓரளவுக்குத் தீர்த்து வைக்க ஏற்பாடு செய்வார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், நம்முடைய ராஜ்யத்திற்கு ஒதுக்கியது போதவில்லை என்று தெரியப்படுத்தினேம் என்று கூறினார்கள். நம் ராஜ்ய மாதாந்திரத் தேவை என்ன---மண்ணெண்ணெயும், டீஸலும்? நமக்கு வருவது எவ்வளவு குறைவாக இருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்கு ஒரு தனிக் கேள்வி போட்டால் எல்லா வருஷங்களுக்கும் புள்ளிவிவரங்கள் சேர்த்துக் கொடுக்க முடியும். ஏனென்றால், இது வருஷத்துக்கு இவ்வளவு என்றும் ஒதுக்கும் கம்மாடிட்டி அல்ல. கன்ட்ரோல் இல்லாமல் ஃப்ரீயாக வரும் கம்மாடிட்டி. தனிக் கேள்வி போட்டால் வேண்டிய விவரங்களைச் சேகரிக்கலாம்.

திரு. எம். எஸ். மணி : சில பஸ் முதலாளிகள் டீஸலுக்குப் பதிலாகப் புதிய மஞ்சள் மண்ணெண்ணெயை உபயோகிக்கிறார்கள். அதனால் தான் மண்ணெண்ணெய் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது என்று அரசாங்கம் அறியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதனால் தான் அந்தத் தகவலைத் தனியாக எழுதிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டேன். அது சர்க்காருக்கு உபயோகமாக இருக்கும். தவறுகள் நடக்கும் இடத்தைக் கண்டுபிடித்தால் பற்றுக்குறையில் ஒரு பகுதியைத் தீர்க்க முடியும்.

திரு. சி. பொன்னுசாமி : டீஸல், மண்ணெண்ணெய் பஞ்சம் மாநில சர்க்காரும் மத்திய சர்க்காரும் எடுத்துக் கொள்ளும் முயற்சிகளினால் சீக்கிரமே தீர்ந்து போகும் என்று நமது சர்க்கார் நம்புகிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அது தான் நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். மத்திய சர்க்காருடன் பேசி, மத்திய சர்க்கார் அதிகாரிகள் இந்தச் சர்க்காருடன் கலந்து பேசியிருக்கிறார்கள். எவ்வளவு அதிகமாக அனுப்ப முடியுமோ அதற்கு முயற்சி எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. முனு ஆதி : டீஸல் எண்ணெய்யில் கலப்படம் இருப்பதாக புகார்கள் வருவதால், அரசினர் நடத்தும் இண்டியன் ஆயில் கம்பெனி தவிர மற்ற தனிப்பட்டவர்கள் டீஸல் எண்ணெய் விற்பனைத் தடுத்து சர்க்கார் ஆயில் கம்பெனி மட்டும் விற்க ஏற்பாடு செய்வார்களா?

30th July 1965]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த அதிகாரம் இந்தச் சர்க்காருக்கு இல்லை.

திரு. ம. கமலநாதன் : இந்த டீஸல் பற்றுக் குறையினால் சில நாட்கள் வண்டிகள் ஓடாமல் இருக்கிற காரணத்தினால் அந்த வீதப் படி அவர்களுக்கு வரிச் சலுகை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவர்கள் வரி செலுத்து வதற்கு அவகாசம் கொடுத்தது. அங்கத்தினர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். இந்த மாதம் 15-ம் தேதிக்குள் கட்ட வேண்டுமென்று இருந்ததை 30 அல்லது 31-ம் தேதிக்குள் கட்ட லாம் என்று கொடுத்தோம். ஆனால் வரிச் சலுகை கொடுப்பதாக உத்தேசம் இல்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கேட்கப்பட்ட கேள்விகளி லிருந்தும் கொடுக்கப்பட்ட அமைச்சர் அவர்களுடைய பதில்களி லிருந்தும் இப்போது ஏற்பட்ட நெருக்கடிக்குக் காரணம் பஸ்களிலும் லாரிகளிலும் மண்ணெண்ணெய் கலந்து உபயோகப் படுத்தியது தான் என்று அர்த்தமா? பஸ்களிலும், லாரிகளிலும் மண்ணெண்ணெய் கலந்து உபயோகப்படுத்தினார்களென்றால் டீஸல் விலை குறைந்து அல்லவா இருக்க வேண்டும், உயர்ந்து கொண்டே போயிற்றே? சமீபத்தில் ஏற்பட்ட நெருக்கடிக்குக் காரணம் இண்டியன் ஆயில் கம்பெனி ஏற்பட்டதால் தனிப்பட்ட கம்பெனிகள் ஸ்டாக்கைப் பதுக்கி வைத்து சப்ளை செய்யவில்லை என்பது உண்மையா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் சொல்லிய தகவலை என்னிடம் உள்ள பல தகவல்களுடன் சேர்த்து எடுத்துக் கொள்கிறேன். எனக்கு அந்தத் தகவல் இல்லை.

New Taluk in Madurai district

* 38 Q.—SRI S. NANJUNDA ROW : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is any proposal to constitute a separate taluk comprising of Vedasandur, Eriyodu, Palayam and Vadamadurai firkas in Madurai district; and

(*b*) if so, the details therof?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes. There is a proposal under the consideration of the District Revenue Officer, Madurai.

(*b*) Consequent on the introduction of ryotwari settlement in Madurai district, proposals for the revision of the administrative set up are under the consideration of the District Revenue Officer, Madurai. One of the proposals is to bifurcate the existing Dindigul taluk into two taluks, viz., Dindigul and Vedasandur. According to the proposal the new taluk, viz., Vedasandur will consist of Kottanatham, Palayam, Vedasandur, Eriyodu and Vadamadurai firkas.

MR. SPEAKER.—* Question No. 39 stands postponed.

ஆடுதுறை தொகுதியில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்

*40 கேள்வி.—திரு. கோ. சி. மணி: கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-ம் வருடத்திலிருந்து இன்று வரை ஆடுதுறை தொகுதியில் துவக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை ?

(இ) அவற்றுல் கொடுக்கப்பட்ட கடன் எவ்வளவு ?

(உ) வசூலிக்கப்பட்ட, மற்றும் வசூலிக்கப்படவேண்டிய தொகைகள் எவ்வளவு ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார்: (அ) 1962-லிருந்து ஆடுதுறைத் தொகுதியில் ஏழு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(இ) இந்த ஏழு சங்கங்களும் 1962-லிருந்து ரூ. 1,42,865 வரை கடன் வழங்கியுள்ளன.

(உ) இச் சங்கங்களுக்குச் சேரவேண்டிய வசூல் பாக்கி ரூ. 90,260-ல் இதுவரை ரூ. 73,829 வசூலாகியுள்ளது. 15,074 ரூபாய் மதிப்புள்ள கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக கால நீட்சி கொடுக்கப்பட்டுள்ளது. வசூலாகாமல் பாக்கியாயுள்ள தொகை ரூ. 1,357.

திரு. கோ. சி. மணி: கனம் தலைவர் அவர்களே, இந்த சங்கங்களில் ஓவர் டியூஸ் இருக்கிற காரணத்தினுல் புதியதாகக் கடன்கள் வழங்கப்படவில்லை என்ற தகவல் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார்: பொதுவாக சங்கங்கள் வாங்கிய கடன் தொகையைத் திருப்பிக் கொடுத்தால் தான் திரும்பவும் அவர்களுக்குக் கடன் கொடுக்க வசதியாக இருக்கும். கடனைத் திருப்பிக் கொடுக்கவில்லை என்றால், ரிசர்வ் பாங்கும் சென்டிரல் பாங்கும் மறுபடியும் கடன் கொடுப்பதற்கு தடைபோடுவதால் சில சிரமங்கள் ஏற்படுகின்றன. இருந்தாலும் அத்தியாவசியம் ஏற்படும்பொழுது, அதைப் பார்த்து கவனித்துச் செய்யவேண்டும்.

திரு. கோ. சி. மணி: ஒரு சங்கத்தில் 50 அங்கத்தினர்கள் கடன் வாங்கி இருந்தால், அதில் 40 பேர்கள் கடன் தொகையைத் திருப்பி கட்டியிருந்தாலும், அதில் 10 பேர்கள் திருப்பிச் செலுத்தாமல் இருக்கிற காரணத்தினுல், ஓவர்டியூஸ் அந்த சங்கத்தில் இருக்கிறது என்று கருதி, மற்ற அங்கத்தினர்களுக்கும் கடன் கொடுக்காமல் இருக்கும் தகவல் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? அதாவது, சென்டிரல் பாங்கு கடன் வழங்குகிறது. பணம் பாக்கி இருந்தால் மறுபடியும் கடன் கொடுக்கக்கூடாது என்று கடன் கொடுப்

30th July 1965]

பதை நிறுத்திவைத்து உத்தரவு போடுகிறார்கள். அப்படிப் பட்ட தகவல் ஏதாவது அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார்: சென்டிரல் பாங்கு கடன் கொடுக்கிறார்கள். சென்டிரல் பாங்குக்கு சொஸைடிகள் கடனைத் திருப்பிக் கொடுத்தால் தான் அவர்கள் அந்தப் பணத்தை வைத்து நிர்வாகத்தை நல்ல முறையில் நடத்த முடியும். ஆகவே தான், சென்டிரல் பாங்கு இதுபோன்ற கண்டிஷன்ஸை வைத்திருக்கிறார்கள்.

திரு. பி. கே. மூக்கையா தேவர்: மத்திய பாங்கு கடனை வசூலிப்பதற்கு இம்மாதிரி நிபந்தனைகள் போடுகிறார்கள். விவசாய அபிவிருத்தியை முன்னிட்டு, இனிமேலாவது இம்மாதிரி நிபந்தனைகளை மத்திய பாங்கு விதிக்காமல் இருப்பதற்கு அரசாங்கம் உத்தரவிடுமா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார்: மத்திய பாங்கு இதைப் போல இருக்கக்கூடிய சில கண்டிஷன்ஸ் விதிப்பது தான் நல்லது.

கனம் சபாநாயகர்: ஓவர் டியூ பணத்தை கலெக்ட் பண்ணமல் இருக்கும்படி உத்தரவு போடுவது என்றால், பின்னால் எப்படிப் பணம் வரும்? நிர்ப்பந்தம் ஏதாவது வேண்டாமா?

கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—PRIVILEGE MATTERS

(1) Delay in placing the Rules framed by the Rural Development and Local Administration and the Revenue Departments on the Table of the House.

MR. SPEAKER: The hon. Member Sri M. Kalyanasundaram has given notice of a privilege matter regarding the delay in placing the rules framed by the Rural Development and Local Administration and Revenue Departments on the Table of the House.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, நான் இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது இந்தச் சபையின் முன் வைக்கக்கூடிய விதிகள் சம்பந்தமாக ஏற்படக்கூடிய காலதாமதத்தைப் பற்றியது. இரண்டு உதாரணங்களை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஒன்று ஆர்.டி.எல். ஏ. இலாகாவினுடைய பஞ்சாயத்து தற்காலிக தலைவர்கள் சம்பந்தமாக வெளியிட்டுள்ள விதிகள். அந்த விதிகள் மார்ச்சு மாதம் 4-ம் தேதி அரசாங்க உத்தரவின் மூலம் பிறப்பிக்கப் பட்டு, மார்ச்சு 4-ம் தேதியன்றே கெஜட்டில் வெளியிடப்பட்டுள்ளன. அந்த விதிகள் தற்காலிக தலைவர்களுடைய அதிகாரம், கடமை

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [30th July 1965

களைப் பற்றியது. தற்காலிக தலைவர்களுடைய பொறுப்பே ஏப்ரல் மாதத்தில் முடிவடைந்து விடுகிறது. இந்தி எதிர்ப்புக் கலவரத்தின் காரணமாக பஞ்சாயத்துத் தலைவர்கள் தேர்தல் ஒத்தி வைக்கப் பட்டது. ஏப்ரல் மாதம் வரைக்கும்தான் இந்தத் தற்காலிக தலைவர்களுடைய பொறுப்பு இருக்கும். இந்த முறை எதோ ஒன்று இரண்டு மாதங்கள் நீடிக்கவேண்டியிருந்தது. இந்த சமயத்தில் மின்சாரக் கட்டணம் கட்டுவது போன்ற சில அவசியமான செலவுகள்கூட செய்யமுடியாத நிலைமை ஏற்பட்டு, பல இடங்களில் மின் சாரத்தைக்கூட நிறுத்திவிட்டார்கள். அவ்வளவு முக்கியமான ஒரு உத்தரவு இது. அது போதுமானதா, இல்லையா, இன்னும் அவை களைத் திருத்தி அமைக்கவேண்டுமா என்பதைப்பற்றியெல்லாம் அபிப்பிராயங்கள் இருக்கின்றன. அந்த விதிகளைத் திருத்துவதற்கு இந்தச் சபைக்கு அதிகாரம் உண்டு, உரிமை உண்டு. இந்த விதிகள் இந்தச் சபையின் முன்பு எப்பொழுது கொண்டுவரப் படுகிறது? ஜூன் 10-ம் தேதியன்று தான் அசெம்பளி இலாகாவுக்கு அனுப்பப்படுகிறது. அசெம்பளி இலாகாவில் காலதாமதம் ஆகவில்லை என்று நான் நேரடியாக விசாரித்துத் தெரிந்து கொண்டு விட்டேன். ஜூன் 21-ம் தேதி அசெம்பளி இலாகாவினர் அங்கத்தினர்களுக்கு தபால் மூலம் இந்த விதிகளை அனுப்பி வைத்திருக்கிறார்கள். ஏப்ரல் மாதம் 30-ம் தேதிக்குப் பிறகு அவசியம் இல்லாத விதிகளை ஜூன் 21-ம் தேதியன்று இந்தச் சபைக்கு அனுப்பி என்ன பிரயோசனம்? இந்தச் சபைக்கு விதிகளை அனுப்பவேண்டும் என்பது ஒரு சடங்குக்காக அனுப்புவதா? அமாவாசை தர்ப்பணம் செய்வது மாதிரி இந்தச் சபையை நடத்துவது சரியா? இந்தச் சபையின் அங்கத்தினர்கள் விரும்பினால், விதிகளுக்குத் திருத்தம் கொண்டுவந்து, விதிகளை மாற்றுவதற்கு அதிகாரம் இச்சபைக்கு உண்டு. அப்படி இருக்கும் பொழுது விதிகளுக்கு அவசியம் இல்லாத சமயத்தில் விதிகளை இந்தச் சபையின் முன்னால் வைப்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது? மார்ச்சு மாதம் 31-ம் தேதி வரைக்கும் இந்தச் சபை நடந்து கொண்டிருந்தது. மார்ச்சு மாதம் 1-ம் தேதி வெளியிடப் பட்ட விதிகளை மார்ச்சு 8, 10 தேதிக்குள்ளாவது இந்தச் சபையின் முன்பு வைத்திருந்தால், முறையாக இருக்கும். அப்படி வைத்திருக்க முடியும். இந்தச் சபையை இலாகாவினர் எவ்வளவு தூரம் மதிக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு உதாரணம். இது சாதாரண விஷயம் அல்ல. அரசாங்கத்திற்கு சட்டத்தின் மூலம் சில அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பிறப்பிக்கப்படும் விதிகளுக்கு, சட்டத்திற்கு எவ்வளவு அந்தஸ்து இருக்கிறதோ, அவ்வளவு அந்தஸ்து உண்டு. அந்த விதிகளைத் திருத்துவதற்கு இந்தச் சபைக்கு அதிகாரம் இருக்கிறது. அப்படியிருக்கும் பொழுது இந்த விதிகளை இவ்வளவு அலட்சியம் செய்யலாமா? சாதாரண ஒரு கடிதம் போல இறைக் காலம் தாழ்த்தி சபைக்கு அனுப்பிவைக்கலாமா? இந்தச் சபைக்கு இலாகாவினர் எவ்வளவு தூரம் மரியாதை வைத்திருக்கிறார்கள் என்பதைத் தான் இது வெளிக்காட்டுகிறது.

30th July 1965] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

அடுத்தபடியாக, செவின்யூ இலாகாவினர் பிறப்பித்த இனம் சட்டங்களின் கீழ் விதிகள். எப்பொழுது இந்த விதிகள் பிறப்பிக்கப்பட்டன? ஒன்றரை வருஷ காலம் கழித்து பிறப்பிக்கப் பட்டன. இவ்வளவு காலம் இலாகாவினர் அசிரத்தையாக இருந்திருக்கின்றனர். இதற்கு முன்பே நான் இந்தச் சபையில் ஒரு முறை இதைப்பற்றிக் கூறியிருக்கிறேன். அதன் பிறகு பிப்ரவரி 15-ம் தேதி இந்த விதிகள் பிறப்பிக்கப்பட்டன. பிப்ரவரி 15-ம் தேதி, 16-ம் தேதி அந்த விதிகள் கெஜட்டில் பிரசுரிக்கப்பட்டு, வெளியிடப்பட்டன. ஜூலை மாதம் அசெம்பிளி டிபார்ட் மெண்டிற்கு அனுப்பியிருக்கிறார்கள். அங்கத்தினர்கள் விரும் பினால் இப்பொழுது தான் அந்த விதிகளுக்கு ஏதாவது திருத்தம் கொடுக்க முடியும். விதிகள் பிறப்பிப்பதற்கு 1½ வருஷம். சட்ட சபைக்கு அவைகளை அனுப்பி வைப்பதற்கு மூன்று மாதங்கள். இதற்கு இவ்வளவு காலதாமதம் ஆகவேண்டிய காரணம் என்ன? விதிகள் பிறப்பிக்கப்பட்ட உடனேயே அவைகள் சட்டசபைக்கு அனுப்பிவைக்கப்பட்டால், அந்த விதிகளை அங்கத்தினர்கள் காலாகாலத்தில் படித்து, அவசியமாக இருந்தால், அவைகளுக்கு திருத்தங்கள் கொடுப்பதற்கு சாத்தியமாக இருக்கும். இது ஒரு முறை அல்ல, இரண்டு முறை அல்ல. இதற்கு முன்பும் இம்மாதிரி காலதாமதம் ஆவதுபற்றி சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. இருந்த போதிலும், அரசாங்கத் துறையினரிடத்தில் எந்தவிதமான அபி விருத்தியும் இந்த விஷயத்தில் ஏற்படவில்லை என்பதை இந்த நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டுகின்றன. இதற்கு இன்னும் பல உதாரணங்கள் நான் கொடுக்க முடியும். விதிகள் பிறப்பிக்கப் பட்ட உடனேயே சட்டசபைக்கு அவைகளை அனுப்பிவைக்க வேண்டும் என்ற கவலை அரசாங்கத் துறையினருக்குக் கிடையாது. ஏதோ சட்டசபை என்பது வேண்டாத ஒரு சங்கடமான சடங்கு என்று கருதக்கூடாது. சட்டசபைக்கு விதிகளை உடனுக்குடன் அவசியம் அனுப்பிவைக்கவேண்டும் என்ற உணர்வு அரசாங்கத் துறையினருக்கு சொம்பக் குறைவாக இருக்கிறது. அரசாங்கத் துறையினரைக் கைவிடக்கூடாது, அவர்கள் மீது குறை கூறக் கூடாது, எதிர்க்கட்சியினர்கள் இப்படிக் கூறுகிறார்கள் என்ற எண்ணம் அமைச்சர்களுக்கு இருக்கக்கூடாது. அமைச்சர்கள் தான் இதற்குப் பொறுப்பு ஏற்கவேண்டும். அமைச்சர்கள், சட்டசபையை மதிக்கவேண்டும் என்ற எண்ணத்தை எந்த அளவுக்கு அதிகாரிகளிடையே உண்டாக்குகிறார்களோ, அந்த அளவுக்குத் தான் அதிகாரிகளுக்குச் சபையின் மீது மரியாதை ஏற்படும். சபைக்கு செய்யவேண்டிய கடமையை குறித்த காலத்தில் தவறாமல் செய்யவேண்டும் என்ற கவலை அரசாங்கத் துறையினருக்கு ஏற்படும். அதற்காகத்தான் இந்தப் பிரச்னையை இந்தச் சபை முன்பு நான் கொண்டுவந்திருக்கிறேன். சபார்டினேட் லெஜிஸ்லேஷன் கமிட்டிகூட இந்த விதிகள் பிறப்பிப்பது பற்றி பல சிபார்சுகளைச் செய்திருக்கிறது. அவற்றைப்பற்றியும் அரசாங்கத்துறையினர் கவலையோடு நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. ஆகவே, இது விவாதிக்கவேண்டிய ஒரு முக்கிய

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [30th July 1965

மான விஷயம். பிரிவிலெஜ் கமிட்டிக்கு இந்தப் பிரச்னையை அனுப்பி, அந்தக் கமிட்டி இதை விவாதித்தாலும் சரி, அல்லது இந்தச் சபையிலேயே இந்தப் பிரச்னை விவாதிக்கப்பட்டு மற்ற அங்கத்தினர்களும் அவர்கள் அனுபவம், அபிப்பிராயம் இவற்றைக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டாலும் சரி என்று கூறிக் கொள்கிறேன்.

9-30 a.m.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்களுடைய கண்டனம், ஆலோசனை இவைகளைப் பற்றியெல்லாம் பிரஸ்தாபிக்கப் போவதில்லை. இப் பொழுது ஒன்றை உரிமைப் பிரச்சினையாக எழுப்பியிருக்கிறார்கள். அது உரிமைப் பிரச்சினைக்கு உகந்ததல்ல என்று நான் கருதுகிறேன். பட்ஜெட் ரகஸ்யம் வெளிப்பட்டபோதுகூட, அது ஒரு ரகஸ்யப் பிரச்னைதானே ஒழிய, அது ஒரு உரிமைப் பிரச்னை அல்ல; உரிமைப் பிரச்சினையாக எடுத்துக் கொள்வதில்லை. கனம் அங்கத்தினர் 'தவறுகள்' என்று சொன்னால் அவற்றைத் தவிர்க்க வேறு வகையில் விவாதிக்க வேண்டும் என்றால் அது வேறு விஷயம். ஆகவே, இது உரிமைப் பிரச்சினைக்கு உரிய விஷயம் அல்ல.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த சபையை அலட்சியப் படுத்துவது உரிமைக்குரிய விஷயம் அல்லவா? என்னுடைய வாதம் அரசாங்க அதிகாரிகள் இந்த சபையை அலட்சியப்படுத்தி யிருக்கிறார்கள் என்பது. அது உண்மையா இல்லையா என்பதைக் கவனிக்க வேண்டும் என்று சபாநாயகருக்குச் சமர்ப்பித்துக் கொள்ளுகிறேன். காலதாமதம் செய்வதே அலட்சியப்படுத்துவதுதான். அது இந்த சபையை அவமதித்த குற்றமாகும். ஆகவே, இது உரிமைக் கமிட்டிக்குச் செல்லவேண்டிய விஷயம்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது உரிமைப் பிரச்சினைக்கு உகந்த விஷயம் அல்ல என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மேலும், கனம் அங்கத்தினர் யார் மீது குற்றம், யார் தவறு செய்தவர்கள் என்று சொல்லவில்லை. டிப்பார்ட்மெண்ட் என்றால், அது செக்ரடரியா? டெபுடி செக்ரட்டரியா? அமைச்சரா? யார் என்று சொல்ல வேண்டும். அப்படியெல்லாம் சொன்னாலும், அது உரிமைப் பிரச்சினையல்ல.

திரு. மீ. கலியாணசுந்தரம் : எப்படி யிருந்தாலும் உரிமைப் பிரச்சினை இல்லை என்று வாதாடலாம். பத்திரிகை மீது உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வருகிறோம். அப்பொழுதே யார் பொறுப்பாளி என்று சொல்லிவிடுவதில்லை. நோட்டீஸ் அனுப்பிய பிறகு, நடவடிக்கை எடுக்கிறோம். அதன் மேல் யார் என்று தீர்மானிக்கிறோம். நானும் குறிப்பிட்டிருக்கிறேன். ரெவின்யூ இலாகா, ஆர்.டி.எல்.ஏ இலாகா என்றெல்லாம் குறிப்பிட்டிருக்கிறேன். நோட்டீஸ் கொடுத்தால் செக்ரடரி வந்து விளக்குகிறார். அப்பொழுது யார் பொறுப்பாளி என்று தெரியும். பத்திரிகைகள்

30th July 1965] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

பேரில் சுலபமாக உரிமைப் பிரச்சினையைக் கிளப்புகிறோம். அப்பொழுது யார் பொறுப்பாளி என்று சொல்லுகிறோம்? நிருபர் பொறுப்பாளியா, ஆசிரியர் பொறுப்பாளியா என்று பின்னுல்தான் தெரியும். உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வராமல் அதை யெல்லாம் எப்படித் தீர்மானிப்பது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I am only anxious that we should not create wrong precedents.

MR. SPEAKER: The only point is that there is delay, but *mens rea* must be inferred.

SRI M. KALYANASUNDARAM: My submission is that the delay is persistent. It is not accidental. If it is casual or accidental, I can understand it.

MR. SPEAKER: The question is whether it amounts to negligence. . .

SRI M. KALYANASUNDARAM: It is gross indifference to the statutory obligation to this August House.

MR. SPEAKER: I will pronounce my ruling to-morrow.

(2) ISSUE OF ORDINANCE AFTER THE SUMMONING OF THE ASSEMBLY.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, பத்திரிகைள் மீதும், மற்றவர்கள் மீதும் உரிமைப் பிரச்சினையை அனுமதித்து விடுகிறோம். இந்த சபையின் அந்தஸ்து உயர வேண்டும் என்றால், அரசாங்கமும் அதில் அக்கறை எடுத்துக் கொண்டு, இந்த விஷயங்களில் பொறுப்பு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று, இன்னொரு உரிமைப்பிரச்சினை கொண்டு வந்திருக்கிறேன்.

இந்த சபை 27-ம் தேதி கூடும் என்று அறிக்கை கொடுத்த பிறகு, (ஆர்டினன்ஸ்) அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக் கிறது. இந்த சபைகூட பத்து தினங்கள்தான் இருக்கிறது. சபை 27-ம் தேதி கூட இருந்தது, 17-ம் தேதி அவசரச் கூட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது, சபை கூடும் என்று அங்கத்தினர் களுக்கு அறிக்கை அனுப்பப்பட்டது. கெஜட்டில் ஜூன் மாதத்தில் வெளியிடப்பட்டது. ஆகவே, சபை கூடும் என்பது அரசாங்கத் திற்குத் தெரியும்; இலாகாவிற்கு நன்றாகத் தகவல் இருக்கிறது. இந்த சமயத்தில், "As the legislature is not in session. I am issuing an Ordinance" என்று சொல்லுவது distortion சபை கூடும் என்று அறிக்கை விட்ட பிறகு, சபை கூட்டப் பட்டுவிட்டது, தொடங்க ஆரம்பித்து விட்டது என்றுதான் அர்த்தம். அந்த சமயத்தில், "As the Legislature is not likely to be in session" என்று போடுவது பொது மக்கள் மத்தியில் தவறான கருத்தைத்தான் ஏற்படுத்தும். கவர்னர் கூட்டுகிறார் என்றால், அரசாங்கம், அல்லது முதல்

அமைச்சர் கூறக் கூடிய ஆலோசனைப்படிதான் இந்த சபையை கவர்னர் அவர்கள் கூட்டுகிறார்கள். (குறுக்கீடு) தவறு யார் பேரிலும் இருக்கலாம். கனம் முதல் அமைச்சர் பேரில் இருக்கலாம். யார் அப்படிக் கூறினார்கள் என்று விசாரித்தால்தான் தெரியும். விசாரிக்க எனக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? எனக்குக் கிடைத்திருக்கும் தகவலை நான் கொடுத்தேன். எனக் கொன்றும் வேறு வகையில் கிடைத்துவிடவில்லை. இந்த நோடிபி கேஷனையும் பார்த்தேன், அந்த அவசரச் சட்டத்தையும் பார்த்தேன். சபை கூடும் என்கிற நோடிஸ் கொடுத்த 15 தினங் களுக்குப் பிறகு அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவைக் கொண்டுவர வேண்டாம் என்று சபையை ஏமாற்றும் எண்ணத்தோடு செய்தவர்கள் என்ற குற்றச்சாட்டு சொல்லவில்லை. இந்த மசோதாவை நிறைவேற்றமுடியும். அவர் களுக்கு மெஜாரிடி இருக்கிறது, முதல் அமைச்சர் அவர்கள் எப்பொழுதும் நிறைவேற்றிக் கொள்ளமுடியும்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒரு தரம் சொன்னலும் திருப்பித் திருப்பிச் சொன்னலும், ஒரே எஃபெக்ட் தான்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : முதல் அமைச்சருடைய ஆற்றலும் திறனும் எனக்கு இல்லை. எனக்கும் வோட்டுப் போட்டு அனுப்பி யிருக்கிறார்கள், பொறுத்துக் கொண்டுதான் ஆகவேண்டும். அவர்கள் திறமையாகப் பேசுவார்கள். இனிமேல் 55 வயதுக்கு மேல் அவர்களிடம் நான் கற்றுக் கொள்ளமுடியுமா? அவர்கள் திறமை எனக்கு வருமா?

The summons was issued on the 30th June for the Assembly to meet on the 27th July.

MR. SPEAKER : When was the Ordinance issued?

SRI M. KALYANASUNDARAM : It was issued on the 17th July.

MR. SPEAKER : Because the summons was issued on the 30th June, can the hon. Member say that on the 17th July the House was in session?

SRI M. KALYANASUNDARAM : I do not say that. My point is that the Government were aware that the House was going to meet on the 27th July.

MR. SPEAKER : Let us take up the points one by one. Can we say that on the 17th July the House was in session?

SRI M. KALYANASUNDARAM : No, we cannot say that.

MR. SPEAKER : The hon. Member can now proceed further.

திரு. மீ. கலியாணசுந்தரம் : 17-ம் தேதி அவசரச் சட்டம் வந்த போது, சபை கூடியதான அர்த்தம் இல்லை. ஆனல், சபை கூடு கிறது என்பது அவர்களுக்குத் தெரியும் : அமைச்சருக்குத்

30th July 1965] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

தெரியும். இலாகாவிற்குத் தெரியும். தேதியும், டைமும் குறித்தாகி விட்டது. அந்தத் தகவல் அரசாங்கத்திடம் உண்டு, அப்படி இருக்கும்போது, 10 நாள் இடைக்காலத்தில் . . .

MR. SPEAKER: I want clarification on one more point. Suppose, on the advice of the Ministry, the Governor thinks that there is an emergency on the 17th July. Then, is it necessary for the Governor to wait till the 27th July?

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஒத்துக்கொள்ளுகிறேன் ஆனால் அப்படி ப்ரியாம்பிளிலே சொல்லவில்லே. 27-ம் தேதி சபை கூட இருக்கிறது. அதற்குள்ளே இந்த அவசரச் சட்டம் பிறப்பிக்கப் படாவிட்டால் இன்ன பாதகம் எற்படும் . . .

கனம் சபாநாயகர்: அதைச் சொல்ல மாட்டார்கள். எமர்ஜன்சி என்றுதான் சொல்லுவார்கள். ப்ரியாம்பிளிலே என்ன சொல்லியிருக்கிறது?

திரு. மீ. கலியாணசுந்தரம்: அதைப் பற்றித் தகவலே இல்லே.

கனம் சபாநாயகர்: சரி; மேலே பேசுங்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: மற்ற காரணங்கள் இருந்தால் அவற்றைப் 'ப்ரியாம்பிள்'-இல் குறிப்பிட்டிருந்நாலாவது புரிந்து கொண்டிருக்க முடியும்.

MR. SPEAKER: Have they not mentioned about emergency?

SRI M. KALYANASUNDARAM: No, Sir.

'ப்ரியாம்பிள்'-ஐப் படித்துப் பார்த்தால் அதில் ஒன்றும் சொல்லப் படவில்லே. அவசரச் சட்டமாகப் பிறப்பிக்கப்பட்டிருப்பதில் 'ப்ரியாம்பிள்'-இல் இதைப்பற்றிக் குறிப்பிடவில்லே. இந்தச் சட்டத்தை அவ்வளவு அவசரமானதாகவும் நான் கருதவில்லே.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பின்னல் மசோதா எப்படித் தயாரிக்கப்பட வேண்டுமோ அப்படியேதான் 'ஆக்டினன்ஸ்' ஸும் இருக்கும். அது ஒன்றும் மாறுதலாக இருக்காது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: 'ஸ்டேட்மெண்ட் ஆப் ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீஸன்ஸ்'-இலாவது அதைக் குறிப்பிட்டிருக்கலாம். அதிலும் குறிப்பிடப்படவில்லே.

MR. SPEAKER: I will read it. 'The Governor is satisfied that the circumstances existing, render it necessary for him to take immediate action'. It is emergency but it is in some other words.

திரு. மீ. கலியாணசுந்தரம்: உடனடியாக நடவடிக்கை எடுக்கா விட்டால் என்ன நஷ்டம் ஏற்பட்டுவிடும்? இன்னும் பத்து தினங் களில் சட்டசபையே கூடுவதற்கு இருந்தது. அதற்குள் என்ன அவசரம்? சட்டசபை கூடினால் என்ன, கூடாவிட்டால் என்ன என்ற அபிப்பிராயமா?

MR. SPEAKER: Now we are concerned only with the question, whether it amounts to any breach of privilege. It may be invalid or it may be valid and we are not concerned with any of

those aspects of the question. If no emergency exists, it may be void and the matter may be taken to a court of law. Now, on that particular day the House was not in session and the Governor thought that immediate action was necessary. Therefore, the question is, in what way, that is a contempt of the House or a breach of privilege. We are concerned only with that.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த சட்டசபையையே அலட்சியப் படுத்துவதாகத்தான் இருக்கிறது. பத்து தினங்களில் சட்டசபை கூடப்போகிறது. அதற்குள் என்ன அவசரம்? உண்மையிலே அவசரம் இருக்கிறதா இல்லையா என்பதை ப்ரிவிலெஜ் கமிட்டி விசாரித்தால்தானே தெரியும்?

MR. SPEAKER : Is the hon. Member raising the privilege issue against the Governor or against the Chief Minister?

SRI M. KALYANASUNDARAM : Against the Chief Minister. The Governor does not act *suo motu*. He acts on the advice of the Chief Minister.

MR. SPEAKER : There cannot be a breach of privilege for giving advice, if at all any advice has been given.

SRI M. KALYANASUNDARAM : It is a Constitutional provision.

MR. SPEAKER : May be.

SRI M. KALYANASUNDARAM : The Governor would have issued the Ordinace only on the advice of the Chief Minister and not of his own.

MR. SPEAKER : How is it against any provisions of the Constitution?

SRI M. KALYANASUNDARAM : It has been issued in utter disregard of the House.

MR. SPEAKER : I will put it again. The condition demanded by the Constitution is that the House should not be in session and an emergency must be felt when the Ordinance is issued and that must satisfy the Governor. That is all.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இரண்டும் உண்மையா என்று தான் தெரியவேண்டும்.

கனம் சபாநாயகர் : உண்மையா இல்லையா என்பதை கோர்ட் ஆஃப் லா தான் முடிவு செய்யவேண்டும். இந்த சபை அதை எப்படி முடிவு செய்வது? கனம் அங்கத்தினர் உண்மை இல்லை என்று சொல்லலாம். மற்றவர்கள் உண்மை என்று சொல்லலாம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அதனால்தான் இதை ப்ரிவிலெஜ் கமிட்டிக்கு விடலாம் என்று நான் சொல்கிறேன்.

[30th July 1965

*கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, சுப்ரீம் கோர்ட்டிலே ஒரு தீர்ப்பு ஏற்பட்டு அதன் விளைவாக இந்த அவசரச் சட்டம் பிரயோகிக்கப்பட வேண்டியிருந்தது. 1957-ஆம் ஆண்டில் இந்த மன்றத்திலே சட்டம் நிறைவேற்றப்பட்டு அந்த சட்டப்படி சம்பந்தப்பட்ட இலாகாவிவர் சில நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டார்கள். அந்த நடவடிக்கைகள் அமுலில் இருந்துவந்தன. அந்த விஷயம் தான் பல கோர்ட்களுக்குப் போய், முடிவாக சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய், சுப்ரீம் கோர்ட், "அந்தச் சட்டம் செல்லத்தகுந்தது அல்ல" என்று தீர்ப்பு அளித்தது. "செல்லத் தகுந்தது அல்ல" என்று தீர்ப்பு செய்ததற்கு ஒரே காரணம் சரியான நீதி வழங்கக்கூடியதாக இல்லை; சம்பந்தப்பட்டவர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கவேண்டும்; நோட்டீஸ் கொடுத்த பிறகுதான் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்; நோட்டீஸ் கொடுப்பதற்கு இந்தச் சட்டத்திலே இடம் இல்லை; ஆகையால் அப்படியே தள்ளப்படுகிறது என்று தீர்ப்பு செய்யப்பட்டது. 'தள்ளப்படுகிறது' என்ற தீர்ப்பின் விளைவாக 1957-ஆம் ஆண்டிலிருந்து தர்ம ஸ்தாபன பரிபாலனத்திற்காக என்ன என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டனவோ அவ்வளவும் சட்டப்படி செல்லத் தகாததாகப் போகின்றன. ஒரே குழப்பம் ஏற்படக்கூடிய நிலை தான் ஏற்பட்டது. ஆகவே தான் அவசரமாக அதைத் திருத்துவதற்கு, சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின்படி இந்தக் குறையை நீக்குவதற்கு, சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின்படி சரியான நீதி வழங்கக்கூடிய சட்டமாக ஆக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்படி அவசரச் சட்டம் தயாரிக்கப்பட்டதும், அது மத்திய அரசாங்கத்தின் அனுமதிக்காக அனுப்பப்பட்டது. மத்திய அரசாங்கம் சில யோசனைகள் கூறினார்கள். அவற்றை எல்லாம் பரிசீலனை செய்து முடிவாக இந்த மசோதா தயாரிக்கப்பட்டது. தயாரிக்கப்பட்டவுடனே இது அவசரச் சட்டமாகப் பிரயோகிக்கப்பட்டது. இது தாமதப்படுவதற்கில்லை. ஒவ்வொரு நாள் தாமதத்தினாலும் நிர்வாகத்திலே குழப்பங்கள் ஏற்படலாம். ஆகவே தான் இது அவசரச் சட்டமாகப் பிரயோகிக்கப்பட வேண்டியிருந்தது. ஆனால், இது தயாராகி அவசரச் சட்டமாகப் பிரயோகிக்கப்படுகிறபோதே இந்தச் சட்ட மன்றம் கூட்டப்படுவதற்கான அறிவிப்பும் கொடுக்கப்பட்டது என்பது தான் கனம் உறுப்பினர் அவர்களுடைய ஆட்சேபனை. அந்த நிலையிலே இதை அவசரச் சட்டமாக எவ்வாறு பிரயோகிப்பது என்று கேட்டதோடு, அதற்கு மேலே உரிமைப் பிரச்னையாகவும் கிளப்பியிருக்கிறார். 'செஷன்' என்றால் என்ன என்பதைத் தாங்களே எடுத்துக் குறிப்பிட்டீர்கள். 'செஷன்' என்றால் என்ன என்பதற்குப் பல தீர்ப்புகளெல்லாம் வந்திருக்கின்றன. ஜூரிடினன்ஸ் பிறப்பிப்பதைப்பற்றியும் விளக்கங்கள் இருக்கின்றன 'செஷன்' என்றால்

"From the date of the first meeting of the Assembly or the Legislature till the date of prorogation or dissolution"

என்று தெளிவாக இருக்கிறது. அதற்குத் தீர்ப்புகள் எல்லாம் இருக்கின்றன. 'செக்ஷன்' இருக்கிறபோதே கூட அதை

[திரு. எம். பக்தவத்சலம்] [30th July 1965

'ப்ரரோக்' செய்துவிட்டு 'ஆர்டினன்ஸ்' செய்திருக்கிறார்கள். அது கூடத் தவறுதல் இல்லே என்று தீர்ப்பு இருக்கிறது. என்னைப் பொறுத்தமட்டில், அவ்வாறு செய்வதற்கு நான் சம்மதிக்க மாட்டேன். எனக்கு அது பிடிக்கவில்லே. தீர்ப்பு இருக்கிறது. அதைத் தவறு என்று சொல்ல முடியவில்லே. இரண்டு மன்றங்களும் 'செஷன்' இல் இருக்கவேண்டும் என்றும் ஒரு தீர்ப்பு இருக்கிறது. அசெம்பிளி 'செக்ஷன்'-இல் இருந்தது. கவன்மெல் 'ப்ரரோக்' ஆகியிருந்தது என்றால், அப்பொழுதும் 'ஆர்டினன்ஸ்' பிறப்பிக்கலாம். அந்த ஆர்டினன்ஸ் செல்லும் என்று தீர்ப்பு இருக்கிறது. இரண்டு மன்றங்களில் ஒன்று 'ப்ரரோக்' ஆகியிருந்த, மற்றொன்று செஷனில் இருந்தாலும் ஆர்டினன்ஸ் பிறப்பிக்கலாம், அந்த ஆர்டினன்ஸ் செல்லும் என்று தீர்ப்பு இருக்கிறது. அதற்காக, அசெம்பிளி கூடும் வரை காத்திருக்கவேண்டாம் என்று நான் சொல்லவில்லே. ஒரு மன்றம் செஷனில் இருந்து இன்னொரு மன்றம் 'ப்ரரோக்' செய்யப்பட்டிருந்தாலும், அப்போது பிறப்பிக்கப்பட்ட ஆர்டினன்ஸ் செல்லும் என்று தீர்ப்பு இருக்கிறது என்பதற்காகச் சொல்கிறேன். இதிலே 'பாவிலேஜ்' என்ன வருகிறது என்று தெரியவில்லே. ஆர்டினன்ஸ் பிறப்பிக்கப்பட்டபோது செஷன் இல்லே. இந்தச் சட்ட மன்றம் கூடத் தொடங்கியவுடனே இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறோம். செஷன் ஆரம்பிப்பதற்கு முன்னேயே ஆர்டினன்ஸாகக் கொண்டுவர வேண்டிய அவசியம் இருந்திருக்கிறது. அவசரம் இல்லேயென்றால் ஆர்டினன்ஸ் பிறப்பிக்கவேண்டும் என்று அரசாங்கத்திற்கு ஒன்றும் விசேஷ அக்கறை இல்லே. இன்றைய அஜெண்டாவிலேயே இந்த மசோதா சேர்க்கப்பட்டு, உடனடியாக நிறைவேற்றுவதற்கும் வகை செய்யப்பட்டிருக்கிறது. இன்றைக்கே இது 'இன்ட்ரட்யூஸ்' செய்யப்படுகிறது. இன்ட்ரடியூஸ் செய்வதிலே கூடத் தாமதம் ஆகுமோ என்பதற்காக, சட்டசபை கூடுவதற்கு முன்பாகவே, தங்களுடைய அனுமதியின் பேரில் இது பிரசுரிக்கப்பட்டது. இன்றைக்கே இதை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளவும் தயாராயிருக்கிறோம். ஆகவே, இதிலே உரிமைப் பிரச்சினே ஒன்றும் இல்லே என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM: Sir, the point is that the Ordinance can be issued only when the session is prorogued. The Governor has issued a notification summoning the Assembly. That means that the notification issued for proroguing the Assembly stands cancelled from that date.

MR. SPEAKER: Not from that date.

Session means from the date of sitting till it is prorogued. There cannot be a vacuum between the date of issue of the notice and the date of meeting of the Assembly. So it is clear that there is no session.

SRI M. KALYANASUNDARAM: Yes. If the Assembly is not in session, hon. Members cannot give notice. . .

30th July 1965]

MR. SPEAKER: Members can give notice even when the Assembly is not in session.

SRI M. KALYANASUNDARAM: We have to renew notice when the Assembly is prorogued.

MR. SPEAKER: Does the hon. Member Sri M. Kalyanasundaram say that on the 17th July the House was in session?

The hon. Member is going round and round. Let the hon. Member answer this specific question.

SRI M. KALYANASUNDARAM: The notification of prorogation of Assembly stands cancelled on 17th.

MR. SPEAKER: The condition precedent is that the House should not be in session. Does the hon. Member say that on the 17th July the House was in session?

SRI M. KALYANASUNDARAM: I don't say that.

MR. SPEAKER: Then the mater ends there.

SRI M. KALYANASUNDARAM: Shall we examine whether on the 17th July the notification of prorogation is valid?

MR. SPEAKER: Whether it is valid or not, we are not concerned with it.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The Governor is the sole judge to decide about the circumstances under which an Ordinance is to be issued. அப்படியே ஒரு தீர்ப்பு இருக்கிறது.

MR. SPEAKER: From the discussion that has taken place I come to the conclusion that on the 17th July when the Ordinance was issued, the House was not in session. Secondly, as regards the question of emergency it is entirely a matter for the Governor to satisfy himself and issue the Ordinance. So I hold that there is no breach of privilege.

Now the Hon. Minister for Co-operation may make his statement.

III.—STATEMENT BY MINISTER *RE.* CORRECTION TO ANSWER TO A SUPPLEMENTARY QUESTION UNDER QUESTION No. 201.

கனம் திரு. ந. நல்லசேனைபதி சர்க்கரை மன்றாடியார்: கனம் சபாநாயகர் அவர்களே, திரு. ரு. கருணாநிதி, எம்.எல்.ஏ. அவர்களும், பலவர் கா. கோவிந்தன் எம்.எல்.ஏ. அவர்களும் கேட்ட 201 ஆம் கேள்விக்கு (பழைய கேள்வி எண் 157) 10—3—1965 அன்று பதிலளித்தேன். அந்தக் கேள்வியின் மீது திரு. வி. ஆர். நெடுஞ்செழியன், எம்.எல்.ஏ. அவர்கள் கேட்ட துணைக் கேள்விக்கு அளித்த பதிலைத் திருத்தும் வகையில் நான் கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிடுகிறேன்.

[திரு. நல்லசேனுபதி சர்க்கரை மன்றுடியார்] [30th July 1965

"பெரிய தொழில் நிறுவனங்களில் பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்குச் சம்பளத்தைக் குறைத்துக் கொண்டு அதற்குப் பதிலாக பண்டங்களாகக் கொடுக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் சிபாரிசா அல்லது உத்தரவா என்று தூணைக் கேள்வி கேட்கப்பட்டது. அவ்வாறு கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று நான் எனது நினைவிலிருந்து கூறினேன். ஆனால், தொழில் நிறுவனங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களின் ஊதியத்தில் ஒரு பகுதியைப் பண்டங்கள் ரூபமாக வழங்கவேண்டும் என்று அரசாங்கம் எந்த ஆணையையோ அல்லது கட்டளையையோ பிறப்பிக்கவில்லை என்று நான் இப்போது அறிகிறேன்".

IV.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS DISTRICT DEVELOPMENT COUNCILS (AMENDMENT) BILL, 1965.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I beg leave to introduce the Madras District Development Councils (Amendment) Bill, 1965.

MR. SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras District Development Councils (Amendment) Bill, 1965."

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

(2) THE MADRAS CITY MUNICIPAL CORPORATION (AMENDMENT) BILL, 1965.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I beg leave to introduce the Madras City Municipal Corporation (Amendment) Bill, 1965.

MR. SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras City Municipal Corporation (Amendment) Bill, 1965".

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

30th July 1965]

V.—ANNOUNCEMENT.

THE MADURAI UNIVERSITY BILL, 1965.

MR. SPEAKER : I have to announce to the House that the Governor has given his recommendation for the consideration by the Madras Legislative Assembly of the Madurai University Bill, 1965.

IV.—GOVERNMENT BILLS—*cont.*

(3) THE MADURAI UNIVERSITY BILL, 1965 (L.A. BILL NO. 11 OF 1965).

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

"That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of 18 members (12 members of the Legislative Assembly and 6 members of the Legislative Council) to consider the Madurai University Bill, 1965 * (L.A. Bill No. 11 of 1965), and that the following Members of the Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee."

I shall give the names of the members later.

கனம் சபாநாயகர் அவர்களே, இதற்கு முன்பே மதுரையில் ஒரு பல்கலைக் கழகம் அமைக்க வேண்டுமென்ற யோசனை இந்த மன்றத்தில் கூறப்பட்டிருக்கிறது.

MR. SPEAKER : I think the hon. Member Sri M. Kalyanasundaram has given notice of an amendment.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, after the Bill is moved and the Hon. Minister concerned has made the speech, the amendments can be moved.

MR. SPEAKER : All right.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மன்ற உறுப்பினர்கள் யாவரும் இதை வரவேற்பார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை. பல்கலைக் கழகம் இரண்டுதான் இப்போது தமிழ் நாட்டில் இருக்கின்றன. ஒன்று பழைய சென்னைப் பல்கலைக் கழகம். மற்றொன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகம். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் டீச்சிங் பல்கலைக் கழகமாக இருக்கிறது. சிதம்பரத்தை ஒட்டி அது பணி ஆற்றிக் கொண்டு வருகிறது. கடலூருக்கு இல்லை. ஆகையால்தான் கடலூருக்கு ஒரு கல்லூரி வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொண்டு இருந்தார்கள். இப்போது கடலூரில் ஒரு கல்லூரி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, சிதம்பரத்தைப் பொறுத்தவரையில் அங்குள்ள பல்கலைக் கழகம் முழுப் பல்கலைக் கழகம் இல்லை. பாடம் சொல்லிக் கொடுப்பதும் வேண்டும். கல்லூரிகளை இணைப்பதும் வேண்டும். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பாடம் சொல்லிக் கொடுப்பதைக் கவனித்துக்

* Published in the *Fort St, George Gazette Extraordinary*, dated 27th July 1965.

[திரு. எம். பக்தவத்சலம்] [30th July 1965

கொண்டு வருகிறது. அதைவிட்டு தமிழ் நாடு பூராவுக்கும் சென்னைப் பல்கலைக் கழகம் ஒன்று இருந்தால் போதாது. சாதாரணமாக ஒரு மதிப்பீடு ஒரு கோடி ஜனத்தொகைக்கு ஒரு பல்கலைக் கழகம் இருக்கவேண்டும் என்று இருக்கிறது. வேறு மாநிலங்களில் அதிகமாக அமைக்கப்பட்டிருக்கிறது. யுனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷனும் சரி, மத்திய அரசாங்கமும் சரி, பல்கலைக் கழகங்களை அதிகமாகப் பெருக்கிக் கொண்டே போவது சரியல்ல என்ற அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கொண்டு வருகிறார்கள். ஆனால், நம் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், மதுரை பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில் அவசியம் இல்லை என்று அவர்கள் கூறவில்லை, கூறவும் மாட்டார்கள். கூற முடியாது. சென்னைப் பல்கலைக் கழகம் சரியான முறையில் பணியாற்றிக் கொண்டு வருகிறது. உயர்ந்த தரத்தை நிலைநாட்டிக் கொண்டு வருகிறது. மதுரையில் ஏற்கனவே ஒரு போஸ்ட்—க்ராஜுவேட் செண்டர்—யுனிவர்சிடி செண்டர்—அமைத்திருக்கிறார்கள். அது நல்ல முறையில் இயங்கிக் கொண்டும் வருகிறது. யுனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷனும் கூட இந்த மாதிரியாக யுனிவர்சிடி செண்டர் அமைத்து நல்ல முறையில் இயங்கச் செய்வது அங்கே ஒரு பல்கலைக் கழகம் நிறுவுவதற்கு ஒரு தல்லபடி என்றே வற்புறுத்தி வருகிறது. அந்த வகையில் பார்த்தாலும் இப்போது யுனிவர்சிடி செண்டர் நல்ல முறையில் இயங்கி வருகிற மதுரையில் ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவுவது மிகவும் பொருத்தமாக இருக்கும். இப்போது சென்னைப் பல்கலைக் கழகத்தார் திருச்சியிலே ஒரு யுனிவர்சிடி செண்டர் துவங்கி இருக்கிறார்கள். இது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். ஆகவே, மதுரையில் ஒரு பல்கலைக் கழகத்தை அமைப்பது என்ற யோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டு அது சம்பந்தமான பல வேலைகள் நடந்து இருக்கின்றன. அதற்கு வேண்டிய நிலமெல்லாம் இப்போது ஆர்ஜிதம் செய்யப்பட்டு வருகிறது. ஒரு குழு அமைக்கப்பட்டு, பல்கலைக் கழகம் எத்தகையதாக இருக்க வேண்டுமென்பது பற்றி ஆராயப்பட்டு அவர்கள் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கை சென்னை சிண்டிகேட்டின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. அவர்களும் சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இதை எல்லாம் வைத்துக் கொண்டு பல்கலைக் கழக மசோதா இப்போது தயாரிக்கப்பட்டு இங்கே இந்த மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கிறது. அதோடு முன்பு ஒரு முறை பேசிக்கொண்டிருந்தபோது சென்னைப் பல்கலைக் கழக வைஸ்சான்சலர் ஒன்று கூறினார்கள். மதுரையில் ஒரு பல்கலைக் கழகம் ஆரம்பிப்பது என்றால் தாம் தயங்காமல் ஏற்றுக் கொள்வதாகச் சொன்னார்கள். மதுரையில் பல்கலைக் கழகம் என்றால் இப்போதுள்ள சென்னைப் பல்கலைக் கழகத்தின் வேலைப் பளுவைக் குறைக்கும். ஆகவே மதுரையில் ஒரு பல்கலைக் கழகம் வைப்பது எல்லா வகையிலும் பொருத்தமானது. மதுரையில்தான் முதல் தமிழ்ச் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் எல்லாம் இருந்ததாக நாம் அறிகிறோம். அங்கே அமைப்பது நல்லமுறையில் இயங்கும் என்பதைக் கனம் அங்கத்தினர்களும் உணர்வார்கள். மதுரையில் அமைக்கப்பட இருக்கிற பல்கலைக் கழகத்தோடு என்ன என்ன மாவட்டங்களைச் சேர்ப்பது, சென்னைப் பல்கலைக்

30th July 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

கழகத்தில் இருந்து என்னென்ன மாவட்டங்களைப் பிரித்துச் சேர்ப்பது என்பது ஒரு பிரச்சினை. இது சம்பந்தமாக முதலிலே சில பேர்கள் யோசனை கூறினர்கள். தமிழ்நாடு பூராவுக்கும் சென்னைப் பல்கலைக் கழகம்தான் இருக்கிறது. ஆகவே, கன்னியாகுமரி, திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களோடு திருச்சி, தஞ்சை ஆகிய இரண்டு மாவட்டங்களையும் சேர்த்து மொத்தம் ஆறு மாவட்டங்களை மதுரைப் பல்கலைக் கழகத்திலே சேர்த்துக் கொள்ளலாம். மற்றவைகள் சென்னைப் பல்கலைக் கழகத்திலேயே இருப்பதுதான் சரி என்றும் யோசனைக் கூறப் பட்டது. ஆனால் அரசாங்கம் இதைப்பற்றி ஆராய்ந்து முடிவு எடுப்பதற்கு முன்பு இது பல்கலைக் கழகத்தினுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதற்காக அனுப்பப்பட்டது. பல்கலைக் கழகத்தினர் இப்பொழுதுதான் திருச்சியிலே சென்டர் தொடங்கியிருக்கிறார்கள். அந்த சென்டர் வளர்ச்சி அடையும். ஆகவே, மதுரைப் பல்கலைக் கழகத்துடன் இவற்றைச் சேர்க்கவேண்டாமென்றும், பின்னாலே பார்த்துக்கொள்ளலாமென்றும் கருத்தைத் தெரிவித்தார்கள். அதை அரசாங்கமும் ஏற்றுக்கொண்டுதான் அந்த முறையிலே இந்த மசோதாவைத் தயாரித்திருக்கிறது. இந்த மசோதாவின்படி மதுரைப் பல்கலைக் கழகத்தில் நான்கு மாவட்டங்கள்தான் இருக்கும். பின்னால் வேறு சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றாலும், விஸ்தரிக்க வேண்டுமென்றாலும் அதற்காக இந்த மசோதாவில் இடம் இருக்கிறது. இந்த நான்கு மாவட்டங்களிலே இருக்கக்கூடிய கல்லூரிகள், ஆர்ட்ஸ் காலேஜ்கள் 29 இருக்கின்றன. 7 டிரெயினிங் காலேஜ்கள் இருக்கின்றன; 2 என்ஜினியரிங் காலேஜ்கள் இருக்கின்றன; ஒரு மெடிக்கல் காலேஜ் இருக்கிறது—மதுரையிலே இப்பொழுது இருப்பதைக் குறிப்பிடுகிறேன்—இதைத் தவிர திருநெல்வேலியில் ஒரு மெடிக்கல் காலேஜ் வரும்; குற்றாலத்திலே இந்திய முறை வைத்தியக் கல்லூரி வர இருக்கிறது; விவசாயக் கல்லூரி தொடங்குகிறது; இவையல்லாமல், மூன்று ஆர்ட்ஸ் காலேஜ்கள் இந்த ஆண்டிலேயே துவக்கப்படுகின்றன. ஆகவே, இதையெல்லாம் சேர்த்தாலே, திருநெல்வேலி, கன்னியாகுமரி மதுரை, இராமநாதபுரம் ஆகிய நான்கு மாவட்டங்களையும் சேர்த்துப் பார்த்தால் மொத்தம் 45 கல்லூரிகள் இருக்கும். ஆகவே, இதுவே ஒரு கணிசமான அளவுக்குச் சிறந்த பல்கலைக் கழகமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. என்னுடைய அவா வெல்லாம் பேருக்குப் பல்கலைக் கழகம் என்று வைத்துவிட்டால் போதாது. மதுரையிலே பல்கலைக் கழகம் அமைக்கப்படுகிறது என்ற பெருமை பேசிக்கொண்டிருந்தால் போதாது; முன்பிருந்த பெருமை, வரலாறு இவற்றிற்கெல்லாம் ஏற்றவாறு ஒரு சிறந்த பல்கலைக் கழகமாக மதுரைப் பல்கலைக் கழகம் விளங்க வேண்டும். சிற்சில கலைத் துறைகள் சம்பந்தமாகப் பிரத்தியேகக் கவனம் செலுத்த வேண்டுமென்று சொன்னார்கள். அந்த வகையிலேயே கலைகள், மற்றும் வேறு விஞ்ஞானமோ மற்றக் கலைகளோ ஏற்படுத்துவதற்கு எடுத்துக்காட்டாக இருக்கக்கூடிய வகையில் பிரத்தியேகக் கவனம் செலுத்தவேண்டும் என்பது என்னுடைய அவா.

10 00 a.m.

[திரு. எம். பக்தவத்சலம்] [30th July 1965

இது சம்பந்தமாக சிக்கிரத்திலே சட்டம் செய்வதற்கு முடியாமல் தாமதம் ஏற்பட்டது. இதை நன்றாக ஆராய்ந்து பின்புதான் சட்டம் செய்யவேண்டுமென்று நினைத்ததால்தான் கொஞ்சம் தாமதமேற்பட்டது. சட்டமாக்கப்பட்டதற்குப் பிறகுதான் மற்ற நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். அடுத்த ஆண்டிலேயே இந்தப் பல்கலைக் கழகம் பணிபுரியத் தொடங்க வேண்டுமென்பதுதான் என்னுடைய அவா. எனவே, இதற்காகப் பூர்வாங்க நடவடிக்கைகள் இப்பொழுதிருந்தே எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. நான் கூட முதலிலே நினைத்தேன், இந்தச் சட்டம் நிறைவேறிவிட்டால் உடனடியாக வேலைகளைத் தொடங்கலாம் என்று. ஆனால் பிசினஸ் அட்வைசரி கமிட்டியில், இதைப் பொறுக்குக் கமிட்டிக்கு விடவேண்டுமென்று கூறினர்கள். நான் இதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டேன். ஆகவே, பொறுக்குக் கமிட்டிக்கு விடுவது என்று செய்யப்பட்ட முடிவு ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்தப் பொறுக்குக் கமிட்டி ஆகஸ்டு மாதத்திலே இதைப்பற்றிப் பரிசீலனை செய்து, அதற்குப் பிறகு அடுத்த செப்டம்பரிலோ, அல்லது அக்டோபரிலோ சட்டசபை கூடும். பொழுது இதை எடுத்துக்கொண்டு, அக்டோபர் இறுதிக்குள்ளாகச் சட்டமாகச் செய்துவிடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பொறுக்குக் கமிட்டி ஜாயின்ட் செலக்ட் கமிட்டியாகப் போடப்பட்டிருக்கிறது. கமிட்டியின் மெம்பர்களுடைய பெயர்களைப் பின்னால் சொல்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். இந்த மன்றத்திலிருந்து 12 பேர்களையும், மேல் சபையிலிருந்து 6 பேர்களையும் செலக்ட் கமிட்டி மெம்பர்களாகப் போட்டிருக்கிறோம். இதை அதிகப்படுத்தவேண்டுமென்ற அவசியமில்லை. எத்தனை பேர் போட்டாலும் அவர்கள் மன்றத்தின் பிரதிநிதிகளாகத்தான் பணியாற்றப் போகிறார்கள். அந்த வகையிலேதான் பொது மக்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கப் போகிறார்கள். ஆகவே, இந்த மன்றம் ஏகமனதாக இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, நான் என்னுடைய திருத்தத்தைப் பிரேரேபிக்கிறேன். என்னுடைய பிரேரேபணைக்கு முன்பேயே நான் எதிர்பார்த்ததை வேண்டாம் என்று யோசனை கூறியிருக்கிறார்கள். இருந்தாலும், இந்தச் சபைக்கு 12 பேர் என்றிருப்பதை 18 பேர்களாக உயர்த்தவும் அதேபோன்று அந்தச் சபையிலே—இது சம்பந்தமாக விதியிருப்பதால் கூறுகிறேன்—9 பேர்களாக உயர்த்தவும் வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். உறுப்பினர்களின் எண்ணிக்கையை 18 ஆகவும் 9 ஆகவும் உயர்த்த வேண்டுமென்ற என்னுடைய இந்தக் கீழ்க்கண்ட பிரேரேபணையை நான் பிரேரேபிக்கிறேன்.

"In the Government Motion for referring the Madurai University Bill, 1965 (L.A. Bill No. 11 of 1965) to a Joint Select Committee—

(i) For the figure '18', substitute the figure '27';

30th July 1965] *[திரு. மீ. கலியாணசுந்தரம்]*

(ii) For the figure '12', substitute the figure '18'; and

(iii) For the figure '6', substitute the figure '9'."

திரு. சா. கணேசன்: நான் இந்தத் திருத்தத்தை ஆமோதிக்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்து பிரேரேபித்துள்ள மதுரைப் பல்கலைக் கழக மசோதாவை வரவேற்பதற்காகவும், அதனை யொட்டிப் பொறுக்குக் குழுவுக்கு விடவேண்டுமென்ற தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்வதற்காகவும் நான் இப்பொழுது இந்த மன்றத்தின் முன்பு நிற்கிறேன். மதுரைப் பல்கலைக் கழகம் துவக்கப்படவேண்டியதன் அவசியத்தைப்பற்றியும், எப்படிப்பட்ட சூழ்நிலைகளில் இப்பல்கலைக் கழகம் மலர இருக்கிறது என்பதைப் பற்றியும் . . .

MR. SPEAKER: The hon. Member Sri Kalyanasundaram has given different figures in his notice of amendment.

திரு. மீ. கலியாணசுந்தரம்: I have since altered it as 18 and 9. Sri. நான் அது சம்பந்தப்பட்ட சூல்லைப் பார்த்தேன். அதிலே 2:1 என்ற முறையிலே இருக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதன் காரணமாகத்தான் நான் 18, 9 என்று பிரேரேபித்தேன்.

திரு. கே. ஏ. மதியழகன்: கனம் முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தின் முன்பு இந்த மசோதாவைப் பிரேரேபித்திருக்கிறார்கள். இதனை வரவேற்பதிலும், இதனை ஆதரிப்பதிலும் நானும், என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்களும் மிக்க மூழு மகிழ்வு பெறுகிறோமென்பதை நான் முதலிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக, இந்த அரசாங்கத்தைப் பாராட்டுவதோ அல்லது அதற்கு புகழ்மாலை சூட்டுவதோ எனக்கு அதிகமாக வழக்கமில்லாத ஒன்று. அதற்குக் காரணம் நான் இந்தச் சர்க்காரைப் பாராட்டக் கூடாது என்றோ, இவர்களைப் புகழக்கூடாது என்றோ, இவர்கள்மீது நல்லெண்ணத்தைச் செலுத்தக்கூடாது என்றோ நினைக்கிறேன் என்ற பொருள் அல்ல; அதற்கான வாய்ப்பு பெரும் பாலான நேரங்களில் எனக்கு அமைவதில்லை.

(திரு. எஸ். நஞ்சுண்ட ராவ் தலைமை.)

வெயிலிலே காய்ந்தவர்களுக்கு மழைத்துளி கிடைத்ததைப் போல் நமக்கு இந்தப் பல்கலைக் கழகம் அமைவதற்கும், அதை நிறைவேற்றுவதற்கும் நல்ல முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிற கனம் முதலமைச்சர் அவர்களை நான் மகிழ்ந்த மன நிறைவோடு, மூழு மனதோடு பாராட்டி, அவர்கள் கல்வியமைச்சராக இருக்கிற நேரத்திலேயே இப்படியொரு வாய்ப்பு ஏற்பட்டதை கண்டு நான் உண்மையிலேயே மிகப் பெருமை கொள்கிறேன். இப்பல்கலைக் கழகம் அமைவதற்குப் பின்னுலே இருந்த வரலாற்

[திரு. கே. ஏ. மதியழகன்] [30th July 1965

றைப்பற்றிச் சொன்னார்கள். ஒரு கோடிப் பேர்கள் இருந்தால் ஒரு பல்கலைக் கழகம் ஆரம்பிக்கலாம் என்பதுபோன்று பல்கலைக் கழக மானியக் கமிஷன் சிபாரிசுகள் இருந்தாலும், நம் மூடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 3½ கோடி பேர் இருக்கிற சமுதாயம், 4 கோடிப் பேர்களாக வளர்ந்துகொண்டு வருகின்ற தமிழ்நாட்டில் சென்னைப் பல்கலைக் கழகமொன்றுதான் நெடுநாட்களாக இருந்து வருகிறது. இதைத் தவிர அண்ணாமலைப் பல்கலைக் கழகம் என்ற ஒன்றிருந்தாலும் அது செமிடெண்ஷியல் யூனிவர்சிடியாக, அங்கேயே தங்கிப் படிக்கின்ற இடமாக மட்டும் இருந்து வேறு எந்த கல்லூரிகளுடனும் தொடர்பு இல்லாத தாகவும், உயர்தரக் கல்விகள் கற்க வாய்ப்பில்லாத ஒரு பல்கலைக் கழகமாகவும்தான் இருந்து வருகிறது. இந்த மதுரைப் பல்கலைக் கழகத்தினுடைய அவசியத்தைப் பல்கலைக் கழகக் குழுக்களும் எவ்வாறு உணர்ந்திருக்கிறார்களென்பதை இந்த மசோதாவின் குறிப்புக்களிலேயும் நோக்கங்களிலேயும் தெளிவாகக் குறிப்பிடப் பட்டிருப்பதைக் காணலாம்.

மதுரையிலே இன்றைக்கே யூனிவர்சிடி சென்டர் என்று தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தென் மாவட்டங்களைப் பொறுத்தவரையில் ஒரு பல்கலைக் கழகம் அமைய வேண்டுமென்று நெடுநாட்களாகச் சொல்லி வந்தோம். 1956-57-லேயே ஒரு பல் கலைக் கழகத்தைத் துவங்க வேண்டுமென்று சொல்லி, யூனிவர்சிடி கிரான்ட்ஸ் கமிஷன் 'அமையுங்கள்' என்று உடன்பாடு தெரிவித்தும் இவ்வளவு காலதாமதமாகியிருக்கிறது. இவ்வளவு காலதாமதமானாலும் கூட, இன்னும் செய்ய வேண்டிய காரியங்கள் நிறைய இருந்தாலும் கூட, ஒரு நல்ல காரியம் நடைபெறுகிறது, மதுரைப் பல்கலைக் கழகம் மலருகிறது என்பதற்காக என்னுடைய நல் வாழ்த்துக்களைக் கனம் மூதலமைச்சர் அவர்களுக்கு முதலிலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் சொன்னது போல் தமிழகத்திலே மூன்றாவது பல்கலைக் கழகம் அமைக்கின்ற நேரத்தில் அதற்கு மதுரையைத் தவிர வேறு ஊர், பொருத்தமான ஊர் இல்லையென்று சொல்ல விரும்புகிறேன். வேறு ஊர்களைச் சிற்றூர் என்று சொல்வார்கள், பேரூர் என்று சொல்வார்கள், ஆலை மதுரை மாமூதூர் என்ற பெயர் படைத்த தாக மூதூராக இருந்தது. மதுரை நகர் சங்க காலத்தின் தொட்டி லாகவும், கலாசாரக் கேந்திரமாகவும் பாண்டிய மாமன்னர்களின் பாம்பரைத் தலைநகரமாகவும், பண்டைத் தமிழகத்தின் பெருமைகளை நினைவூட்டக் கூடியதாகவும் அமைந்த நகரமாகும். இயற்கை வளத்திலும் சரி, பூகோள ரீதியிலும் சரி, கலாசாரத்தி லானாலும் சரி, நாகரிகத்திலானாலும் சரி, பாண்டிமண்டலம் சிறந்து விளங்கியிருக்கிறது. பாண்டிமண்டலத்தை நம் மனக் கண் முன்னாலே நிறுத்திப் பார்க்கும்போது நம்முடைய பழந் தமிழ்ப் புலவர்களுடைய ஆராய்ச்சிகள் மனக் கண் முன்னாலே வரு கிறது: பாண்டிய மன்னர்களின் அத்தாணி மண்டபத்திலே தமிழ் வளம் கொழித்தது நினைவுக்கு வருகிறது. பாண்டிய மன்னர் களின் வீரம் நமக்கு நினைவுக்கு வருகிறது. பிற்காலத்தில் கூட சுதந்திரப் போராட்ட காலத்தில் கூட பாண்டிய

30th July 1965] [திரு. கே. ஏ. மதியழகன்]

மண்டத்திலுள்ள எட்டையபுரம்தான் கவிஞர் பாரதியார் அவர்களைக் கொடுத்தது. அத்தகைய பாண்டிய மண்டலத்தின் தலை நகரான மதுரையிலே இன்று பல்கலைக் கழகம் அமைவது உண்மையிலேயே மிகமிகப் பொருத்தமானது, நல்ல முறையிலே வரவேற்கத்தக்க அம்சம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்றைக்கு இந்த மசோதா பொறுக்குக் குழுவுக்குப் போகின்ற காரணத்தால்தான் விஸ்தாரமாக விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லையென்றாலும் பொறுக்கு குழு உறுப்பினர்களுக்குச் சில மேலோட்டமான கருத்துக்களைக் கோடிட்டுக் காட்டுகிற முறையிலே சில கருத்துக்களைச் சொல்ல வேண்டியது அவசியம் என்று தான் நான் கருதுகிறேன். பல்கலைக் கழகங்களைப் பற்றிக் கனம் முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இந்த நாட்டிலே பல்கலைக் கழகங்கள் ஏராளமாக இருக்கின்றன. உயர்தரக் கல்வி, விஞ்ஞானம், ரசாயன ஆராய்ச்சிகள், தொழில் நுட்ப ஆராய்ச்சிகள், பூகோள ஆராய்ச்சிகள் இன்னும் பலவற்றில் நிறமையான வகையில் பணியாற்றி வருகிறார்கள். நாம் அதை மறுப்பதற்கில்லை. அவற்றைப் பொறுத்தவரை நிறம்பட நடந்து வருகின்றன. இன்று நாட்டிலே தடுக்கி விழுந்தால் பி.ஏ., க்கள், எம்.ஏ.க்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் மதுரைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தமட்டில் ஒரு பிரத்தியேகமான ஒரு கொள்கை இருக்க வேண்டும். அது பற்றிய விவரங்கள் இந்த மசோதாவிலே கொடுக்கப்படவில்லை. இன்றைக்கு நாட்டிலே பி.ஏ., எம்.ஏ., படித்தவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள், பட்டதாரிகள் என்னை மன்னிப்பார்கள், தவறுக்கு கருத மாட்டார்கள் என்று கருதுகிறேன்—இன்றைய நினைத்திலே பல்கலைக் கழகத்திலே படித்து வருகிறவர்கள் உண்மையிலேயே இந்த நாட்டிலே என்ன சாதனைகளைச் செய்ய வேண்டுமோ, என்ன அறைகூவல்களை ஏற்றுக் கொள்ள வேண்டுமோ அதற்குத் தயாரானவர்களாக நிச்சயமாக இல்லை. பல்கலைக் கழகத்தினுடைய உயர்ந்த நோக்கம் எவ்வாறு இருக்க வேண்டுமென்றால், அந்தப் பல்கலைக் கழகத்தில் படித்து மாணவர்கள் வெளிவருகின்ற நேரத்தில் அவர்கள் நாட்டினுடைய பொதுத் துறையிலே ஈடுபடுகிறவர்களாகவும், பொது வாழ்விலே தலைமையேற்று தலைமை தாங்கிச் செல்லுகிற நல்ல திடகாத்திரம் மிகுந்த வாலிபர்களாகவும், அறிவாற்றல் நிறைந்தவர்களாகவும், ஒழுக்கப் பண்பு நிறைந்தவர்களாகவும் அமைதல் வேண்டும். இன்றைக்குப் பிரேரேபிக்கப்பட்டிருக்கிற மசோதாவில் அந்த முறையில் உயர்ந்த லட்சியமாக, கனவாக என்ன கொடுக்கப்பட்டிருக்கிறது என்று பார்த்தால் ஒன்றும் இல்லை, நாம் சுதந்திரம் பெறுவதற்கு முன் 200 ஆண்டுகாலம் ஏகாதிபத்தியத்தினுடைய நுகத்தடியின் கீழ் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தோம். சுதந்திரம் பெற்ற ஒரு பெரிய நாட்டில் எத்தனையோ மாதிரியான சாதனைகள், சித்தனை ஓட்டங்கள், சமுதாயத்தை மாற்றியமைக்க வேண்டுமென்ற கனவுகள் எழும். அவற்றையெல்லாம் நிறை வேற்றுகின்ற வகையிலே நாற்றங்கால்களாக அமைத்து பணியாற்ற வேண்டிய பெரும்பங்கு சர்வகலாசாலைகளுக்கு இருக்கிறது. சென்னைப் பல்கலைக் கழகமோ, அண்ணாமலைப் பல்கலைக் கழகமோ

[திரு. கே. ஏ. மதியழகன்] [30th July 1965

அந்த அளவுக்கு அமையவில்லே. மதுரைப் பல்கலேக் கழகமாவது அவற்றைச் சாதிக்கும் என்று நம்புகிறேன். தமிழ்நாட்டு மக்கள் மதுரைப் பல்கலேக் கழகத்தை அந்த முறையிலே எதிர் பார்க்கிறார்கள். மதுரைப் பல்கலேக் கழகத்திலே உருவாகின்றவர் கள் இந்த நாட்டின் எதிர்கால முதலமைச்சர்களாக ஆகவேண்டும்; மதுரைப் பல்கலேக் கழகத்திலிருந்து உருவாகின்றவர்கள் வெளி நாட்டுத் தூதுவர்களாக மாற வேண்டும். மதுரைப் பல்கலேக் கழகத்திலிருந்து உருவாகின்றவர்கள் தத்துவ ஞானிகளாக வர வேண்டும்; மதுரைப் பல்கலேக் கழகத்திலிருந்து உருவாகின்றவர் கள் தொழில் வளத்தைப் பெருக்குகின்ற தளகர்த்தர்களாக வரவேண்டும். அத்தகைய வகையிலே மதுரைப் பல்கலேக் கழகம் அமைய வேண்டுமென்பதற்கு இந்த மசோதாவிலே பிரத்தியேகமான லட்சியம் என்ன, கொள்கை என்ன என்று தரப்படவில்லே. அதன் நோக்கங்களிலே இது பற்றி விளக்கப் படவில்லே. 1928-ம் ஆண்டு சய்யப்பட்ட பல்கலேக் கழக சட்டத் தின் அடிப்படையில் இந்த மசோதா இங்கே தரப்பட்டிருக்கிறது. நான் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். சென்னேப் பல்கலேக் கழகத்தினுடைய சட்ட விதிகளேக் காட்டிலும் அண்ணுமலேப் பல்கலேக் கழகச் சட்ட விதி முறைகள் சிறந்தனவாக இருக்கின்றன. அந்த முறையிலே உருவாக்கி இருந்தால்கூட நோக்கம் ஓரளவு சரியானதாக அமைந் திருக்கக்கூடும். சென்னேப் பல்கலேக் கழக விதிமுறைகளின் எத்தனேயோ குறைபாடுகள், முரண்பாடுகள் இருப்பதை அடிக்கடி செனட் சபையில் சுட்டிக் காட்டி யிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலேயில் அதையே எடுத்து பெயரை மாற்றிய நிலேயில் இந்த மசோதாவிலே பல வாசகங்கள் தென்படுகின்றன. அண்ணுமலேப் பல்கலேக் கழகத்தினுடைய லட்சியத்திலே ஒன்றை மிக நன்றுகச் சொல்லியிருந்தார்கள். தமிழை வளர்ப்பதும், தமிழ்க் கலாசா ரத்தைப் பாப்புவதும் தான் அண்ணுமலேக் பல்கலேக் கழகத்தின் லட்சியம் என்று சொல்லி அந்த வகையிலே ஓரளவு பாடுபட்டு வந்திருக்கிறார்கள். அந்த வகையிலே 'ப்ரியாம்பிள்' மதுரைப் பல்கலேக் கழகத்தைப் பொறுத்தும் இடம் பெற்றிருக்க வேண்டும். பாதுவான நரேக்கங்கள், அறிவு வளரவேண்டும், ஆராய்ச்சி பெருக வேண்டும், பாடம் சொலிக் கொடுக்கப்படவேண்டும் என்று மட்டும் போட்டிருப்பது போதாது. இந்தப் பல்கலேக் கழகத்தின் சிறப்பு அம்சம் என்ன என்பதைக் கூற வேண்டும்.

நாம் மொழிக் கொள்கையிலே ஏற்றுக் கொண்டிருக்கிற தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் தரக் கூடிய எதுவும் இந்த மசோதா வில் இடம் பெறவில்லே. தமிழை வளர்க்க இன்றைக்கு சென்னேப் பல்கலேக்கழகம் தவறிவிட்டது. அண்ணுமலே பல்கலேக் கழகம் தமிழை வளர்க்கிறேம் என்று சொல்லி உண்மை யிலேயே ஓரளவு பாடுபட்டும் வருகிறது. ஆனுல், அது முழுமை யானது அல்ல; முழு வெற்றி பெற்றது அல்ல. இன்றைய சூழ்நிலே யில், இன்றைய பின்னணியில் தமிழர்களுடைய மன உணர்வுகளே நிறைவேற்றும் வகையில் தமிழை கல்ஞரி மொழியாக போதனு மொழியாக ஆக்குகின்ற லட்சியத்தை இந்த மசோதாவிலே இடம்

30th July 1965] [திரு. கே. ஏ. மதியழகன்]

பெறும்படிச் செய்யவேண்டும். அதோடு தமிழ்க் கலாசாரம், பண்பாடு ஆகியவற்றை வளர்ப்பதற்கான மிக முக்கியமான கேந்திர மாகவும் மதுரைப் பல்கலைக் கழகம் அமைய வேண்டுமென்பதைப் பற்றி இந்த மசோதாவில் ஏதும் இடம் பெறவில்லை. இது ஒரு பெரிய குறைபாடு என்றுதான் சொல்லவேண்டும். எவ்வளவு பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. அவற்றில் எல்லாம் இல்லாத சிறப்போடு மதுரைப் பல்கலைக் கழகம் அமையவேண்டும். சங்க காலந்தாட்டு திராவிட மாழி இயல் ஆராய்ச்சிகள், தமிழர் களுடைய தனிக் குணங்கள், தமிழர்களுடைய உயர்ந்த பண்பாடு, வள்ளுவனுடைய நெறியிலே எதிர்கால சமுதாயத்தினரைக் கொண்டு வருதல் ஆகியவற்றில் எல்லாம் ஆராய்ச்சி செய்கிற அளவுக்கு மதுரைப் பல்கலைக்கழகம் அமைதல் வேண்டும்.

தமிழர்கள் ஒரு பாரம்பரியத்தில் வந்தவர்கள். காலத்தால் எவ்வளவோ காரியங்கள் இன்று அடிப்பட்டு போய் விட்டது. அவர்களுக்கு உற்சாகமூட்டக்கூடிய வகையில் கொள்கையாக ஒப்புக்கொள்ளப்பட்டு கொங்கு நாட்டில் தமிழ் பாட போதனு மொழித் திட்டம் துவங்கப்பட்டு இன்று சரியாக நிறைவேறுத நிலையில் இருக்கிறது. நாம் தமிழைப் பற்றி பேசுகிறோம். டெல்லி போரசில் தமிழ் ஆட்சிமொழியாக வேண்டும், அது பரீட்சை மொழியாக வேண்டுமென்றெல்லாம் பேசுகிற இந்த நேரத்தில் இன்று அதுபற்றிய தெளிவான விவரங்கள், தெளிவான நோக்கங்கள், ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் பவர்ஸ் ஆஃப் தி யூனிவர்சிட்டி என்று போட்டிருப்பதில் இல்லை என்பது எனக்கு வருத்தத்தை அளிக்கிறது. மதுரை பல்கலைக் கழகம் என்றால் அது ஏதோ சென்னை பல்கலைக் கழகத்திலிருந்து எற்பட்ட ஒரு பிரிவினை அல்ல. அது பத்தோடு பதினொன்றல்ல. இது ஆலுக்கு விழுதே தவிர வாழைக்கு கன்று அல்ல. இன்று எற்பட இருக்கிற மதுரை பல் கலைக் கழகம் தாய் புனித திறந்த நோக்கங்களை கொண்டிருக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறது. இதையெல்லாம் பொறுக் குக் குழு சிந்திக்க வேண்டும். இன்று அப்பல்கலைக்கழகம் ஏற் படுகிற நேரத்தில் மிகத் தலை சிறந்த விற்பன்னர்கள், நல்ல ஆராய்ச்சியாளர்கள் இவர்களுக்கு எவ்வளவு சம்பளம் கேட்டா லும் அதைப் பொருட் படுத்தாது அவர்களை அங்கு அமைக்க வேண்டும். இன்று யூனிவர்சிட்டி கிரான்ட்ஸ் கமிஷன் கொடுக்கிற மான்யத்தை பயன்படுத்திக் கொண்டும் கல்லூரி போராசிரியர்களுக் கும், விரிவுரையாளர்களுக்கும் நம் பல்கலைக்கழகத்தில் நல்ல சம்பளம் கொடுக்கப்படுவதில்லை என்ற குறைபாடு இருக்கிறது. சென்னை பல்கலைக் கழகத்திலானலும் சரி, அண்ணாமலை பல்கலைக் கழகத்திலானலும் சரி அங்குள்ள போராசிரியர்களுக்கு நம் அர சாங்கம் அவர்களுடைய பங்குத் தொகையை கொடுக்காததால் யூனிவர்சிட்டி கிரான்ட்ஸ் கமிஷன் கொடுக்கிற பணம் கூட அந்த ஆசிரியர்களுக்கு வந்து சேரவில்லை. ஆகவே, நல்ல வகையில் எந்தத் துறையானலும் சரி, சரித்திரமானலும் சரி, வரலாறுனலும் சரி, நல்ல ஆற்றல் உள்ளவர்களைப் போட்டு இவர் இந்த பல்கலைக் கழக போராசிரியர் என்று சொல்லுவதைவிட இந்த போராசிரியர் மதுரை பல்கலைக் கழக தத்துவப் போராசிரியர், இவர் மதுரை

[திரு. கே. ஏ. மதியழகன்] [30th July 1965

பல்கலைக் கழக பௌதிக பேராசிரியர், ரசாயன பேராசிரியர் என்று அமைகிற வகையில் ஆற்றல் உள்ளவர்களை ஆசிரியர்களாகப் போட வேண்டும். நல்ல ஆற்றல் உள்ளவர்களை ஆசிரியர்களாக தேர்ந்தெடுக்க வேண்டும். அப்படி தேர்ந்தெடுக்கிற அம்சங்களைப் பற்றியும் பொறுக்குக் குழு சிந்திக்க கடமைப்பட்டிருக்கிறது. இன்னொன்றையும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னது போல் இன்னும் பல பல்கலைக்கழகங்கள் ஏற்படலாம். திருச்சி பல்கலைக்கழகம் ஏற்படலாம், அதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. கோவையில் ஒரு கிராமாத்திர பல்கலைக்கழகம் ஏற்படலாம். இன்னும் பலதொழில் நுட்பப் பள்ளிகள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. இன்று கோவை நகரத்தில் மட்டும் 30-க்கு மேற்பட்ட கல்லூரிகள் இருக்கின்றன. அங்கு பாரஸ்ட் காலேஜ், அக்ரிகல்ச்சரல் காலேஜ் என்றும் விஞ்ஞானக் கல்லூரிகள் பலவும் இருக்கின்றன. இன்னும் பல தொழில் நுட்பக் கல்லூரிகள் கோவையில் ஏற்படலாம். கோவைப் பல்கலைக்கழகமே ஏற்படலாம். காவேரி ஆற்றின் ஓரத்தில் இன்று திருச்சியில் ஒரு பல்கலைக்கழகம் ஏற்படலாம். இன்னும் இரண்டு பல்கலைக் கழகங்கள் ஏற்படுவதற்கான அறிகுறிகள் இன்று ஏற்பட்டு இருக்கின்றன. சென்னை பல்கலைக்கழகத்தில் முன்பு முப்பது கல்லூரிகள்தான் இருந்தன. ஆனால் இன்றோ 100-க்கு மேற்பட்ட கல்லூரிகள் இருக்கின்றன. இந்நிலையில் இன்னும் பத்து ஆண்டுகளில் இன்னும் இரண்டு பல்கலைக்கழகங்கள் துவக்குவதற்காக வற்புறுத்த வேண்டிய நிலை ஏற்படும். இன்னொன்றையும் நான் பொறுக்குக் குழுவின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். சென்ட் சபை என்பது மிகவும் அதிகாரம் படைத்த உயர்ந்த ஒரு உறுப்பாகும். அதற்கு கட்டுப்பட்டுத்தான் சிண்டிகேட் எல்லோரும் செயல்படுகிறார்கள். இங்கு கொடுத்திருக்கிற அமைப்பு ஜனநாயகத்திற்கே ஒரு குழி தோண்டும் வகையில்தான் இருக்கிறது. என் இதைச் சொல்கிறேன் என்றால் இந்த மசோதாவில், 15 உறுப்பினர்கள் பட்டதாரிகள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று ஒரு விதி இருக்கிறது. அதே நேரத்தில் எல்லாக் கல்லூரிகளின் ப்ரின்சிபால்களும் இதில் இருப்பார்கள் என்றும் இருக்கிறது. வைஸ்-சான்சலர், சர்க்கார் அதிகாரிகள், டயரக்டர் ஆஃப் ஹயர் எஜுகேஷன் என்றும், எவ்வளவு கல்லூரிகள் இருக்கின்றனவோ அந்தக் கல்லூரிகளின் ப்ரின்சிபால்களும் இருப்பார்கள் என்று ஒரு பெரிய பரிவாரமே இருக்கிறது. இதைப் பார்க்கும் போது ஜனநாயக ரீதியாக வருகிறவர்கள் இதில் மிகக் குறைவாக இருக்கும் நிலையே ஏற்படுகிறது.

"Fifteen members elected by registered graduates from among themselves in accordance with the system of proportional representation by means of the single transferable vote."

என்றிருக்கிறது. ஆனால் எக்ஸ் அபிஷியோ மெம்பர்களாக எல்லாக் கல்லூரி ப்ரின்சிபால்களும் இருக்கிறார்கள். அவர்கள் அவ்வளவு பேர்களும் வந்து உட்காருவார்கள். ஆனால் பட்டதாரிகளால் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் 15 பேர்களே இருப்பார்கள்.

30th July 1965] [திரு. கே. ஏ. மதியழகன்]

ஏற்கனவே நமக்கு அனுபவம் இருக்கிறது. ப்ரியாம்பிளில் சொன்னதை நிறைவேற்றுத அனுபவம் இருக்கிறது. ப்ரின்சிப் பால்களைக் கொண்டு அவர்களையே எலக்டோரல் காலேஜாக செய்து இருக்கிற முறையை ஓரளவு மாற்ற வேண்டும். சட்ட சபை அங்கத்தினர்களுக்கு இரண்டு இடங்கள் கொடுக்கப்பட் டிருக்கின்றன. நான்கு பேர்கள் அல்லது குறைந்தது மூன்று பேர்களாவது இருக்கும் நிலையில் எல்லாவற்றையும் செய்ய வேண்டும். பொறுக்குக் குழுவில் இதுபற்றி விவாதிக்க சந்தர்ப் பம் இருக்கிற காரணத்தினால் பின்னல் கூறிக் கொள்ளலாம். இந்த மதுரை பல்கலைக்கழகம் மலர்வதை நான் மனமார வரவேற் கிறேன். கனம் முதல் அமைச்சர் அவர்கள் அவர்களது 25, 30 ஆண்டு காலத்தில் எவ்வளவோ கல்லூரிகள் விழாக்கள் நடத்தி யிருக்கலாம். பாலங்கள், பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள் போன்று எவ்வளவோ திறந்திருக்கலாம். ஆனால் இந்த மதுரை பல்கலைக்கழக கான்வோகேஷன் விழாவில் அவர்கள் பெயர் பொறிக்கப் படுவதில் தனி சிறப்பு உண்டு. எதிர்கால கலைமுறையினர், தமிழக வருங்கால சந்ததிகள் எல்லோரும் நல்ல வகையில் பாராட்டுகிற வகையில் உயர்ந்த, புனிதமான நோக்கத்தோடு துவக்கப்படுகிற நல்லதொரு காரியம் இது. இதை பத்தோடு பதினென்று என்று ஆக்காமல் தமிழுக்கும், தமிழ் போதனாமொழிக்கும், விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சிக்கும் ஒரு கேந்திரமாக இருக்கக் கூடிய வகையில் இந்த பல்கலைக்கழகம் மலரட்டும்; அதிலிருந்து வாக் கூடியவர்கள் எல்லோரும் நல்ல ஆற்றலுள்ளவர்களாக அமைந்து இந்த நாட்டுக்கு சேவை செய்யட்டும் என்று மனமார வாழ்த்தி என் உரையை முடிக்கிறேன்.

*திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் தலைவர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த மதுரை பல்கலைக்கழக மசோதாவை நான் வரவேற்கிறேன். சுதந்திரம் பெற்ற பிற்பாடு தமிழகத்தில் முதன் முதலாக தோன்றக் கூடிய சர்வகலாசாலை இது. மதுரை தமிழ் சங்கங்கள் இடம் பெற்ற இடம். தேசியமும், தெய்விகமும் கமழக் கூடிய அந்த இடத்தில், மதுரமான மதுரையில் இந்த சர்வகலாசாலை இடம் பெறுகிறது. சென்னை சர்வகலாசாலை ஒரு பாரம்பரியத்துடன், நல்ல பெயருடன் திகழ்ந்து வந்திருக்கிறது. இந்த சர்வகலாசாலை மதுரையில் தோன்றுவதன் மூலம் தென் பகுதியில் உள்ள நான்கு ஜில்லாக்களில் உள்ள கல்லூரிகளை எல்லாம் அதனுடன் இணைப்ப தற்கு இந்த மசோதாவில் வழி செய்யப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் இப்போது ரெஜிஸ்டர் செய்திருக்கக் கூடிய பட்டதாரி களையும், அந்த நான்கு ஜில்லாக்களில் வசிக்கக் கூடிய பட்டதாரி களை சென்னை சர்வகலாசாலையில் ரெஜிஸ்டர் செய்திருக்கக் கூடிய வர்களையும், இனிமேல் ரெஜிஸ்டர் செய்யக்கூடியவர்களையும் இணைத்து மதுரை சர்வகலாசாலையோடு இணைப்பதற்கு இந்த மசோதாவில் வழி செய்யப்பட்டிருக்கிறது. நம் புராதன புகழை பாதுகாத்து வரக்கூடிய சென்னை சர்வகலாசாலை போன்று எல்லா மரியாதைகளையும் இந்த சர்வகலாசாலை பெறவேண்டும் என்பது தான் எல்லோருடைய ஆசையும். சென்னை சர்வகலாசாலையில்

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [30th July 1965

பட்டம் பெற்றிருக்கும் மாணவர்கள், நான் சென்னை சர்வகலாசாலை மாணவன், அந்த சர்வகலாசாலை பட்டதாரி என்று கூறி அதை பாதுகாத்துக் கொள்ள விரும்புகிறவர்கள் இருக்கலாம். இந்த மசோதாவில், இங்கு சென்னை சர்வகலாசாலையில் ரெஜிஸ்டர் செய்து கொண்டிருக்கக் கூடியவர்கள் மதுரை சர்வகலாசாலையில் ரெஜிஸ்டர் செய்யப்பட்டதாகக் கருதி அவர்கள் அவ்வாறே அழைக்கப் படவேண்டுமென்று இருக்கிறது. அது அவசியமா? அதில் ஒரு சிறிய மாற்றம் அமைத்து புதிதாக பட்டம் பெறக் கூடியவர்கள் மட்டுமே மதுரை சர்வகலாசாலையில் ரெஜிஸ்டர் செய்யலாம் என்று வாய்ப்பு அளித்தால் போதாதா என்பதைப் பற்றி ஆலோசனை செய்யலாம் என்பது என் பணிவான அபிப் பிராயம். இந்த சர்வகலாசாலையில், சென்னை சர்வகலாசாலையில் எப்படி பல மொழிகளிலும் பட்டம் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறதோ அதே போன்று எல்லா ஆகிய மொழிகளிலும் பட்டம் பெறுவதற்கான வாய்ப்பு இதிலும் அளிக்கப்பட்டிருக் கிறது. என்னுடைய ஆலோசனை, இப்போது புதிதாக ஆரம்பிக்கப்படும் சர்வகலாசாலையில் ஆசிய மொழிகள் என்று மட்டுமில்லாமல் ஏன் உலக மொழிகள் அத்தனைக்கும் இடம் கொடுத்து, அதில் பட்டம் பெறுவதற்கான வாய்ப்பையும் வசதி யையும் ஏற்படுத்திக் கொள்ளக்கூடாது என்பதைப் பற்றி ஆலோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைப் போலவே இன்னொரு ஆலோசனையும் சொல்ல விரும்புகிறேன். அதாவது சான்ஸிலராக இருக்கக் கூடிய கவர்னர் அவர்கள் வைஸ்சான்சிலரை நியமனம் செய்கின்ற விஷயத்தில், சான்சி லராக இருக்கின்ற கவர்னர் நியமனம் செய்கின்ற ஒருவர், சின்டிகேட் தேர்ந்தெடுக்கும் இருவர், இவ்விதம் மூன்று பேர்கள் கொண்ட குழுவிலிருந்து ஒருவரை சான்ஸலராக இருக்கின்ற கவர்னர் வைஸ்-சான்ஸலராக நியமனம் செய்வார் என்று மசோதா வில் வகை செய்யப்பட்டிருக்கிறது. இவ்விதம் இருப்பது சரிதானு, சான்ஸலராக இருக்கும் கவர்னர் ஒருவரை முன்னாலேயே நியமனம் செய்துவிட்டு பின்னால் சின்டிகேட்டிலிருந்து இருவரும்
30 சேர்ந்துள்ள மூவரில் இருந்து ஒருவரை திரும்பவும் கவர்னர்
...ம். நியமனம் செய்வார் என்று இருப்பது அவசியம்தானு என்பதைப் பற்றியும் ஆலோசிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவ்விதமில்லாமல் சின்டிகேட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் மூவரிலிருந்து ஒருவரை நியமனம் செய்யக்கூடிய அளவில் இருந்தால் போதாதா என்பதைப் பற்றியும் யோசிக்கலாம் என்பதை பணிவாக தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதைப் போலவே, சின்டிகேட் கூட்டுகிற பொழுது வைஸ் சான்ஸலர் கூட்டுவோர் என்றிருக்கிறது. சாதாரணமாக குழுக் களில் தலைவராக இருப்பவருக்கு கூட்டத்தை கூட்டுவிப்பதற்கு அதிகாரம் இருந்தால்கூட காரியதரிசிதான் கூட்டத்தை கூட்டு வார். இதே போன்று இருப்பதால், காரியதரிசி கூட்டத்தைக் கூட்டினாலும் தலைவர் கூட்டுவதாகத்தான் விதிகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. அதேபோன்று இதிலும் சான்ஸலரை கலந்து கொண்டு வைஸ்-சான்ஸலர் கூட்டத்தைக் கூட்டுவார் என்றே

30th July 1965] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

தெளிவாக விதியில் சொல்லி விட்டால் என்ன தவறு இருக்க முடியும் என்பதைப்பற்றி யோசிக்கவேண்டும்.

அதைப்போலவே இன்ஸ்பெக்ஷனுக்கு வழி செய்து கொடுத்திருப்பதில், ட்யூவல் இன்ஸ்பெக்ஷன் இருப்பதற்கு வழி செய்யப்பட்டிருக்கிறது. சின்டிகேட்டினுடைய பொறுப்பு என்ன என்பதை காணும்போது இன்ஸ்பெக்ஷன் செய்வதற்கான வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதே போன்று சென்ட்டுக்கும் வழி செய்யப்பட்டிருக்கிறது. சின்டிகேட்டுக்கும் சென்ட்டுக்கும் இது அவசியம் என்றிருந்தாலும் கூட, சட்டபூர்வமான வழியில் எதாவது ஒன்றின் பொறுப்பாக வரையறுக்க முடியாதா என்பதைப் பற்றியும் பொறுக்குக் குழுவில் அங்கம் வகிப்பவர்கள் பரிசீலனை செய்வார்கள் என்று நம்புகிறேன். வைஸ்-சான்ஸிலரை நியமனம் செய்வதில், சாதாரணமாக வைஸ்-சான்ஸிலர் மூன்று வருடத்திற்கு பதவியில் இருப்பார் என்றிருக்கிறது. முதன் முதலாக வருகின்ற வைஸ்-சான்ஸிலர் ஐந்து வருடங்கள் பதவி வகிப்பார் என்றும், முதல் முதலாக ரெஜிஸ்ட்ராராக வருகின்றவர் மூன்று வருடம் பதவி வகித்து வருவார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் இரண்டு விதமாக இல்லாமல், முதல் முதலாக வருகின்ற வைஸ்-சான்ஸிலர் அவர்களுக்கும், ரெஜிஸ்ட்ரார் அவர்களுக்கும் ஐந்து வருடங்கள் என்றே வைத்துக்கொள்ளலாமா அல்லது மூன்று வருடங்கள் என்றே வைத்துக்கொள்ளலாமா, வைஸ்-சான்ஸிலருக்கும் மூன்று வருடங்கள் என்று நிர்ணயித்துவிடுவதில் என்ன தவறு இருக்கும் என்பதைப்பற்றியும் ஆலோசனை செய்யலாம், என்பதை இந்த ஆலோசனைக் குழுவுக்கு ஆலோசனை சொல்ல விரும்புகிறேன்.

மேலும், 45 கல்லூரிகளை சேர்த்து தொடங்குகிற இந்த மதுரை சர்வகலாசாலை எதிர்காலத்தில், இன்னும் தன்னுடைய மரபுக்கு ஏற்றார்போல், இன்னும் எதாவது தேவஸ்தானங்களிலிருந்து தனியாக தமிழ் கல்லூரி ஒன்று அமைத்து அதுவும் இந்த சர்வகலாசாலையில் அங்கம் வகிக்கின்ற முறையில் வழிவகை செய்யும் என்று நம்புகிறேன். இன்றையதினம் இருக்கக்கூடிய கல்லூரிகளில், முக்கியமாக தென் பிராந்தியத்தில் இருக்கக்கூடிய கல்லூரிகளில், ஒவ்வொரு ஜில்லாவுக்கும் குறைந்தது ஒரு என்சினியரிங் கல்லூரியை யாவது ஏற்படுத்தி, அவைகளும் இந்த சர்வகலாசாலையில் அங்கம் வகிக்கின்ற அளவுக்கு இடம் பெறும் என்று நம்புகிறேன். மதுரை சர்வகலாசாலை தேசிய மணத்தோடு இலங்க வேண்டும். இன்றையதினம் சர்வகலாசாலைகளுக்கு நாட்டினுடைய நலனில் மிகப் பெரிய பாறுப்பு இருக்கிறது. இன்றைக்கு சர்வ ரோக நிவாரணியைப்போல் இந்த நாட்டை வருங்காலத்தில் நடத்திச் செல்வதற்கு உரியவர்களை தயார் செய்கின்ற மிகப் பெரிய பொறுப்பு சர்வகலாசாலைகளுக்கு இருக்கிறது. மதுரையைப் பொறுத்தவரையில், எல்லாவிதமான தியாகமும் செய்து சுதந்திரம் பெறுவதற்கு துணை செய்த ஸ்தலம், நம் நாடு சுதந்திரம் பெற்ற பின்னால் துவக்கப்படும் முதல் சர்வகலாசாலையில் இடம் பெறக்கூடிய கல்லூரிகளில் படித்து வெளிவருகின்ற பட்டாதாரிகள் இந்த நாட்டின் எதிர்காலச் செல்வங்கள் தேசிய மணத்தோடு,

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [30th July 1965

இந்த சர்வகலாசாலே தேசிய சர்வகலாசாலே என்ற பெயரை பெறக்கூடிய அளவுக்கு திகழ வேண்டும் என்ற என்னுடைய ஆசையைத் தெரிவித்துக்கொள்கிறேன். வெகு காலமாக எதிர் பார்க்கப்பட்ட இந்த சர்வகலாசாலேயை இப்போது நடைமுறை யில் கொண்டு வந்ததற்காக நமது முதல் அமைச்சர் அவர்களுக்கும் இந்த அமைச்சரவைக்கும் என்னுடைய பாராட்டுதல்களே தெரி வித்துக்கொள்கிறேன். இந்த அமைச்சரவையினுடைய முயற்சி யினுல்தான் சீக்கிரமாக இதை நிறைவேற்ற முடிந்தது. இத்த கைய மகிழ்ச்சியை தரக்கூடிய இந்த மசோதாவை இதன் சிறப்புவிழாவில் கலந்து கொள்வது போன்ற உணர்ச்சியோடு வரவேற்கிறேன்.

திரு. ஆர். வி. சுவாமிநாதன் : கவர்னர் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை வரவேற்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். மதுரை யூனிவர்ஸிட்டி ஏற்படுகின்ற இந்த நேரத்தில் அங்குள்ள மக்கள் எவ்வளவு மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள் என்பதை இந்த சபையில் தெரிவிப்பதற்காகத்தான் இந்த நேரத்தில் நான் பேசு கிறேன். மதுரையில் யூனிவர்ஸிட்டி ஏற்படுத்துவதற்கான சகல விதமான சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறது. ஏராளமான காலெஜ் கள், மெடிக்கல் காலேஜ், என்ஜினியரிங் காலேஜ், ஆர்ட்ஸ் காலேஜ் இவைகள் எல்லாம் இருக்கின்றன. எல்லாவிதமான வசதி களும் இருக்கின்றன. அது மட்டுமல்ல, ஒரு மாகாணத்தில் ஒரு யூனிவர்சிட்டி இருக்கும் போது இன்னொரு யூனிவர்ஸிட்டி வருகிறது என்று சொன்னல் அது சிலருக்கு இஷ்டம் இல்லாமல் இருக்கும். ஆனல் நம்முடைய சென்னை யூனிவர்ஸிட்டியின் வைஸ் சான்ஸிலர் திரு. லட்சுமணசாமி முதலியார் அவர்கள் இந்த யூனிவர்சிட்டியை அமைப்பதற்கு மிகவும் உதவியாக இருந்திருக் கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, அவரை நாம் மிகவும் பாராட்டவேண்டும். எனென்றல் பத்து வருடங்களுக்கு முன்பு மதுரையை ஒரு யூனிவர்சிட்டி சென்டராக கொண்டு வரவேண்டும் என்று நினைத்து அதற்கு பல வசதிகள் செய்திருக் கிறார்கள். மதுரையில் இப்படிப்பட்ட ஒரு சர்வகலாசாலே அமைக்க வேண்டும் என்று எப்போது அபிப்பிராயம் ஏற்பட்டதோ அப் போதிருந்தே ஆதரவு கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த முறையில் அவர்களே நான் பாராட்டுகிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக இந்த யூனிவர்ஸிட்டியை கொண்டு வந்ததற்காக ஏற்படக் கூடிய பெருமை, பாராட்டுகள் எல்லாம் நமது முதலமைச்சர் அவர் களேத்தான் சாரும். அவர்கள்தான் கல்வி அமைச்சராகவும் இருந்து வருகிறார்கள். நமது முதலமைச்சர் அவர்களுடைய பதவி காலத்திலேயே இந்த மதுரை யூனிவர்ஸிட்டி ஏற்படுகிறது என்றல் அது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயம். அன்றையதினம் சிதம்பரத்தில் ராஜா ஸர் அண்ணுமலே செட்டியார் அவர்கள், தன்னுடைய ஏராளமான பொருள்களே எல்லாம் கொண்டு தனியாக ஒரு யூனிவர்ஸிட்டியை ஏற்படுத்தினர்கள். அப்போது உலகம் எங்கும் அந்த தனிப்பட்ட மனிதரைப்பற்றி புகழ்ந்து கொண்டிருந்தது, தனிப்பட்ட முறையில் யூனிவர்சிட்டியை ஏற் படுத்தவேண்டும் என்று நினைத்தால் ஏற்படுத்திவிட முடியும்.

30th July 1965] [திரு. ஆர். வி. சுவாமிநாதன்]

ஆனால் மக்களுடைய யூனிவர்ஸிட்டியாக இருப்பதற்கு ஏற்றவகையில் அரசாங்கமே ஏற்படுத்துவதுதான் நல்லது, அந்த அடிப்படையில் நமது முதலமைச்சர் அவர்கள் அரசாங்கத்திலிருந்தே இந்த யூனிவர்ஸிடியை கொண்டு வந்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. அவர்களே சொன்னார்கள், பாண்டிய மண்டலத்தில் தான் இந்த யூனிவர்ஸிட்டி வரப்போகிறது என்று. இந்த மண்டலத்திலுள்ள நான்கு ஜில்லாக்களும் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பொதுவாக பாண்டிய நாட்டிலுள்ள மக்கள் மிகவும் பிற்போக்கான நிலையில் இருக்கின்ற மக்கள். மதுரை, திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களிலுள்ள மக்களில் ஒரு சிலர்தான் மிகவும் ஆர்வத்தோடு படித்து இருப்பார்கள். கிராமாந்திர மக்களுக்கு கல்வியில் அதிக அக்கறை செலுத்தும் மனப்பான்மை இல்லாமல் இருந்தது ஒரு காலத்தில். இப்போது கிராமத்தில் உள்ளவர்களுக்கு, எவ்வளவு ஏழ்மையாக இருந்தாலும் பிள்ளைகளைப் படிக்க வைக்க வேண்டும், ஹைஸ்கூல் மட்டுமல்ல, காலேஜ் மட்டுமல்ல, மிக உயர்ந்த படிப்பு படிக்க வைக்க வேண்டும் என்ற ஆவல் இப்போது அந்தப் பகுதி மக்களுக்கு இருக்கிறது. அந்தப் பகுதி மட்டுமல்ல, மாநிலத்திலேயே எல்லோருக்கும் அந்த ஆவல் இருப்பதால் அந்த அபிலாஷையை நிறைவேற்ற நமது முதன் மந்திரி முன் வந்திருக்கிறார். அதற்காக அவர்களைப் பாராட்டவேண்டும். இன்னும் இங்கே அங்கத்தினர்கள் அநேக கருத்துக்களைச் சொன்னார்கள். அவைகளையெல்லாம் செலெக்ட் கமிட்டியினர் பார்த்துக் கொள்வார்கள்.

இந்த பல்கலைக்கழகத்திற்கு நல்ல பெயர் வைக்கவேண்டுமென்பது என்னுடைய ஆசை. அதை நமது முதன் மந்திரி அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பல்கலைக்கழகம் இருக்கப்போவது பாண்டிய நாடு. பாண்டிய நாட்டில்தான் தமிழ்ச் சங்கம் இருந்தது. அந்த முறையில் தகுந்த பெயரை வைக்கவேண்டுமென்பதை கனம் முதன் மந்திரி ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது குறித்து முதன் மந்திரி அவர்களுக்கு ரிமைண்டர் கார்னர் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த முறையில் இது சொம்பவும் பாராட்டுக்கு உரிய விஷயம், மகிழ்ச்சிக்கு உரிய விஷயம்.

மற்றப்படி ப்ரொவிஷன் என்னென்ன இருக்கவேண்டும் என்பதெல்லாம் சாதாரண விஷயம். யூனிவர்ஸிட்டி எப்படி நடத்தப்படவேண்டும் என்பதற்கு ரெகுலேஷனெல்லாம் கொண்டுவரப்பட இருக்கிறது. யூனிவர்ஸிட்டி வரவேண்டுமென்பதுதான் முக்கிய பெரிய பிரச்சினை. இப்போது யூனிவர்ஸிட்டி வருவதற்கு என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

திரு. கரு. சீமைச்சாமி : கனம் தலைவர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மதுரை யூனிவர்ஸிட்டி மசோதாவின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. கரு. சீமைச்சாமி] [30th July 1965

மதுரையில் யூனிவர்ஸிட்டி வருவதை நான் மனதார வரவேற் கிறேன். கனம் அங்கத்தினர் சுவாமிநாதன் அவர்கள் பேசும் போது மதுரை என்பது பாண்டிய நாடு, அதற்கு எப்படிப் பெயர் வைக்கவேண்டும் என்று பேசினார்கள். ஆனால் அவர் பெயரைச் சொல்லவில்லை என்று கருதுகிறேன்—மதுரை யூனிவர்ஸிட்டியை பாண்டியன் யூனிவர்ஸிட்டி என்று பெயர் வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மதுரையில் பெரிய யூனிவர்ஸிட்டி வருவது உண்மையிலேயே எல்லோரும் வரவேற்க வேண்டிய ஒரு விஷயம். கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னபோது, மதுரை யூனிவர்ஸிட்டி பல சிறப்புக்களைக் கொண்டதாக இருக்கும், அங்கு பல ஆராய்ச்சிகள் செய்யப்படும் என்று சொன்னார்கள். அப்படி இருந்தால்தான் பெருமையாக இருக்கும். சென்னை யூனிவர்ஸிட்டியைப் போல ட்யூப்ளிகேஷனுக இருந்தால் அவ்வளவு சிறப்பாக இருக்காது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதில் பார்க்கும்போது "The Madras University which is of the teaching-cum-affiliating type and the Annamalai University which is of the Unitary type" என்று, இங்கே 'டீச்சிங்' என்று போட்டிருக்கிறார்கள். மெட்ராஸ் யூனிவர்ஸிட்டியில் என்ன டீச்சிங் செய்கிறார்கள் என்று தெரியவில்லை. சாதாரணமாக போஸ்ட்-கிராஜுவேட்ஸுக்கு இன்ட்டர் கல்லீஜியேட் டீச்சிங் என்று சொல்லி வாரத்திற்கு இரண்டு மணி நேரம் சொல்லிக் கொடுக் கிறார்கள். இதைத் தவிர என்ன டீச்சிங் நடக்கிறது என்று தெரியவில்லை.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினர் அவர் களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். யூனிவர்ஸிட்டிக்குப் போய்ப் பார்ப்பதாக இருந்தால் நான் அதற்கு ஏற்பாடு செய்கிறேன். அதையெல்லாம் பார்த்து என்ன செய்கிறார்கள் என்று தெரிந்து கொள்ளலாம்.

திரு. கரு. சீமைச்சாமி: இதிலே "Madras University which is of the teaching-*cum*-affiliating type." என்று இருக்கிறது. டீச்சிங் என்றால் அண்ணாமலை யூனிவர்ஸிட்டியில் யூனிவர்ஸிட்டி காலேஜ் இருக்கிறது. கேரளா யூனிவர்ஸிட்டியில் யூனிவர்ஸிட்டி காலேஜ் இருக்கிறது. மெட்ராஸ் யூனிவர்சிட்டியில் மெட்ராஸ் யூனிவர்ஸிட்டி காலேஜ் என்று இருக்கிறதா என்று கேட்டால் இல்லை. டீச்சிங் என்று சொன்னால் . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பல்கலைக்கழகத்திலே பல பாடங்கள் டீச் செய்கிறார்கள். அதனால்தான் கனம் அங்கத்தினர் களுக்கு சௌகரியமாக இருக்குமென்று சொன்னால் நான் அவர் கள் போய்ச் சுற்றிப் பார்க்க ஏற்பாடு செய்கிறேன் என்று சொன் னேன். அவர்கள் போய் எங்கெங்கு பாடம் சொல்லிக் கொடுக் கிறார்கள், என்னென்ன பாடம் சொல்லிக்கொடுக்கிறார்கள் என்று நேராகப் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

திரு. கரு. சீமைச்சாமி: டீச்சிங் என்று சொன்னால், பார்ட்-டைம் டீச்சிங்தான் இருக்கிறது. போஸ்ட்-கிராஜுவேட்ஸுக்கு இன்ட்டர் கல்லீஜியேட் டீச்சிங்தான் நடக்கிறது. நான் சொல்லு

30th July 1965] [திரு. கரு. சிமைச்சாமி]

வது என்னவென்றால் மதுரை யூனிவர்ஸிட்டியில் மதுரை யூனிவர்சிட்டி காலேஜ் என்று இருக்கவேண்டும். அந்தமாதிரி ஏற்படுத்தி அது ஒரு மாடல் காலேஜாக இருக்க வேண்டுமென்று சொல்லுகிறேனே தவிர வேறு அல்ல. பாண்டியன் யூனிவர்சிட்டிக்கு—(திரு. ஆர். வி. சுவாமிநாதன் குறுக்கிடு) நீங்கள் சொன்னதைச் சொல்லிவிட்டேன்—யூனிவர்ஸிட்டி காலேஜ் இருக்க வேண்டும். எந்த அளவுக்கு சொல்லிக்கொடுக்கிறார்கள், எந்த அளவுக்கு ரிசர்ச் செய்கிறார்கள் என்ற முறையில் ஒரு எடுத்துக் காட்டாக இருக்கக் கூடிய முறையில், மாடல் காலேஜாக இருக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மதிப்புக்குரிய அங்கத்தினர் மதியழகன் அவர்கள் பேசும்போது புது யூனிவர்ஸிட்டியில் தமிழ் போதனா மொழியாக இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். தனம் முதல் அமைச்சருடைய ஆசை படிப்படியாக நிறைவேறும் முறையில் மதுரையில் ஆரம்பிக்கப்படும் யூனிவர்ஸிட்டியில் மீடியம் ஆஃப் இன்ஸ்ட்ரக்ஷன் தமிழாக இருந்தால் உண்மையிலேயே அதைத் தமிழகமே வரவேற்று அதனால் முதல் அமைச்சர் அவர்களுக்கு பேரும் புகழும் இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மெட்ராஸ் யூனிவர்ஸிட்டியில் இருக்கும் சப்ஜெக்ட்டுகள் மதுரையில் இருக்கக் கூடாது. இருக்கக் கூடிய சப்ஜெக்ட்டுகளைப் பிரித்து சிலவற்றில் மதுரை யூனிவர்ஸிட்டி ரிஸர்ச் செய்ய வேண்டும், சிலவற்றில் மெட்ராஸ் யூனிவர்ஸிட்டி ரிஸர்ச் செய்ய வேண்டும். இன்றைய தினம் மெட்ராஸ் யூனிவர்ஸிட்டியைப் பற்றி நாம் பெருமையாகப் பேசலாம். அகில இந்திய ரீதியில் மெட்ராஸ் யூனிவர்ஸிட்டி 10-வது ரேங்கில் இருக்கிறது. நாம் வேண்டுமென்றால் பேசலாம். ஆனால் அது 10-வது ரேங்கில் இருக்கிறது. மதுரை யூனிவர்ஸிட்டி பல சிறப்புகளோடு இருக்கவேண்டும். அதோடு மக்களோடு தொடர்பு கொண்டதாகவும் இருக்கவேண்டும். விவசாயம் என்று சொன்னால் யூனிவர்ஸிட்டி என்ன சொல்கிறது, அவர்கள் கருத்து என்ன என்று கேட்கவேண்டும். வரிகள், விலைவாசி பற்றிய பிரச்னைகள் என்றால் அவர்களுடைய கருத்து என்ன, பொருளாதார நிபுணர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று கேட்டுச் செய்யவேண்டும். அதற்கான முறையில் மதுரை யூனிவர்ஸிட்டி அமையவேண்டும். விவசாயம் என்றால் மந்திரிகள் இருக்கிறார்கள், அதிகாரிகள் இருக்கிறார்கள், அவர்கள் கருத்துக்களைக் கொண்டு முடிவு செய்கிறார்கள். அதே நேரத்தில் பொருளாதார ரீதியில் யூனிவர்ஸிட்டியின் கருத்து என்ன என்று அறிவதற்கு வழிவகை இருக்கவேண்டும். மேல் நாடுகளில், இங்கிலாந்தில், அமெரிக்காவில் ஆக்ஸ்போர்ட் யூனிவர்ஸிட்டியும், ஹார்வார்ட் யூனிவர்ஸிட்டியும் அந்த முறையில் அபிப்பிராயம் சொல்லுகிறார்கள். அவர்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டு நடவடிக்கை எடுக்க வழிவகை ஏற்படவேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

மதுரை யூனிவர்ஸிட்டியின் வைஸ்-சான்ஸலர் யார் என்று இப்போதே ஹேஷ்யங்கள் அடிபடுகின்றன. இவர் வருவார், அவர் வருவார் என்று. வைஸ்-சான்ஸலரை நியமிக்கும்போது நான்

[திரு. கரு. சீமைச்சாமி] [30th July 1965

கனம் முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்—ஹேஷ்யங்களில் அடிபடும் பெயர்களை நான் இங்கே சொல்ல விரும்பவில்லை—நல்ல முறையில் பார்த்து, நல்ல நிர்வாகத் திறமை உள்ளவராகப் பார்த்து, அதுவும் சிறப்பாக யாரும் நினைக்காத ஒருவரை (குறுக்கீடு) திறமை உள்ளவராக ஒருவரை நியமிக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன் . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் இப்போதே சொல்லுகிறேன். முற்றிலும் தகுதி உள்ளவராகவும், கனம் அங்கத்தினர் சீமைச்சாமி நினைக்காத ஒருவரை, யாரும் நினைக்காத ஒருவரை நியமிக்கிறேன்.

திரு. கரு. சீமைச்சாமி: தமிழ் ஆர்வம் உள்ளவராகவும் இருக்க வேண்டும். மற்றப்படி செலெக்ட் கமிட்டியிலே நான் சொன்ன கருத்துக்களைப் பரிசீலிக்கவேண்டுமென்று சொல்லி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. வி. எஸ். எஸ். மணி:** கனம் தலைவர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள மதுரை சர்வகலாசாலை மசோதாவை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். உண்மையிலேயே மதுரை மாவட்டத்தைச் சார்ந்தவன் என்ற வகையிலே மதுரை பல்கலைக் கழகம் அமைப்பதை நான் மனதாரப் பாராட்டுகிறேன், மகிழ்ச்சி அடைகிறேன்.

தென் மாவட்டங்களைச் சேர்ந்த இந்த பல்கலைக்கழகமானது, உண்மையிலேயே தமிழ் மாவட்டங்கள், தமிழ் மனம் மணக்கக் கூடிய இந்த மாவட்டங்கள், அந்தப் பகுதியில் ஒரு பல்கலைக் கழகம் ஏற்படுகிறது என்றால் அது தமிழ் பல்கலைக் கழகமாக இருக்கவேண்டுமே தவிர வேறு எதற்கும் கருதி அல்ல என்பது எனது கருத்து. இந்தப் பெயரிலேயே மதுரைப் பல்கலைக் கழகம் என்று சொல்லுவதைவிட—மதுரை என்றாலே தமிழ், தமிழ் என்றாலே மதுரை, மதுரைக்கும் தமிழுக்கும் அதிகமாகத் தொடர்பு இருக்கிறது அந்த முறையில்—மதுரைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் என்ற பெயர் சூட்டினால் சாலச் சிறந்ததாகும். என்பது எனது தாழ்மையான கருத்து.

இந்த மசோதாவை மேலோட்டமாகப் பார்த்தால் முழுக்க முழுக்க இந்தப் பல்கலைக் கழகத்திற்குப் பூரண சுதந்திரம் கொடுத்ததாகத் தெரியவில்லை. ஒரு பல்கலைக் கழகம் என்றால் பூரண சுதந்திரம் கொண்ட அட்டானமஸ் பாடியாக (Autonomous Body) இருக்கவேண்டும். அந்த முறையில் இந்த மசோதா அமையவில்லை என்பது எனது கருத்து. குறிப்பாக ஒன்று சொல்கிறேன். இந்த மசோதாவின் 28-வது பிரிவிலே பினான்ஸ் கமிட்டி என்ற ஒரு கமிட்டிபற்றிக் கூறப்பட்டிருக்கிறது. அந்த பினான்ஸ் கமிட்டியில் சர்க்காருடைய பினான்ஸ் செக்ரடரி இருக்கவேண்டும் என்று விதி இருக்கிறது. ஏன் சர்க்காருடைய பிரதிநிதியாக ஒரு பினான்ஸ் செக்ரடரி இருக்கவேண்டும்? பல்கலைக் கழகம் சம்பந்தமான கமிட்டியில் கல்வி மனப்பான்மை கொண்டவர்கள், கல்வி நோக்குடன் கூடியவர்கள் இருக்கவேண்டும், பினான்ஸ் நோக்குடன்

30th July 1965] [திரு. வி. எஸ். எஸ். மணி]

கூடியவர் இருக்கக்கூடாது. சர்க்கார் பிரதிநிதியாக பிளுன்ஸ் செக்ரடரியை வைத்தால், பிளுன்ஸ் நோக்குடன்தான் அவர் இருப்பார், கல்வி நோக்குடன் அவர் இருக்கமாட்டார். எனவே சர்க்கார் பிரதிநிதி ஒருவர் இருக்கவேண்டுமானால் கல்வி இயக்குநர், டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன், ஒருவர் இருந்தால் போதும். இதை ஒரு சர்க்கார் ஸ்தாபனமாக ஆக்காமல், கவர்ன்மெண்டு பாடியாக ஆக்காமல் இருக்கவேண்டும். இது ஒரு பூரண சுதந்திரமுள்ள ஸ்தாபனமாக அமையவேண்டும் என்பது என்னுடைய ஆசை. பிளுன்ஸ் கமிட்டியில் சர்க்கார் பிரதிநிதி ஒருவர் கல்வி இயக்குநர் இருந்தால் போதும். பிளுன்ஸ் செக்ரடரி இல்லாமல் இருந்தால் சிறந்ததாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. செலக்ட் கமிட்டி இதைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை பல்கலைக் கழகம் ஒரு நிதிநிலை ஸ்டேட்மெண்டு கொடுப்பதாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதைமாற்றி, ஆண்டுதோறும் ஒரு பிளுன்ஷியல் ஸ்டேட்மெண்டு கொடுக்கவேண்டும் என்ற முறையில் ஏற்பாடு செய்தால், அந்த ஸ்தாபனம் நல்ல முறையில் நடைபெறும் என்பது என்னுடைய கருத்து.

வைஸ்-சான்ஸலர்பற்றி நமது நண்பர், உறுப்பினர் சிமைச்சாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். வைஸ்-சான்ஸலர் எவ்விதம் இருக்க வேண்டுமென்றால், கல்வி சம்பந்தப்பட்ட, கல்வியிலே மேதையாக, கல்விக்காகத் தியாகம் செய்யக்கூடிய ஒரு தபசாகத்தான் இருக்க வேண்டும். அரசியல் நோக்குடன், அரசியல் மேதை, அரசியல் தியாகி என்று கருதி யாரையும் வைஸ்-சான்ஸலராக (துணை வேந்தராக) நியமிக்கக் கூடாது என்பது என்னுடைய வேண்டுகோள். முழுக்க முழுக்க, கல்வி வளர்ச்சியில் அக்கறை உடையவராக, குறிப்பாகத் தமிழ் ஆர்வம் உள்ளவராக இருக்கவேண்டுமே தவிர, அரசியல் நோக்கம் கொண்டவராக இருக்கக் கூடாது என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திருமதி சி. குழந்தையம்மாள் : கனம் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ் நாட்டிலே மதுரைப் பல்கலைக் கழகம் சிறந்த முறையிலே ஏற்படுவதுபற்றி என்னுடைய மகிழ்ச்சியை நான் முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் காலத்திலே, இன்றைக்கு இருக்கக்கூடிய அமைச்சர் அவை தமிழ் நாட்டிலே மூன்றுவதாக ஒரு பல்கலைக் கழகம் நிறுவுவதற்கு அரும்பாடுபட்டு, சிறந்த முயற்சியோடு இந்த நிறுவனத்தை ஏற்பாடு செய்தமைக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய கருத்திலே தோன்றிய ஒரு சில எண்ணங்களைச் சொல்ல விரும்புகிறேன். எந்த முறையில் இந்தப் பல்கலைக்கழகம் அமைய வேண்டும் என்று நான் விரும்புகிறேன் என்பதுபற்றிக் குறிப்பிடுகிறேன்.

[திருமதி சி. குழந்தையம்மாள்] [30th July 1965

நமது மாகாணத்தில் சிறப்பாக எல்லாத் துறைகளிலுமே எடுத்த காரியங்களை நல்ல முறையில் முடிக்கக் கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது. நமது மாகாணத்தில் இரண்டு பல்கலைக் கழகங்கள் நல்ல முறையில் பணியாற்றிக்கொண்டு வருகின்றன என்பது நாம் அனைவரும் அறிந்ததே. இன்றைக்குப் புதியதாக ஏற்படக்கூடிய பல்கலைக்கழகம் இன்னும் சிறந்த முறையிலே மற்ற நாட்டினர்கள் பாராட்டக்கூடிய முறையிலே அமைய வேண்டும் என்பது என்னுடைய விருப்பம். இன்றைக்கு இருக்கக் கூடிய பல்கலைக் கழகங்களில் பட்டம்பெற்ற பெண்மணிகள் பல்வேறு துறைகளிலே பணியாற்றி வருகிறார்கள். அந்த அடிப்படையைக்கொண்டு இன்றைக்கு நம் மாகாணத்தில் முழுவதும் பார்ப்போமானால், உயர்நிலைப் பள்ளிகளிலும் சரி, கலைக்கல்லூரிகளிலும் சரி, இன்னும் சயின்ஸ் முதலிய பாடங்களைப் படிப்பதிலும் சரி, எளிதான முறையிலே படிக்கக்கூடிய வாய்ப்பு பெண்மணிகளுக்கு இருக்கிறது. ஆகையினால், மூன்றாவதாக ஏற்படக் கூடிய இந்தப் பல்கலைக் கழகத்திற்கு மற்றப் பல்கலைக் கழகங்களில் இருக்கக்கூடிய சிறப்பைவிட ஒரு சிறப்பு என்னவாக அமைய வேண்டுமென்று சொன்னால், பல்வேறு துறைகளுக்கும் நிறைந்த அளவு பல்கலைக்கழகம், பல பல பட்டங்களைப் பெற்ற பெண்மணிகள் தலைமை தாங்க வேண்டும், தலைமை தாங்கி அந்த இடத்தைச் சிறப்பிக்க வேண்டும், அவர்கள் அங்கே பொறுப்பு ஏற்கவேண்டும் என்பது என்னுடைய போவா. சிறப்பாகச் சொல்லப் போனால், வைஸ்-சான்ஸலராகப் பதவி யேற்கக் கூடியவர் ஒரு பெண்மணியாக அமைந்தால் அது உலகத் திற்கே ஒரு எடுத்துக்காட்டாக அமையும் என்பதை மிகப் பணி வோடு அமைச்சர் அவர்களுக்கு நான் கூறிக் கொள்ள விரும்பு கிறேன். நம்முடைய வைஸ்-சான்ஸலர்களைப்போல தகுதியுடைய பெண்கள் இன்றைக்கு இந்த நாட்டில் இருக்கிறார்கள். ஆகவே, மூன்றாவதாக அமைய இருக்கிற இந்தப் பல்கலைக்கழகத்திற்குச் சிறந்த திறமை படைத்த, அதனை நிர்வாகம் செய்யக்கூடிய ஒரு பெண்மணியை வைஸ்-சான்ஸலராக நியமிக்க வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.

அடுத்தபடியாக, இரண்டு பல்கலைக் கழகங்களில் இருக்கக் கூடிய சிறப்போடு கூட, வேறு பல சிறப்புக்களைப் பெற்று இந்தப் பல்கலைக் கழகம் அமைய வேண்டும் என்று சொன்னால், தாய்-சேய் நலத்திற்காக இந்தப் பல்கலைக் கழகத்தில் ஒரு தனி இடம் கொடுக்க வேண்டும். மாதர் நலம், குழந்தைகள் நலம் என்று சொல்லி 1, 2 ஹோம் சயின்ஸ் கல்லூரிகளை நாம் அமைத்திருக் கிறோம். இன்றைக்கு படித்து வருகிற பெண்களும், ஆண்களும் கூட—இதை நான் குறையாகச் சொல்லவில்லை—அவர்கள் படித்து வருகிற படிப்பிற்கும் வாழ்விற்கும் தொடர்பு இல்லாமல் இருக்கிறது. சிறிது தொடர்பு உள்ளவர்களாக இருப்பவர்கள் பல பேர்கள் என்றால், சில பேர்கள் விஷயத்தில் முற்றிலும் தொடர்பற்று இருக்கிறது. படிக்கின்ற படிப்புக்கும், வாழ்க்கைக் கும் தொடர்பு இருக்க வேண்டும், வாழ்க்கையில் வெற்றி ஏற்பட வேண்டும். படிப்பிற்கும், வாழ்விற்கும் நெருங்கிய தொடர்பு

30th July 1965] [திருமதி. சி. குழந்தையம்மாள்]

இருக்கிறது என்பதை எடுத்துக்காட்ட, மதுரைப் பல்கலைக் கழகத்தில் முதல்படியாக தாய்களுக்கும், சேய்களுக்கும், நெருங்கிய பயிற்சி கொடுத்து, அவர்களை நல்ல முறையில் உருவாக்கக்கூடிய ஒரு பணியை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, இந்தப் படிப்பு கிராமிய முன்னேற்றத்தின் அடிப்படையில் அமைய வேண்டும். உதாரணமாகச் சொல்லப் போனால், இன்றைக்கு நம்முடைய கிராமங்களிலுள்ள விவசாய மனப்பான்மை உள்ளவர்கள் பெரும்பாலோர் படிக்க ஆசைப்பட்டு வருகிறார்கள். படித்த பிறகு, அவர்கள் முன்பு சாதாரணமாக செய்து வரக்கூடிய தொழிலைக் கூட கைவிடக் கூடிய முறையில் நிலைமை அமைகிறது. ஆகையினால், அவர்களுடைய படிப்பிற்கும், அவர்கள் செய்து வருகிற தொழிலுக்கும் தொடர்பு கொண்டு, அதில் வெற்றி கண்டு, அது இந்த நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு ஒரு வழியாக அமையக் கூடிய முறையில், அவர்களுடைய படிப்பு அமைய வேண்டும். அது கிராமிய நலன், கிராம முன்னேற்றமாக அமைய வேண்டும்.

அடுத்தபடியாக, இன்றைக்கு நம்முடைய பல்கலைக் கழகங்களில் இரண்டிலும் ஆன்மிகத் துறையில் நல்ல பயிற்சி கொடுக்கிறார்கள் என்றுக்கு. அது போதாது என்று நான் கருதுகிறேன். தேவாரம், திருவாசகம், அருட் பாடல்கள் ஆகியவற்றில் மிக அருமையான கருத்துக்கள் பொதிந்து கிடக்கின்றன. அவற்றை ஆராய்ச்சி செய்து, அந்த ஆராய்ச்சியின் அடிப்படையில், நமக்கு இருக்கக்கூடிய சிறந்த பண்பாட்டில், அடிப்படையில், அந்தப் பாடல்களில் இருக்கக்கூடிய அனுபவம் மிக்க கருத்துக்களை, அதாவது எக்காலத்திலும் மாற்றமுடியாத பல கருத்துக்களை, பல பேர் உள்ளத்தில் பதியவைக்கக்கூடிய முறையில், ஆன்மீகத் துறையில் முக்கிய பயிற்சி கொடுக்கக்கூடிய முறையில் இந்தப் பல்கலைக்கழகம் அமைய வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

அடுத்தபடியாக, இன்றைக்கு நாம் படிக்கிறோம் என்று சொன்னால், நம்முடைய படிப்பின் தரம் குறைவாக இருக்கிறது என்று சொன்னால், அது கேட்பதற்கு கஷ்டமாகத் தான் இருக்கிறது. அப்படியில்லாமல் ஆழமான படிப்பாக இருக்கவேண்டும். அத்தப் படிப்பிற்கு வசதி ஏற்படும்படி வழிவகைகள் செய்யவேண்டும் இந்த மதுரைப் பல்கலைக்கழகம். பாரதியார் பாடினார் :

> " பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
> தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
>
> இறவாத புகழுடைய புதுநூல்கள்
> தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும். "

தமிழ் நாட்டிலே இருக்கிற சிறந்த ஆழமான படிப்பைக் கொண்டிருக்கிறவர்கள், அறிஞர்கள் மற்ற நாடுகளுடைய மொழிகளில் திறமை பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவ்வப்பொழுது ஆங்கிலம், ஜெர்மனி, சீன, ரஷ்ய மொழிகளில் ஏற்படக்கூடிய புதுமையான கருத்துக்களை உடனுக்குடன் மொழிபெயர்த்துத் தமிழ் நாட்டு

[திருமதி. சி. குழந்தையம்மாள்] [30th July 1965

மக்களுக்கு நாளுக்கு நாள் வழங்குவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப் படவேண்டும் இந்த மதுரைப் பல்கலைக்கழகத்தில். ஒரு மாதம் ஆகிவிட்டால் பழையதாகப் போய்விடுகிறது. ஒரு அறிஞர் தமிழும், ஆங்கிலமும் கற்றிருந்தாலும், ஜெர்மனியில் தோன்றக் கூடிய புதிய கருத்துக்களை ஆங்கிலத்தில் இருந்தால் அதைப் படித்து, மொழி பெயர்த்துக் கொடுப்பதற்குக் காலதாமதம் ஆகிறது. ஆங்கிலம், ஜெர்மனி மொழி, மற்ற 4, 5 மொழிகளை ஒரே பல்கலைக் கழகத்தில் கற்கக்கூடிய வாய்ப்பு இன்றைக்குக் குறைந்த அளவில் இருக்கிறது. இனி ஏற்படப்போகிற மதுரைப் பல்கலைக் கழகத்தில் இதற்கெல்லாம் ஏற்பாடு செய்து, அயல்நாடுகளுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளவேண்டும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

இன்றைக்கு நம் நாட்டிலே பொருளாதாரம் வளர்வதற்கு தொழில் மிகவும் அவசியம். பல்கலைக்கழகத்தில் பட்டம்பெற்று வரக்கூடிய பட்டதாரிகளில் பெரும்பாலோருக்கு, 100-க்கு 75 பேர் களுக்குக் கலை ஆர்வம் மட்டும் தனியாக இருக்கிறது. அந்த ஆர்வம் இருப்பவர்களைச் சிறிது அதிகப்படியாகத் தொழில் துறையிலே மாற்றி தொழில் ஆர்வமானது நாட்டிற்குப் பயன்படுத்துவதற்கு ஆராய்ச்சி நிலையங்களை மதுரைப் பல்கலைக் கழகம் அமைக்க வேண்டும். அந்த அடிப்படையிலே, புதிதான ஒரு சமுதாயத்தை மதுரைப் பல்கலைக் கழகம் தோற்றுவித்து நாட்டின் பொருளா
11-00 a.m தாரம் வளருவதற்கு, பண்பாடு வளருவதற்கும் மதுரை மாநகரிலே ஏற்படும் இந்த ஸ்தாபனம் உதவிசெய்யும் என்கிற நம்பிக்கையைத் தெரிவித்துக் கொண்டு, மீண்டும் முதல் அமைச்சர் அவர்களைப் பாராட்டிக்கொண்டு, கனம் முதல் அமைச்சர் அவர்கள் இந்தப் பல்கலைக் கழகத்தை நிறுவுவதில் மிக ஆர்வத்தோடு இருக்கிறார் கள் என்பதனால், இந்தக் கழகம் நம்முடைய நாட்டு மக்களுக்கு கல்வித் துறையில் இருக்கும் குறைபாடுகளை நீக்கி நல்லதொரு பணியை மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* புலவர் கா. கோவிந்தன் : கனம் தலைவர் அவர்களே, மதுரை மாநகரத்தில் பல்கலைக் கழகம் அமையவேண்டும் என்ற கருத்துப் பட இந்தச் சட்டத்தை, இந்த மன்றத்தின் முன் கொண்டு வந்த தற்கு முதல் அமைச்சர் அவர்களை முதற்கண் பாராட்டிவிட்டு, என்னுடைய கருத்துக்களைக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இத்தப் பல்கலைக் கழகம் அமைய இருக்கும் இடம் மதுரை மாநகரம் என்று சொல்லும் நேரத்தில், அது சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மாநகரம் என்பது பெருமைதரும் ஒன்று. மாணிவாசகர், "ஊடலின் ஆய்ந்த, ஒண் நீத் தமிழின் துறை" என்று கோவையிலே சொல்லுகிறார்கள். சங்கம் அமைத்த முறை என்ன என்பதைப்பற்றி நமக்குச் சொல்லுகிறார்கள். கடல் சூழ்ந்த தமிழகத்தின் தென் பகுதி அழிந்த பிறகு, மதுரை மாநகரிலே கடைச் சங்கத்தை அமைக்க பாண்டிய மன்னன் தமிழ் நூல் களில் வல்ல புலவர்கள் எங்கெல்லாம் இருக்கிறார்கள் என்று தேடி-

30th July 1965] [புலவர் கா. கோவிந்தன்]

அழைத்துச் சங்கம் அமைத்தான் என்கிற வரலாறு இருக்கிறது. ஆக அப்படிச் சங்கம் அமைத்த நகரத்திலே பல்கலைக் கழகம் அமைக்கப்படுவதினால், நமக்கு மிக்கப் பெருமை. என்றாலும், இந்த நேரத்திலே தமிழ் வளர்ச்சி நாட்டிலே எந்த அளவுக்கு இருக்கிறது என்று பார்க்க வேண்டும். எல்லோரும் தமிழ், தமிழ் என்று தாராளமாக வழங்குவதினால் மட்டும், தமிழ் அறிவு நிரம்பி இருக்கிறதா என்று பார்த்தால், நிச்சயமாக இல்லை என்று சொல்லலாம். காரணம் பலப் பல. கடல் கொண்டது பல, கறையான் தின்றது பல. ஆடிப்பெருக்கில் ஏடு விடும் மூடப் பழக்கத்தினால், அரிய பெரிய இலக்கியங்கள் மறைந்து போய் இருக்கின்றன. அவைகளையெல்லாம் முடிந்தவரையில் தேடிக் கண்டுபிடித்து திரு. சுவாமிநாத அய்யர் அரும்பாடுபட்டு வெளி யிட்டு நமக்குத் தந்திருக்கிறார்கள். வெளியிட்டு இருக்கும் நூல் களை இப்பொழுது படிக்கும் நேரத்தில், அதை முழுமையாகப் படிக்கிறார்களா என்றால், நிச்சயமாக இல்லை. அடுத்து, திருக்குறளை எடுத்துக் கொண்டால்,

ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தினோடு பகர்ந்ததற்பின்—போயொருத்தர்
வாய்க்கேட்க நூலளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்கலாம்.

என்று இருக்கிறது. எந்த அளவுக்குத் தமிழ்ப் புலவர்கள் 1330 குறளையும் கற்றிருக்கிறார்கள் என்றால், வெட்கப்படவேண்டிய நிலையில்தான் இருக்கிறோம். அக நானூறு, புற நானூறு முழுமை யும் படித்தவர்கள் இல்லை. ஏதோ, அக நானூறிலிருந்து 50 பாட்டுக்கள், புற நானூறிலிருந்து 50 பாட்டுக்கள், திருக்குற ளிலிருந்து ஒரு இயல், இப்படித்தான் கற்றவர்கள் இருக்கிறார்கள். தொல்காப்பியத்திற்கு இணையான சில அருமையான நூல்கள் இருக்கின்றன. சாமிநாத தேசிகரின் இலக்கண விளக்கம் ஒன்று. தாராமங்கலம் ஆசிரியர் வரத நஞ்சியா பிள்ளை தமிழில் நல்ல பல ஆராய்ச்சிகள் செய்திருக்கிறார்கள். சுவாமி விபுலானந்த அடிகள் இசை நூல் இயற்றியிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் முழுமையாகப் படிக்கிறவர்கள் இல்லாத காரணத்தினால், இவற்றை அச்சடிப்பவர்கள் இல்லை. அப்படிப் பட்ட அவல நிலைதான் நாட்டி லே இருக்கிறது. ஆகவே இந்த நூல்களையெல்லாம் படிக்க, மீண்டும் மீண்டும் இவற்றைத் தமிழர்கள் முன்னுக் கொண்டு வர இந்தப் பல்கலைக் கழகம் பாடுபடவேண்டும் என்கிற என் கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி அருமை யான பல நூல்கள் முன்பு நல்ல வகையில் பாதுகாக்கப்பட்டு வந்தன. ஆனால் இப்பொழுது காகிதத்தில் அச்சடிக்கும் பழக்கம் இருக்கும் காரணத்தினால், அவை சிறிது நாட்களில் பொரித்த அப்பளம்போல நொறுங்கிவிடுகின்றன. இன்னும் சில ஆண்டுகளில் அவை அற்றுப் போய்விடும் நிலைமைதான் இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமையை மாற்ற இந்த மதுரைப் பல் கலைக்கழகம் பாடுபடவேண்டும்.

[புலவர் கா. கோவிந்தன்] [30th July 1965

பழங்காலச் சின்னங்களைக் காப்பாற்றுவதில் சர்க்கார் கவனம் காட்டுகிறார்கள். அதேபோல கல்வெட்டுகளில் இருக்கும் விவரங்களை வெளியிடுவதில் தயக்கம் காட்டுகிறார்கள். சில நாட்களுக்கு முன் இந்த மன்றத்தில் நான் கூறியதுபோல, உத்தரமேரூர் கல்வெட்டுகளில் இருந்து, ஊராட்சி மன்றம், அவற்றின் தேர்தல், இவைகள் பற்றியெல்லாம், அங்கே காணக்கிடைக்கின்றன. அந்த அறிவு நமக்குத் தேவை. இவற்றை அச்சடித்துக் கொடுக்க வேண்டும். தொல்பொருள் ஆராய்ச்சி நிலையங்கள் அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டும். என்னுடைய தொகுதியில், அத்தி ஆளப்பிறந்தாள் என்னுமிடத்தில், ஆராய்ச்சி நடத்துவதில், அந்த இடத்தில் ஒரு போர்டை போட்டிருக்கிறதைத் தவிர வேறு ஒன்றும் தெரியவில்லை. ஆகவே, புதை பொருள் ஆராய்ச்சி யாளர்களும், தொல் பொருள் ஆராய்ச்சி நிலையங்களும் செய்யும் இந்தப் பணியின் மூலம், தமிழர் பண்பாடு, தமிழர் நாகரிகம் இவை நாட்டு மக்களுக்குத் தெரியும் வண்ணம் இந்தப் பல்கலைக் கழகம் பாடுபடவேண்டும் என்கிற என் கருத்தைத் தெரிவிக் கிறேன்.

தாய்மொழித் தமிழை என்தன் தமிழர்தம் உடைமை [தன்னை
ஆயிரம் மொழியில் காண இப்புவி அவாவிற்று என்னும்
தோயுறும் மதுவின் ஆறு தொடர்ந்து என்தன் செவியில் [வந்து
பாயும்நாள் எந்நாள்? இன்பக்கேணியில் படியும் நாள் எந்த நாளோ?

பாரதிதாசன் தமிழ்மொழிப்பற்றிக் கண்ட இக்கனவும் நனவாக வேண்டும். அந்த வகையிலும் இந்தப் பல்கலைக் கழகம் பாடு பட வேண்டும்.

இப்படிப் பழமையே போதுமா என்றால் போதாது. புதுமையும் வேண்டும். பாரதியார் சொன்னது போல,

பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்;

இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்;

மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை யில்லை;

திறமான புலமையெனில் வெளி நாட்டோர்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்.

ஆகவே, ஆங்கிலத்திலோ, ஜெர்மன் மொழியிலோ, மற்ற மொழி யிலோ என்னென்ன நூல்கள் இருக்கின்றனவோ, அவையெல்லாம் தமிழிலும் இருக்கின்றன என்று சொல்லக்கூடிய அளவில் எல்லாம் இருக்கவேண்டும். அந்த வகையில் இயங்கவேண்டும் இந்தப் பல்கலை கழகம். அந்த வகையில் இந்த மசோதாவின்

30th July 1965] [புலவர் கா. கோவிந்தன்]

நான்காவது கிளாசை மாற்றியமைப்பது, இந்தப் பல்கலைக் கழகத்திலே தமிழ் தனித்தன்மையோடு இருக்கும் என்று செய்ய வேண்டும்.

பல்கலைக் கழகத்தின் பெயர்பற்றிச் சொல்லும்போது, கனம் அங்கத்தினர் திரு சுவாமிநாதன் அவர்களும், மற்றவர்களும், இது பாண்டியன் பல்கலைக் கழகம் என்று இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டார்கள் என்னுடைய வேண்டுகோள் என்ன வென்றால், முதல் அமைச்சர் அவர்கள் வள்ளுவர் திருவுருவப் படத்தை இந்த மன்றத்தில் திறந்து வைக்கச் செய்தார்கள். அந்த வகையில் இந்த மதுரைப் பல்கலைக் கழகத்திற்குத் திருவள்ளுவர் பல்கலைக் கழகம் என்று சொல்லுவதும் பொருத்தமாக இருக்கும் என்கிற என் கருத்தைத் தெரிவிக்கிறேன். அந்த வகையில் இந்த மசோதாவின் மூன்றாவது கிளாசைத் திருத்த வேண்டும்.

அடுத்து இந்த மதுரைப் பல்கலைக் கழகம் எங்கே அமைய வேண்டும் என்பது. மதுரையை அடுத்து அழகர் மலை இருக்கிறது. அதைப் பழமுதிர் சோலை என்பார்கள். அங்கே இயற்கை வனப்பு இருக்கிறது. அந்த இடம் மிக நன்றாக இருக்கும் என்று என் கருத்தைத் தெரிவிக்கிறேன்.

இந்தப் பல்கலைக் கழகத்தின் விதிமுறைகளைப் பார்க்கும்போது, அது முழுக்க முழுக்க கல்வி வளர்ச்சியைமட்டும் உண்டாக்கும் இடமாக இருக்கவேண்டும். அரசியலுக்கு இடம் இருக்கக் கூடாது. அது சம்பந்தமாக ஆளும் கட்சியிலிருப்பவர்களானாலும், மற்றக் கட்சிகளில் இருப்பவர்களானாலும் கருத்த வேறுபாடு கிடையாது. அந்த அடிப்படையில் பல்கலைக் கழகத்திற்கு மாசியம் கொடுக்கும் ஒரு பொறுப்பு தனிர, மற்ற எந்தவிதமான கட்டுப்பாடும் அரசாங்கம் விதிக்கக் கூடாது. அந்த வகையில் இந்த மசோதாவின் விதிமுறைகள் அமைக்கப்பட வேண்டும். பல்கலைக் கழகத் தலைவருக்கு அரசாங்கத்திடமிருந்து எந்தவித மாகவும் தொந்தரவுகள் இருக்கக் கூடாது. அப்படிச் சொல்லப் படுகிற கருத்தை ஏற்றுக்கொண்டு, அதற்கு ஏற்ற வகையில் இந்த மசோதாவின் 6, 7, 8, 9, 10, 14 ஆகிய கிளாசுகளை மாற்றி அமைக்க வேண்டும் என்கிற என் கருத்தைத் தெரிவிக்கிறேன்.

இடைக்காலத் துணை வேந்தரைப்பற்றி ஒரு கருத்துச் சொன்னார்கள். இடைக்காலத் துணைவேந்தர் யாராகவாவது இருக்கட்டும். தொடக்க நிலையில் மூன்றாண்டு காலம் போதாது. பல்கலைக் கழகத்தை நல்ல முறையில் உருவாக்குகின்ற நிலையில் ஐந்தாண்டுக் காலம் வேண்டும் என்று அரசு உணர்ந்தால் ஐந்தாண்டு இருக்கட்டும். அந்தக் காலத்தில் போடுகின்ற அடிக்கல் தான் எதிர்காலத்தில் பல்கலைக் கழகம் வளரக்கூடிய நிலைக்கு வழிகாட்டியாக இருக்கும் என்ற காரணத்தால், தமிழை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவருகின்ற அந்த எண்ணமும், தமிழால் எல்லாம் ஆகும், ஆகவேண்டும் என்ற இந்தப் பேரெண்ணமும்

[புலவர் கா. கோவிந்தன்] [30th July 1965

கொண்டு, அந்த ஒரு நிலையை உருவாக்கக்கூடிய உணர்வு உடைய ஒரு பெரியவர் அந்த இடத்திற்குத் துணைவேந்தராக ஆக வேண்டும் என்ற கருத்தைக் கூறி, இந்தப் பல்கலைக் கழகம் நல்ல முறையில் அமைய வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த மசோதாவைக் கொண்டுவந்த கனம் முதல் அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் நன்றி கூறி என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

* திரு. எஸ். ராமசாமி நாயுடு: கனம் தலைவர் அவர்களே, தொண்டர்நாதனைத் தூது விடுத்ததும், முதலியுண்ட பாலனை அழைத்ததும், எலும்பைப் பெண் உருவாகக் கண்டதும் கன்னித் தமிழ் என்று சொல்வார்கள். கன்னித் தமிழை ஏட்டிலே ஏந்தி வேகவதியை எதிர்த்துச் சென்ற வரலாற்றையும் நாம் அறிவோம். புலவர்கள் இருந்து தமிழை ஆராய்ச்சி செய்த சங்கம் இருந்தது மதுரை. அந்த மதுரை மாநகரில் ஒரு யூனிவர்சிடி இன்று ஏற்படுகிறது. 'யூனிவர்சிடி' என்று ஆங்கிலத்திலே வேண்டுமென்றே சொல்கிறேன். ஏனென்றால், தமிழன்பர்கள் பலர், 'பல்கலைக் கழகம்', 'பல்கலைக் கழகம்' என்று சொல்லி வருகிறார்கள். பல்கலைக் கழகம் என்றால் அதிலே சில்கலைகளெல்லாம் விட்டுப் போகுமோ என்ற பயம் இருக்கிறது. பல் கலைகள் படிக்கலாம் என்றாலும், சில கலைகள் விட்டுப் போகலாம் என்ற பயம் உறுத்திக் கொண்டே இருக்கிறது. ஆக, நல்ல தமிழ் வார்த்தை கிடைக்க வில்லை என்றால், 'சர்வகலாசாலை' என்று சொல்வதிலே என்ன தப்பிதம் இருக்கிறது? சகலகலாவல்லியைப் பீடத்தில் ஏற்றி மதுரையை ஆட்சி செய்து வைத்த பாண்டியன் இருந்த இடத்தில் இன்றைக்கு சர்வகலாதேவியைத் தலைமையாகக் கொண்டு சர்வ கலாசாலை ஏற்படுகிறது என்றால், 'சர்வம்' என்ற வார்த்தையைச் சேர்த்துக் கொள்வதில் என்ன தப்பிதம் இருக்க முடியும்? 'சர்வம்' என்ற வார்த்தையில் எல்லாக் கலைகளும் அடங்கிப் போகின்றன. பல்வற்றைப் படித்துச் சிலவற்றை விட்டுவிடுமோ என்ற ஐயப்பாடு இல்லாமல் அது சர்வகலாசாலையாகவே விளங்க வேண்டும் என்பது என்னுடைய ஆசையாகும். 'பல்கலைக் கழகம்' என்று பேர் வைக்க வேண்டாம் என்று நான் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதுரையிலே ஏற்படும் இந்த சர்வகலாசாலையைப் 'பாண்டிய நாட்டு சர்வகலாசாலை' என்று சொல்லவேண்டும் என்று சொன்னார்கள். அது தானாகவே அமையும் என்பது என்னுடைய எண்ணம். ஏனென்றால், மதுரையில் சர்வகலாசாலை அமையும்போது, கொங்கு நாட்டுக்குக் கோயம்புத்தூரை மையமாகக் கொண்டு ஒரு சர்வகலாசாலையும், இங்கே தொண்டை நாட்டுக்கு காஞ்சீபுரத்தை மையமாகக்கொண்டு ஒரு சர்வ கலாசாலையும் சீக்கிரமே ஏற்படலாம். சோழநாட்டுக்கு இன்றைக்கு இருக்கும் அண்ணாமலை சர்வகலாசாலையை ஏற்றுக் கொள்ளவில்லையென்றால், ஒரு சர்வகலாசாலையை ஏற்படுத்திக் கொண்டு, நாட்டுக்கு ஒரு சர்வகலாசாலை ஏற்படும்போது, அதைக்

30th July 1965] [திரு. எஸ். ராமசாமி நாயுடு]

கோயம்புத்தூர் சர்வகலாசாலை, தஞ்சாவூர் சர்வகலாசாலை, காஞ்சீபுரம் சர்வகலாசாலை என்று சொல்லாமல், கொங்கு சர்வகலாசாலை, சோழ சர்வகலாசாலை, தொண்டை சர்வகலாசாலை, பாண்டிய சர்வகலாசாலை என்று தானாகவே ஏற்பட்டு விடும். அந்த நாளை நாம் வெகு சீக்கிரத்திலேயே எதிர்பார்க்கலாம் என்பது என்னுடைய எண்ணம். எனென்றால், மதுரைப் பல்கலைக் கழகத்தில், அந்தப் பகுதிகளில் உள்ள கல்லூரிகளெல்லாம் இணையும் ஒரு வாய்ப்பு இருக்கும் காரணத்தால், பாண்டிய நாட்டிலே ஏற்படுகின்ற சர்வகலாசாலையானது இன்றைக்கு நம்முடைய சர்க்கார் 'சென்னை சர்க்கார்' என்று அழைக்கப்படுவதுபோல 'மதுரை சர்வகலாசாலை' என்று அழைக்கப்பட்டாலும், சீக்கிரமாக அது 'பாண்டியநாடு சர்வகலாசாலை' யாக மாறவேண்டும், அப்படி மாறும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அந்த ஆசை நிறைவேறும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

சர்வகலாசாலையை, தமிழ் தெய்வம் இருந்த ஆட்சி புரிந்த மதுரையிலே, தமிழை நாட்டுக்கெல்லாம் கொடுத்த மதுரையிலே இன்று நாம் வைக்கிறோம். தமிழை அறியவேண்டும், ஆராய வேண்டும் என்று எண்ணுகிறோம். அங்கே தமிழ்ச் சங்கம் இருந்து புலவர்கள் தமிழ் ஆராய்ச்சி செய்தார்கள் என்று நாம் படித்திருக்கிறோம். இன்றைக்கு சர்வகலாசாலையை அங்கே நாம் வைக்கும் போது, ஆராய்ச்சி செய்வதற்குத் தமிழே போதுமானதா, இல்லையா என்று நாம் ஆராயவேண்டும். நாட்டிலே பட்டம் கொடுக்கும் படிப்பிலும் தமிழிலே படித்தவர்களுக்குக் கொடுக்கிற பட்டமாக இருக்கவேண்டும். Bachelor of Arts என்றும், Master of Arts என்றும் சொல்லுகிறதெல்லாம் தமிழ்ப் படிப்புப் படித்தவர்களுக்கே கொடுக்க வேண்டுமே தவிர, ஆங்கிலத்தைப் பிரதானமாக வைத்து, தமிழைத் துணைமொழியாக எடுத்துக்கொண்டு படித்தவர்களுக்குக் கொடுக்கக் கூடாது என்பது என்னுடைய அபிப்பிராயம். அந்த ஆசையை மதுரை சர்வகலாசாலையில் நிறைவேற்ற வேண்டும். ஆங்கிலத்தில் ஆராய்ச்சி செய்கிறவர்கள் முதலில் சாதாரண ஆங்கில மொழியை எடுத்துக்கொண்டு, பின்னால் ஷேக்ஸ்பியர் நூல்களைப் படித்து ஆராய்ச்சி செய்து முடித்தபிறகு, அவர்களுக்கு பி.ஏ., எம்.ஏ., பட்டம் கொடுப்பதுபோல், தமிழிலும் ஆராயத்தக்க, படிக்கத்தக்க நூல்கள் பல இருப்பதால், பி.ஏ.-க்கும், எம்.ஏ.-க்கும் தமிழைப் பிரதானமாக எடுத்து, ஆங்கிலத்தையும் பிற மொழிகளையும் துணை மொழியாகக்கொண்டு படிக்கக்கூடிய முறையில் மதுரை சர்வகலாசாலையில் வகைசெய்யவேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். அதற்குத் தகுந்த முறையில் சட்ட விதிகளைத் திருத்தியமைத்து ஏற்பாடு செய்யவேண்டும் என்று களம் முதல் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

துணை வேந்தர், இணைவேந்தர் என்றெல்லாம் நாம் பேசுகிறோம். 'வேந்தர்' என்ற பதத்தை எடுத்துவிட்டு, தமிழ் அன்பர்கள் நல்ல தொரு பதத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். துணை வேந்தர் யாராக இருந்தாலும் துணைவேந்தர் சர்வகலாசாலைக்கு ஏற்படும்போது, பட்டை தேயும் வரை

[திரு. எஸ். ராமசாமி நாயுடு] [30th July 1965

உட்கார்ந்து இருந்து, கடைசியில் வண்டியை ஓட்டுவதற்கு லாயக் கில்லாமல் போகும் வரையில் இல்லாமல், ஒருசில காலம் ஒருவர் இருந்து, மற்றக் காலத்திலே மற்றவர்கள் வருவதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின் றேன். 'பேனல்' என்று போட்டு, அந்தப் பேனலில் யாராவது ஒருவரைச் சிபார்சு செய்தால் அவரையே திரும்பத்திரும்ப தூண வேந்தராக எடுத்துக்கொண்டிருக்கும் அந்த வழக்கம் மாற வேண்டும். ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறையோ அல்லது சாத் தியமான ஒரு காலத்தையோ நிர்ணயித்துப் புதிதாக ஒருவர் வருவதற்கான வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். தமிழிலே அறி வாளிகள் வந்துகொண்டே இருக்கிறார்கள். கல்வியிலே, ஆராய்ச் சியிலே பெரியவர்கள் வந்துகொண்டே இருக்கிறார்கள். அவர் கள் தங்களுடைய ஆராய்ச்சியின் பயனை சர்வகலாசாலைக்குக் கொடுக்கக்கூடிய முறையில் வாய்ப்பு இருக்க வேண்டும். ஒருவரே தான் இருந்து ஆகவேண்டும் என்று மீண்டும்மீண்டும் ஒரு வரையே நியமிக்காத அளவிற்குப் பலரை நியமிக்கும் ஒரு சந்தர்ப்பத்தை இந்தச் சட்டத்திலே நாம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கனம் முதல் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் மொழியிலே இன்றைக்குப் படித்தவர்கள் அநேகம் பேர் இல்லை என்று கனம் அங்கத்தினர் புலவர் கோவிந்தன் அவர்கள் குறைப்பட்டுக் கொண்டார்கள். தமிழ் சொல்லிக் கொடுப்பதிலே ஆர்வம் எவ்வளவு இருக்கிறது என்பதைக் கண்டு கொள்ள வேண்டுமென்றால் ஆரம்பப்பள்ளியிலிருந்து பார்க்க வேண்டும். தமிழுக்கே மிகச் சிறப்பான லகர, ளகர பேதங்கள் கீழ் வகுப்பு களிலிருந்து போதிக்கப்படுவதை நாம் காணவில்லை. 'உலகம்' என்பது 'உளகம்' என்று ஆகிவிட்டது. இப்படியெல்லாம் இருக்கத் தமிழை எப்படி ஆராய்ச்சி செய்யப்போகிறோம் என்பது நமக்குத் தெரியவில்லை. தமிழ் நல்ல முறையில் கற்பிக் கப்பட வேண்டுமென்றால் சர்வகலாசாலையில் மட்டுமல்லாமல், கீழ் வகுப்புப் படிப்புகளிலும் இன்றைக்குத் தமிழைப் போதிக்கும் பண்டிதர்களும், புலவர்களும் தமிழை முறையாகக் கற்றுக் கொடுக்கிறார்களா என்று கவனித்தாலொழிய, தமிழை மையமாக வைத்து சர்வகலாசாலையில் அறிவைப் பெறக்கூடும் என்று நாம் எதிர்ப்பார்ப்பதற்கில்லை என்று நான் மிகவும் பணிவுடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ் இன்றைக்கு மலையிலே பெய்த மழை ஆற்றிலே வெள்ளம் வந்தது போல் ஆகிவிட்டது. அப்படி எழுத்துக்கள் மாறி விட்டன. உச்சரிப்புத் தெரியவில்லை. என்ன பேசுகிறோம் என்று அறியாமல் பேசுகிறார்கள். யாராவது ஒருவர் பத்தாவது படித்த வரோ, பி.ஏ. படித்தவரோ தேர்வுக்கு வருவானால், அவரிடம், 'நீ சென்ற வருஷம் கம்ப ராமாயணத்தில் என்ன பகுதியைப் படித்தாய்?' என்று கேட்டால், இன்ன காண்டம், இன்ன படலம்' என்று கூட அவருக்குச் சொல்லத் தெரியவில்லை. ராமர், பட

30th July 1965] [திரு. எஸ். ராமசாமி நாயுடு]

சிதை என்று ஏதோ சொல்கிறீர்களே தவிர, குறிப்பாகப் பட்டத்தைச் சொல்வாரில்லை. இது பையனுடைய குற்றமா என்று நான் கேட்கிறேன். தமிழைப் படித்துப் பட்டம்பெற்று வந்தவர்கள் என்றும், புலவர்கள் என்றும் இருப்பவர்கள் தமிழைக் கற்பிக்கும் நேரத்தில் முறையாகக் கற்பிக்காத குறையே தவிர பையனுடைய குற்றமே அல்ல. பாண்டம் எதைப் பெய்தாலும் கொள்ளும். பாண்டத்திலே ஒன்றும் குற்றம் இல்லை. ஆனால், பெய்யும் பொருள் நல்லதாக இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. அப்படி நல்ல பாண்டங்களில் நல்ல பொருளைப்பெய்து, நல்ல வாசனை இருக்கும்படியாகச் செய்ய வேண்டியது நம் கடமையாகும். இனி வரும் மதுரைப் பல்கலைக் கழகத்தின் பண்டிதர்கள், புலவர்களுடையது நல்ல கைங்கர்யமாக இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய தமிழ் மொழி இன்றைக்கும் உலக வழக்கொழிந்து சிதையாமல் இருப்பதை நாம் அறிகிறோம். இதை நாம் கன்னித் தமிழ் என்று சொன்னாலும் வளரும் தமிழ் என்றுதான் பொருள். எப்போதும் கன்னியாக இருக்கவேண்டும் என்று அர்த்தம் இல்லை. நாம் தமிழினிடம் அணுகும்போது கன்னி என்று அணுகுவதில்லை. தெய்வத் தமிழ்க் கன்னி என்று பெருமதிப்போடு அணுக வேண்டும். அதை மறந்துவிடுகிறோம். தமிழ் நாட்டிலே தமிழைத் தெய்வமாகக் கொண்டாடினர்கள். தமிழ்த் தலைவியாக வைத்து, அன்னையாக வைத்து, சகலகலா வல்லியாக—சரஸ்வதி தேவியாக வைத்துக் கொண்டாடினர்கள் கன்னித் தெய்வம் என்று வைத்து பாரதியாரும், மற்றும் பல பெரும் புலவர்களும், ஆழ்வாராதிகளும் தெய்வக் காதல்கொண்டு பாடிப் பூரித்தார்கள். நாமும் தமிழை நம்முடைய அன்னையாக வைத்து அதை வளர்ப்பதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்யவேண்டும். அதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சிலசில நடைமுறைகளை மாற்றி அமைக்கவேண்டுமென்று கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். அவைகளை எல்லாம் பொறுக்குக் குழு உறுப்பினர்களிடமும், நமது முதல் அமைச்சர் அவர்களிடமும் சொன்னால் இந்த மசோதாவைப் பரிசீலிக்கிறபோது வேண்டிய மாறுதல்களைச் செய்வார்கள். நமக்கு அத்தகைய வாய்ப்பு இல்லாவிட்டாலும் அவர்கள் மூலமாக அதை நாம் செய்து கொள்ள முடியும். ஆகவே அதைப்பற்றி பேசி வீண் காலம் போக்காமல் மதுரையில் ஏற்படும் பல்கலைக் கழகம் தமிழிலே போதித்து, தமிழை வளர்ச்சி அடையச் செய்ய, உயர்வடையச் செய்ய எல்லாக் கலைகளையும் தமிழ்மூலம் சொல்லித்தரத்தக்க வழிமுறைகளைக் காணச் சிறப்பாகப் பணியாற்றும் வகையில் அமைய வேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும், அரசாங்கத்தின் கவனத்திற்கும் கொண்டு வந்து என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

[30th July 1965

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் தலைவர் அவர்களே, இந்த மசோதா இந்தச் சபையில் விவாதிக்கப்படும் இந்த நாளும், இது நிறைவேற்றப்பட்டு சட்டமாகும் நாளும் நம் சபையின் சரித்திரத்தில் முக்கியமான பொன்னாளாகும். இன்னும் நம்முடைய தமிழ் நாட்டின் கல்வி வளர்ச்சியிலே கூட மறக்க முடியாத நாளாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதனால் இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன்.

அதுவும் இந்த மசோதா மதுரை சர்வகலாசாலை என்று குறிப்பிட்டு பெயர் எப்படி வைப்பதாக இருந்தாலும், அது ஆலோசிக்க வேண்டிய விஷயம்—எந்த எல்லையைக் குறிப்பிட்டு இருக்கிறதோ அது வரவேற்கத்தகுந்தது. தெற்கே இருக்கக் கூடிய மதுரை, திருநெல்வேலி, ராமநாதபுரம், கன்னியாகுமரி ஆகிய நான்கு மாவட்டங்களை மட்டும் இந்தச் சட்டத்தின் கீழ் கொண்டு வந்திருப்பதை என் சம்பந்தப்பட்ட மட்டில் நான் வரவேற்கின்றேன். ஆனால் அரசாங்கம் இதை எந்த யோசனையோடு கொண்டு வந்திருக்கிறார்களோ? மூதல் அமைச்சர் அவர்கள் பேசிய பிறகும் கூட தெளிவாக இல்லை. இன்னும் பல மாவட்டங்களைச் சேர்ப்பதற்கு இடம் வைப்பதற்கு அப்படிவிட்டார்களா? வேறு மாவட்டங்களைச் சேர்த்து இந்த இரண்டு சர்வகலாசாலை இருந்தால் போதும் என்ற எண்ணத்தோடு சொன்னார்களா? இதற்கே பல்கலைக் கழகத்தினரிடமிருந்து ஏதாவது தடங்கல் இருக்கிறதா என்பது எல்லாம் தெளிவாக இல்லை. இருந்தாலும் இவை வேறு விஷயங்கள். ஆனால் நான் இந்தச் சபையில் இப்போதும் இந்த மசோதா பொறுக்குக் குழுவினரால் பரிசீலிக்கப்பட்டு சட்டமாக வருகிறபோதும் வற்புறுத்த விரும்புவது இன்னும் ஒரு சர்வகலாசாலை இந்த மாநிலத்தில் அமைய வேண்டும் என்பதுதான். எண்ணிக்கையிலே இப்போது மதுரையில் ஆரம்பிக்க இருக்கிற சர்வகலாசாலை மூன்றாவது என்று சொல்லலாமே தவிர, உண்மையில் இது இரண்டாவதுதான். காரணம் இப்போது இருப்பது சென்னை சர்வகலாசாலை ஒன்றுதான். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் குறிப்பிட்ட காரியங்களுக்காக குறிப்பிட்ட இடத்தில் இருக்கக் கூடிய பல்கலைக் கழகமாகும். பல கலைப் பாடங்களை ஒரே இடத்தில் சொல்லிக் கொடுப்பதனால் அது பல்கலைக் கழகமே தவிர பல கல்லூரிகளையும் இணைக்கிற பல்கலைக் கழகமாக அது பணியாற்றவில்லை. இந்த நவீன யுகத்தில் ஒரு சர்வகலாசாலை ஆற்ற வேண்டிய பணிகளைப் புரியும் நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்ல அது. இது வரை நாம் கல்விக்காக செலவழிக்கக் கூடிய தொகை முன்பு இருந்ததைவிட மூன்று மடங்கு மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள் அதிகரித்திருக்கிறது என்றாலும் பல்கலைக் கழகத்தினுடைய பொறுப்பு எந்த அளவுக்கு விஸ்தரிக்கப்பட வேண்டுமோ அந்த அளவுக்கு விஸ்தரிக்கப்பட்டிருப்பதாக நாம் திருப்தி அடைய முடியாது என்பதை கல்வியில் அக்கறை உள்ள அத்தனை பேர்களும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். சமீப காலத்தில் தேர்வுகள் சமயத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் இவைகளை எல்லாம் பார்க்கிறபோது சென்னைப் பல்கலைக் கழகத்தைப்பற்றி மக்கள் என்ன நினைப்பார்கள் என்பதை

30th July 1965] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

நாம் யோசிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முதல் நாள் பத்திரிகையில் மாணவன் தேறவில்லை என்று வருகிறது. அப்புறம் தேர்வு பெற்றுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. பத்திரிகையில் மாணவன் முதல் வகுப்பில் தேர்வு பெற்றிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. மார்க் லிஸ்டு வரும்போது மார்க்குகள் மிகவும்குறைவாக இருந்திருக்கிறது. இதைப்பற்றிக் கல்லூரி முதல்வரும், மாணவரும் ரிஜிஸ்டிராருக்கு எழுதி மார்க் லிஸ்டைத் திருத்திப் பெறவேண்டியிருக்கிறது. அந்தப் பையனே, கல்லூரி முதல்வரோ முயற்சி எடுக்காமல் விட்டிருந்தால் என்ன ஆகியிருக்கும் என்பதை யோசிக்க வேண்டும். இப்படி ஒரு நிகழ்ச்சி அல்ல. இரண்டு நிகழ்ச்சி அல்ல. பல நிகழ்ச்சிகள் இருக்கின்றன. சமீபத்தில் ஒருவரோடு பேசிக்கொண்டிருந்தேன். யுனிவர்சிடி மார்க் பெறுவதில் கூட முயற்சி செய்தால் இஷ்டப்படி பெறலாம் என்ற எண்ணமும் ஏற்பட்டிருக்கிறது. ஒரு யுனிவர்சிடியைப் பற்றி மக்கள் இப்படி அபிப்பிராயம் கொண்டிருப்பார்களேயானால் கல்வியின் தரம் எப்படி இருக்கும் ? அந்த யுனிவர்சிடியிடம் மக்களுக்கு எப்படி நம்பிக்கை ஏற்படும் ? நான் சென்னை சர்வகலாசாலையைப் பற்றிக் குறை சொல்ல வேண்டும் என்பதற்காக இந்தத் குற்றச் சாட்டுகளைச் சொல்லவில்லை. இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் உண்மையா, இல்லையா ? இன்றைக்குக் கூட ஒரு செய்தியைப் பார்த்தேன் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் அதிக மார்க்குகளை ஒரு மாணவன் பெற்றிருக்கிறான். இந்த மார்க்கை வைத்துக்கொண்டு சென்னை சர்வகலாசாலைப் படிப்புக்கான கல்லூரி தனிவகுப்புச் சேர்த்துக் கொள்ள மாட்டார்களாம். இதற்கு முந்திய கடந்த மூன்றாண்டுகளில் அந்த மாணவன் வகுப்பில் எப்படி இருந்தான் என்பதை எல்லாம் பார்த்துத்தான் சேர்த்துக் கொள்வார்கள் என்றால் இதனால் எத்தனை சங்கடம் உண்டாகும். எதற்காக ஒரு யுனிவர்சிடி என்று இருக்கவேண்டும் என்று கேட்டால் என்ன தவறு ?

இதற்கெல்லாம் காரணம் என்ன ? இந்த மாநிலத்தில் கல்வி கீழ் மட்டத்தில் எவ்வளவு அதிகமாக விஸ்தரிக்கப்பட்டு வருகிறதோ அந்த அளவுக்கு சர்வகலாசாலை விஸ்தரிக்கப்படவில்லை. மாநிலம் பூரா இருக்கிற கல்லூரி மாணவர்களின் தேர்வு எல்லாம் ஓரிடத்தில் என்று குவிக்கப்படுகிறபோது, முடிவுகள் எல்லாம் ஒரே இடத்தில் இருந்து அறிவிக்கப்படவேண்டும் என்ற நிலை வருகிறபோது இந்தச் சங்கடங்கள் எல்லாம் உண்டாகின்றன. அதைத்தவிர தனிப்பட்ட முறையில் யாருடைய நிர்வாகத்திறமையைப் பற்றியும் நான் குற்றஞ்சாட்ட வரவில்லை. எவ்வளவு திறமை உடையவராக இருந்தாலும் மனித சக்திக்கு உட்பட்டேதான் செயலாற்ற முடியும். தனி மனிதனுடைய ஆற்றலுக்கு எல்லை உண்டு. தனி மனிதன் எவ்வளவு திறமைசாலியாக இருந்தான் என்றாலும் எதையும் சாதித்துவிட முடியும் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. இந்த நிலையை உணர்ந்து மதுரை சர்வகலாசாலையைத் துவக்க இப்போது மசோதா கொண்டுவரப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நீங்கலாக குறைந்தது மூன்று சர்வகலாசாலைகளாவது நம் மாநிலத்திற்கு வேண்டும்

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [30th July 1965

என்பது என் கருத்து. அதுவே இந்தச் சபையிலும் பல்வேறு அங்கத்தினர்களால் எடுத்துச் சொல்லப்பட்டு வந்திருக்கிறது. இப் போதாவது 2 ஆவது சர்வகலாசாலையை அமைப்பதற்கு முன் வந்துள்ளது வரவேற்கத்தக்கது. அதுவும் கூட நம் ராஜ்யத்தில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பாகம் தான் இந்த யுனிவர்சிடிக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் இரண்டு பாகம் சென்னையின் கீழ்த்தான் இருக்கும். அதையும் அப்படியே வைத்துவிடாமல் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள்ளாவது மூன்றாவது சர்வகலாசாலையையும் ஆரம்பித்துவிடவேண்டும் என்று வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இந்தக் குறைகளை அப்போது தான் தவிர்க்க முடியும். திருச்சியிலிருந்து நான் வந்துள்ள காரணத்தினால் திருச்சியில் ஒரு சர்வகலாசாலையை ஏற்படுத்த வேண்டும் என்று வற்புறுத்துவதற்காக இப்படிச் சொல்வதாக நினைக்கக் கூடாது. தஞ்சை, திருச்சி, கோவை, நீலகிரி ஆகிய இந்த மாவட்டங்களை ஒன்றாக சேர்த்து மூன்றாவது யுனிவர்சிடியை வைப்பது மிகவும் பொருத்தமாக இருக்கும்.

திருச்சியில் இப்போது யுனிவர்சிடி சென்டர் ஒன்று துவக்கப் பட்டு இருக்கிறது. அதை விருத்தி செய்து, அங்கே ஒரு யுனிவர் சிடியைக் கொண்டுவரத்தக்க முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். (குறுக்கிடு) அதற்குள்ளாக கனம் அமைச்சர் அவர் கள் கோயம்புத்தூரை விட்டுவிட்டார் என்கிறார். கோயம்புத்தூ ருக்கு வேண்டாம். திருச்சிக்கு வேண்டும் என்று சொல்லவில்லை. புதுக்கோட்டையில் வைப்பதாக இருந்தாலும் எனக்கு ஆட் சேபணை இல்லை. அங்கே நிறையக் கட்டிடங்கள் இருக்கின்றன. புதுக்கோட்டையிலே வைப்பதா, திருச்சியிலே வைப்பதா அல்லது சேலத்திலே வைப்பதா, கோயம்புத்தூரிலே வைப்பதா என்று எல்லாம் நான் சர்ச்சைகளைக் கிளப்பவில்லை; மதுரை மட்டும் போதாது; இன்னொரு யுனிவர்சிடியும் வேண்டுமென்பதைத்தான் வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பொருத்த
11-30 a.m. மான இடம் எது என்று பார்த்து, அதற்காக நிபுணர்களை அந்தந்த இடங்களுக்கு அனுப்பி அவர்கள் கூறும் யோசனையின்பேரில் எந்த இடத்தில் வைக்கலாம் என்பதைப்பற்றி முடிவு செய்யலாம். பொதுவாக மையமான இடத்தில்தான் இருக்கவேண்டும். எந்த இடம் மையமாக இருக்கிறது என்பதைப் பார்த்துக் கொள்ளலாம்.

கனம் திரு. வெ. ராமைய்யா : புதுக்கோட்டை மையமான இடம், அங்கே வைக்கலாம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் அமைச்சர் அவர்கள் புதுக் கோட்டையில் வைக்கலாமென்று யோசனை கூறுகிறார்கள். நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் கேபினட்டில் இருப்பவர்கள். ஆகவே, அவர்கள் இது விஷயமாக எடுத்துச் சொல்லி நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்னொரு பல்கலைக் கழகம் இல்லாவிட்டால் நிர்வாகத்திலே உள்ள குறைபாடுகளையெல்லாம் நீக்கமுடியாது. நிர்வாகக் குறைபாடு களைப் பற்றித்தான் நான் குறிப்பாகச் சொல்லுகிறேன். தாத்தைப் பற்றிச் சொல்லவில்லை, அதுவேறு விஷயம். நிர்வாகக் குறைபாடு

30th July 1965] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

கலைப் போக்குவதற்காக, எத்தனை அதிகாரிகளைப் போட்டாலும் சரி, எத்தனை சூபர்வைசர்களைப் போட்டாலும் சரி, எத்தனை கட்டடங்களைக் கட்டினாலும் சரி, அது முடியாத காரியம். நிர்வாகக் குறைபாடுகளைப் போக்க வேண்டுமென்றால் இன்னொரு யூனிவர்சிடி அவசியம் வேண்டுமென்பதை நான் சுட்டிக் காட்டி, அதற்காக முதலமைச்சர் அவர்கள் இந்த நான்காவது திட்டத்திலேயே ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, இந்த மசோதாவிலே இருக்கக்கூடிய அமைப்புப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். யூனிவர்சிடியின் நிர்வாக அமைப்பு எப்படி இருக்கவேண்டும், அதற்கான செனட் எப்படி இருக்கவேண்டும் என்பதைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அநேகமாக சென்னை யூனிவர்சிடியில் நிர்வாக அமைப்பு எப்படி இருக்கிறதோ அதே அடிப்படையில் தான் இந்தப் பல்கலைக் கழகத் திற்கும் இந்த மசோதாவைத் தயாரித்திருக்கிறார்கள். செனட் என்பது நோக்கங்களையும், குறிக்கோள்களையும் விளக்கக்கூடிய ஒரு பகுதி. சென்னைப் பல்கலைக் கழகத்திலே உள்ளதைப்போன்ற அமைப்பே இருப்பதனாலே இந்த அமைப்புச் சிறந்தது என்று கருதுகிறார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன். அமைப் பிலே மாறுதல் வேண்டுமா அல்லது வேண்டாமா என்பதை யோசிக்கவேண்டும். என்னுடைய அபிப்பிராயப்படி சென்னை யூனி வர்சிடி இவ்வளவு தரம் குறைந்திருப்பதற்குக் காரணம் என்ன? தரம் குறைந்திருக்கிறது என்று நான் சொல்வதால்—நான் பெரிய கல்விமான் அல்ல என்பதால்—என்னுடைய வார்த்தைகளை அலட் சியப்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். தரத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், கடந்த 15, 20 ஆண்டுகளில் இந்த யூனிவர்சிடியிலிருந்து எத்தனை நிறமைசாலிகள் தோன்றி இருக் கிறார்கள். அங்கே தயாரிக்கப்பட்ட தஸ்தாவேஜுகள், செய்யப் பட்ட ஆராய்ச்சிகள், அங்கே தயாரிக்கப்பட்டு உலகம் பூராவும் அனுப்பப்பட்ட தஸ்தாவேஜுகள் அவைகள் இந்தியாவில் எவ்வாறு மதிக்கப்படுகின்றன என்பதைப் பொறுத்துத்தான் நாம் தரத்தை நிர்ணயிக்கவேண்டும். நான் யூனிவர்சிடியின் குறை களைப்பற்றிச் சொல்வதால் யூனிவர்சிடி அதிகாரிகளோ அல்லது மற்றவர்களோ குறைபட்டுக்கொள்வதில் அர்த்தமில்லை. குறை பாட்டிற்கு அதனுடைய அமைப்புத்தான் காரணம். பொதுவாக, இலாகாவை எடுத்துக்கொண்டால் இலாகாக்களிலே தனி நபர் வழி பாடு இருக்கிறது; அந்தத் தனிநபர் சர்வாதிகாரியாக மாறிவிடக் கூடிய நிலை ஏற்பட்டுவிடுகிறது. தொடர்ந்து ஒரு இலாகாவில் ஒருவர் ஒரு அதிகாரியாக இருந்தால், அவருக்கு அந்த மாவட்டத்திலே ஏற்படக்கூடிய தொடர்பு அவர்க்கு அந்த துறை யிலே ஏற்படக் கூடிய தொடர்பு இவைகள் எல்லாம் சேர்ந்து, அமைச்சர் அவர்கள் போடக்கூடிய உத்திரவுகள், சொல்லக்கூடிய யோசனைகளையெல்லாம்கூட அவர்கள் நிராகரித்துவிடக் கூடிய அளவுக்கு சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறது. செனட் அமைப் பதற்கு முன்பேயே முதலிலே நியமிக்கப்படுவது யார்? சான்ஸலர் தான் நியமிக்கப்படவேண்டும். கவர்னர்தான் சான்ஸலர் ஆக இருக்கிறார். கல்வியமைச்சர்தான் புரோ சான்ஸலர் ஆக

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [30th July 1965

இருக்கிறார். வைஸ்-சான்ஸலர்தான் முதலிலே நியமிக்கப்படக் கூடியவராக இருக்கிறார். ஆகவே, அந்த வைஸ்-சான்ஸலரைப் பொருத்துத்தான் இருக்கிறது ஒரு பல்கலைக்கழகத்தினுடைய எதிர் காலம். முதலிலேயே ஒரு முறை அவர் அரசாங்கத்தின் நம்பிக்கை யைப் பெற்றவராகிவிட்டால், பின்பு அவரை அந்தப் பதவி யிலிருந்து அகற்றுவது என்பது புதிதாக யாரையாவது சிருஷ்டித் தால்கூட அகற்ற முடியாது என்பதை எடுத்துக் காட்ட விரும்பு கிறேன். அடுத்தபடியாக,

The whole-time University Professors paid from University funds or endowments;

Members of the Syndicate who are not otherwise members of the Senate;

The Principals of all Colleges.

இவர்கள்தான் நிரந்தர மெஜாரிடியாக இருப்பார்கள். இவர்கள் யாரால் சிருஷ்டிக்கப்படக்கூடியவர்கள்? வைஸ்-சான்ஸல ரால் சிருஷ்டிக்கப்படுகிறவர்கள். வைஸ்-சான்ஸலருடைய தயவை நம்பி இருக்கக்கூடியவர்கள் இவர்கள். இவர்கள் எப்படிப் பகிரங்க மாக அங்கு தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல முடியும்? சட்டசபை மாதிரியல்ல செனட் என்பது மேலே இருக்கக் கூடிய நிர்வாகஸ்தர்களுடைய கோபத்திற்கு ஆளாகாமல் இருக்க வேண்டுமென்பதற்காகவும், பின்னல் தங்களுக்குக் கிடைக்கக் கூடிய சலுகைகள் போய்விடுமே என்ற அச்சத்தின் காரணமாகவும் அவர்கள் கருத்துக்களை வெளியிலே பகிரங்கமாகச் சொல்ல முடியாதபடி இருந்துகொண்டு பணிபுரியும் நிலையிலே இருக்கக் கூடிய மெஜாரிடியாக இது இருக்கிறது. இன்னும் யார் யார் இதிலே மெம்பர்களாக இருக்கிறார்கள்? 50 ஆயிரம் ரூபாய் நன் கொடை கொடுக்கக்கூடியவர்கள் யாராய் இருந்தாலும் மெம்பர் களாக இருக்கலாம்.

"All persons who make a donation of not less than Rs. 50,000 to, or for the general purposes of the University."

என்று போட்டிருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு நன்கொடை கொடுத்த மாதிரியும் பேர் இருக்கிறது; அவர்கள் நிரந்தரமாக மெம்பர்களாக ஆகியும் விடலாம். இப்படியாக அமைப்பு இருந்து கொண்டிருக்கக்கூடிய ஒரு யுனிவர்சிடியின் போக்கை யாராலுமே மாற்றமுடியாத நிலை ஏற்பட்டுவிடும். அரசாங்கத்திற்கும், யுனிவர் சிடிக்கும் நல்லுறவு மிகவும் அவசியம். அந்த நல்லுறவை, நல்லெண்ணத்தைக்கூட இது போக்கிவிடும். அதற்காக நான் யுனி வர்சிடியின் சுதந்திரத்தைப் பறிக்கவேண்டுமென்று சொல்லவில்லை. யுனிவர்சிடிக்குச் சுதந்திரம் இருக்கவேண்டும். கல்வி புகட்டக் கூடிய முறையிலே தரத்தை உயர்த்தக்கூடிய முறையிலே அதற்குச் சுதந்திரம் இருக்கவேண்டும் என்பது உண்மைதான். ஆனால் இந்த ஜனநாயக ஆட்சியிலே இந்த நாட்டின் பொருளாதாரம் எப்படியிருக்கவேண்டும், சமுதாய மாறுதல் எப்படி யிருக்க வேண்டும் என்பதை நிர்ணயிப்பது, பார்லிமெண்டும், சட்டசபை களும்தான். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்தாபனங்களாகிய

30th July 1965] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

இவைகள் என்னென்ன தீர்மானங்கள் கொண்டுவந்தாலும், திட்டங்கள் போட்டாலும், எவ்வளவு தொகை ஒதுக்கினாலும், கல்வியின் தரம் உயராது. இவ்வளவும் இருந்தாலும் அமைப்பும் சீரான அமைப்பாக இருக்கவேண்டும் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். சென்னைப் பல்கலைக் கழகத்திலே உள்ளவர்களின் எண்ணிக்கை 25 ஆக இருக்கிறது. ஆனால், மதுரைப் பல்கலைக் கழகத்திற்காகத் தேர்தெடுக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 15 ஆக இருக்கிறது. அந்த 15 மெம்பர்களும் கல்வியதிகாரிகளாக இருக்கிறார்கள். இந்தச் சபைக்கு பெரிய பெரிய நிபுணர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்ற அவசியமில்லை. நிபுணர்கள்தான் ஆட்சி செய்யமுயும் என்ற முறை உலகத்திலே இன்றைக்குப் பொய்ப்பிக்கப்பட்டுவிட்டது. மக்களுடைய பிரதிநிதிகளாக, எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், எந்த வர்க்கத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், அவர்கள் ஐந்து வருடங்களுக்கொரு முறை தங்களுடைய கொள்கையை மக்களிடம் சொல்லி அதன் பிறகு மக்களுடைய தீர்ப்பைப்பெற்றுத்தான் வரமுடியும். இந்தச் சபையிலிருந்து 2 அங்கத்தினர்கள்தான் போடப்பட்டிருக்கிறார்கள். அடுத்த பொதுத் தேர்தலில் அநேகமாக 236 உறுப்பினர்கள் இந்தச் சபையில் இருக்கலாம். ஆகவே, 236 உறுப்பினர்கள் கொண்ட இந்தச் சபையின் சார்பில் 2 அங்கத்தினர்கள் தான் போடப்பட்டிருக்கிறார்கள். ஆனால் 63 பேர்கள் மட்டுமே இருக்கும் கவுன்சிலிலும் 2 அங்கத்தினர்கள்தான் போடப்பட்டிருக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களின் பிரதிநிதித்துவம் குறைந்திருப்பது பலஹீனத்தை வற்படுத்தும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தங்கள் உத்தியோகப் பதவியின் காரணமாக இடம் பெறக்கூடியவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். வைஸ்-சான்ஸலரால் நியமிக்கப்படக்கூடிய உறுப்பினர்கள் மட்டுமே இருக்கக்கூடிய இந்த வகையிலே செனட் இருக்குமானால், இந்த செனட் யுனிவர்சிடியை நிர்வகிக்கக்கூடிய ஸ்தாபனமாக இருக்கிற காரணத்தால், நாம் என்ன குறிக்கோளை நிறை வேற்றவேண்டுமென்று நினைக்கிறோமோ அது நிறைவேறாது; கல்வியின் தரமும் உயராது. இதிலே, பவர் பாலிடிக்ஸ் நுழைவதின் மூலம் சில நபர்கள் பதவிக்காக, பட்டத்திற்காக சுற்றிக்கொண்டு செல்லக்கூடாது. வெறும் பட்டதாரிகளை உருவாக்கக்கூடிய இடமாக இந்த மதுரை யுனிவர்சிடி போய்விடக் கூடாது என்று தான் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை யுனிவர்சிடி உண்மையான நிபுணர்களை, திறமைசாலிகளை, நல்ல உத்தமர்களைத் தயாரித்துத் தரக் கூடியதாக அமைய வேண்டும். கடந்த 15 ஆண்டுக் காலத்திலே அத்தகைய பெரிய நிபுணர்களைத் தயாரித்து விட்டதாகச் சொல்லமுடியாது. முன்பெல்லாம் சாதாரணக் கல்லூரி பிரின்சிபால், ப்ரொபசர்கள் ஆகியவர்களுக்கு எப்படிப்பட்ட ஸ்டேடஸ் இருந்தது, சக்தி இருந்தது, விஷயத்தில் ஆழம் இருந்தது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இப்போது பார்க்கிறபோது விஷயத்தில் ஆழமே இருப்பதில்லை. பட்டம் கொடுத்துவிடுகிறோம் அவ்வளவுதான். படித்து

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [30th July 1965

எந்த வேலைக்குப் போக வேண்டுமென்று நினைக்கிறார்கள் என்றால் எம்.பி.பி.எஸ். படிக்கவேண்டும் அல்லது எஞ்சினீயரிங் கோர்ஸுக்குப் போக வேண்டும் என்பதிலேதான் ஆர்வம் இருக்கிறதே தவிர கல்வியை ஆழமாகக் கற்றுக் கொள்ளக் கூடிய அளவு இல்லை. வரக் கூடிய யுனிவர்சிடியில் அத்தகைய குறைபாடுகளுக்கு இடம் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் நான் இதைச் சுட்டிக்காட்டுகிறேன்.

மொழி இயலில் 'இண்டியன் அண்டு ஏஷியன் லாங்குவேஜஸ்' என்று மட்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது. என் அப்படிக் கட்டுப் படுத்த வேண்டுமென்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. தமிழ் பெயரிலே நடத்தப்படக் கூடிய யுனிவர்சிடியாக இருந்தாலும் கூட உலகத்தில் இருக்கும் எல்லா மொழிகளையும் கற்றுக் கொள்வதற்கு இடம் இருக்கவேண்டியது அவசியமாகும். அதை ஏன் அவ்வாறு கட்டுப்படுத்தியிருக்கிறார்கள் என்பதற்கான விளக்கமும் எனக்குத் தெரியவேண்டும். யுனிவர்சிடியின் தரத்தை உயர்த்துவதற்கு வைஸ்-சான்சலர் நியமிக்க வேண்டியதைப் பற்றிப் பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். பொதுவாக நம்முடைய யுனிவர்சிடியைப் பற்றி நாம் திருப்தி அடைய முடியாது. உலகத்தில் இன்றைக்கு எந்த அளவுக்கு விஞ்ஞான அறிவு பெருகியிருக்கிறது, நாம் எந்த அளவுக்குப் பின் தங்கி இருக்கிறோம் என்பதைக் கருதி அந்த வகையிலும் முன்னேற்றத்திற்குக் கொண்டு வரும் முறையில் புதிய யுனிவர்சிடி இருக்கவேண்டுமென்று என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டு இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன்.

நான் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். அந்தத் திருத்தத்தைப் பற்றி தனம் முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். நான் கொடுத்த திருத்தத்தில் சட்ட சபையிலிருந்து 18 பேரும், மேல் சபையிலிருந்து 9 பேரும் பொறுக்குக் கமிட்டியில் இடம் பெற வேண்டுமென்று கூறியிருக்கிறேன். அவர்கள் இந்தச் சபையிலிருந்து 12 பேரும், மேல் சபையிலிருந்து 6 பேரும் என்று வைத்துக் கொள்ளலாம் என்று கூறியிருக்கிறார்கள். நான், இதற்கு முன்பு இருந்த ஜாயின்ட் செலக்ட் கமிட்டிகளில் என்ன எண்ணிக்கை என்று பார்த்தேன். அதிலே மினிமம் 21 ஆகவும், மாக்சிமம் 45 ஆகவும் இருந்திருக்கிறது. 'ப்ரிவென்ஷன் ஆப் பெக்கிங்' செலக்ட் கமிட்டியில் கூட 24 பேர் இருந்திருக்கிறார்கள். இப்போது உள்ள மசோதா ஒரு முக்கியமான மசோதாவாகையால் அதிகப்படியான உறுப்பினர்களைப் போடுவது முக்கியமானது. நான் சொன்ன 18 : 9 என்பதை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் 14:7 என்ற அந்த மினிமத்திற்குக் குறையாமலாவது மாற்றவேண்டும். இந்தச் சபையிலே பலர் அதிலே இடம் பெற வேண்டுமென்ற ஆர்வத்துடன் இருக்கிறார்கள். ஆகவே, அந்த எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்று தனம் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

30th July 1965]

*திரு. ஏ. எஸ். தக்ஷிணமூர்த்தி கவுண்டர் : கனம் தலைவர் அவர்களே,

"பண் சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்
பெண் சுமந்த பாகத்தன் பேணு பெருந்துறையான
கண் சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண் சுமந்து கூலிக் கொண்டு அக்கோலால் மொத்துண்ட
புண் சுமந்த பொன்மேனி பாடுதுங்காண்"

அம்மானுய்

என்று மணிவாசகப் பெருந்தகையாரால் பாடப்பெற்ற மதுரையம்பதியிலே, திரு ஆலவாய் என்று அழைக்கப்படுகிற மதுரையம்பதியிலே ஒரு பல்கலைக் கழகம் நிறுவுவதற்கு உண்டான ஒரு மசோதாவைச் சேக்கிழார் மரபிலே வந்த ஒரு பெருந்தகையார் இந்த மாமன்றத்தின் முன்பு கொண்டு வந்திருக்கின்ற ஒரு நிலையினை நான் மனப்பூர்வமாகத் தமிழர்கள் சார்பிலே வரவேற்கிறேன்.

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ" எனத் தொடங்கி
. . . நீ அறியும் பூவே"

என முடித்து ஒரு பாடலை எழுதி தருமி என்ற அந்தணனது கையிலே கொடுக்கின்றான் ஒரு புலவன். அந்தப் புலவன் யார் என்ற விஷயத்தைக் மதுரையம்பதியிலே திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஆலவாய்ச் சொக்கன் என்ற குறிப்பு அந்த ஏட்டிலே எழுதப்பட்டிருந்தது. அதைத் தருமி என்ற அந்தணன் பெற்று நக்கீரன் தலைவராக இருந்த தடைபெற்ற கடைச் சங்கத்திலே கொண்டு சமர்ப்பிக்கிறான். அந்தப் பாடலைப் படித்த நக்கீரன், இந்தப் பாடலிலே உள்ள பொருள் குற்றம் உடைத்து என்ற ஒரு நிலையிலே அந்தப் பாடலைப் பாடிய புலவனை இங்கு அழைத்து வாருங்கள் என்று கூறுகிறான். ஆலவாய்ச் சொக்கன் ஒரு புலவன் வடிவிலே கடைச்சங்கத்திற்கு எழுந்தருளுகிறான். எழுந்தருளியவுடனே சொக்கநாதன் 'சங்கை அறுத்திடும் இந்தக் கீரனே என்னுடைய கவியை ஆராயும் உள்ளத்தனே' என்று கூறுகின்றான்.

அப்போது நக்கீரன் சொல்லுகிறான்—

"சங்கருப்பது எங்கள் குலம் சங்கரனுக்கேது குலம்
பங்கமுறச் சொன்னால் பழுதாமோ—சங்கை
அரித்துண்டு வாழ்வோம் அரசனைப் போல
இரத்துண்டு வாழ்வதில்லை"

என்று கூறுகின்றான் கீரன். உடனே புலவனுக வந்த ஆலவாய்ச் சொக்கனுக்கும் கோபம் வீரிட்டு எழுகின்றது. நெற்றிக் கண்ணைக் காட்டுகிறான். அப்போது தமிழ்ப் புலவனான கீரன் கூறுகின்றான் 'நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் உன்னுடைய கவிதை பொருட் குற்றமுடைத்து, நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே' என்று அஞ்சாது கூறுகின்றான். அந்த ஒரு நிலையிலே இருந்த

[திரு. எ. எஸ். தக்ஷிணமூர்த்தி கவுண்டர்] [30th July 1965

தமிழ்ப் பரப்பரையிலே வந்த மாரெரும் புலவன் கீரனுல் நிலைமை யேற்று நடத்தப்பட்ட கடைச்சங்கத்திலிருந்து பணியாற்றிய தென் மதுரையிலே, ஆலவாயிலே ஒரு பல்கலைக் கழகம் நம் முடைய முதன் மந்திரி அவர்களால் கொண்டு வரப்படுவது மிகவும் சிறப்புடையதாகும். நான் முன்பே குறிப்பிட்டப்படி நம்முடைய முதன் மந்திரி அவர்களுடைய சேக்கிழார் பரம்பரைக்கும் மதுரைக்கும் மிகவும் தொடர்பு உண்டு. தெய்வ மனம் கமழும் என்று பேசுகின்ற நிலையிலே, சிவ மனம் கமழுகின்ற சேக்கிழார் மரபிலே வந்த பெருந்தகையார் மதுரையிலே பல்கலைக் கழகத்தை நிறுவ மசோதா கொண்டு வந்திருக்கின்ற பாங்கு—

"தவமும் தவமுடையார்க்கு ஆகும் அவமதனை
அஃதிலார் மேற் கொள்வது"

என்ற வள்ளுவனுடைய கூற்றுக்கேற்ப அமைந்திருக்கிறது என் பதைக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். அந்த நிலையிலே, கடைச் சங்கம் இருந்த, கீரனைத் தலைவராகக் கொண்டு தமிழை ஆராய்ந்த தென் மதுரையிலே இப்போது பல்கலைக் கழகம் ஏற்பட இருக்கிறது.

முதற்சங்கம் என்று ஒன்று இருந்ததாகவும், அப்போது தொல் காப்பியர் இருந்து தமிழை ஆராய்ந்ததாகவும், மதுரையம்பதி என்று சொல்லப்படுகிற நகரம், இன்று இருக்கிற கன்னியாகுமரி க்கு அப்பாலுள்ள கடலால் கொள்ளப்பட்ட நெடுநிலாக் கண்டம் என்றும், அதிலே தலைச் சங்கம் அகத்தியனுரைத் தலைவராகக் கொண்டு நடந்ததாகவும் தமிழ் வரலாறு கூறுகின்றது. மதுரை யம்பதி என்று சொல்லப் பெற்ற பதியானது கலைக் கோயிலாகவும். அருட்கோயிலாகவும் தமிழர்களுக்கு நல்ல ஒரு வைப்பாக பழங் காலந்தொட்டு இருக்கின்ற ஒரு இடமாகும். அந்த மரபில் இருந்து பணியாற்றுகின்றவர்கள் இன்று பல்கலைக் கழகம் தொடங்குவது என்பது மிகவும் சால்புடைத்து என்ற கொள் கையை தமிழர்கள் அனைவரும் ஏற்பார்கள். மதுரை என்று சொன் னலே தமிழர்களுக்கெல்லாம் ஒரு தனி உணர்வு வருவதைக் காண் கிறோம். அந்த வகையிலே இந்தப் பல்கலைக் கழகத்திலே மத சம்பந்தமான தத்துவ விசாரணைகளுக்கு நல்ல ஒரு வாய்ப்பு இருக்கவேண்டும்.

திருமதி குழந்தையம்மாள் அவர்கள் சொன்னது போன்று தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி போன்ற நல்ல தமிழ் அருட்பாக்களைக் கொண்ட பகுதியை வைத்து மெய்கண்ட் சாஸ் திரம் போன்ற நல்ல தத்துவ சாஸ்திரங்களை வைத்து மாணவ மாணவிகளுக்கு அங்கு பாடம் தொடங்குவது பிற்காலத்தில் இன்று மிகவும் குறைவாகக் காணப்படுகிற ஒழுக்க நெறி, பண்பாட்டு நிலை இவற்றை அந்த மாணவர்கள் பயில்கிற ஒரு சாலையாக அமையும் என்று நினைக்கிறேன். தெய்வீக நெறி என்றால் ஆன்மீக நெறி என்றால் முக்கியமாக ஒழுக்கத்தைக் கற்பிக்கிற நெறி என் பதை நாம் மறத்தல் கூடாது. ஒழுக்கம் என்று சொல்லப்படுகிற ஒன்று தெய்வீக நெறியால், ஆன்மீக நெறியால் நம் நாட்டில் மலர்ந்த ஒரு பண்பாகும் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

30th July 1965] [திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்]

தெய்வத்தை மறக்கலாம், மறுக்கவும் கூட செய்யலாம். அது வேறு விஷயம். அது அவரவர்கள் கருத்து. ஆனால் ஒழுக்கத்தை மறுத்தால் சமுதாயம் வாழ முடியாது. அந்த ஒழுக்கத்தை கற்பிக்கிற ஒரே ஒரு நிலை தெய்வீக மார்க்கம் என்பதை அறுதியிட்டு கூற முடியும். ஆகவே, மதுரையில் ஏற்பட இருக்கிற பல்கலைக் கழகம் தமிழ் பண்போடு கூடிய தெய்வீக நெறியை வளர்க்கிற ஒரு ஆலயமாக ஒரு கலைக் கோவிலாக திகழ வேண்டுமென்று ஆலவாய் சொக்கனை வணங்குகின்றேன். இன்னொன்றை நான் முதல் அமைச்சர் அவர்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன். அந்த ஒரு ஆச்சரிய சம்பவம் என்னவென்றால் இந்த ஒரு மசோதாவைத்தான் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் திரு. மதியழகன் அவர்கள் மனப்பூர்வமாக வரவேற்கிறார்கள். அவர்களே சொல்லிவிட்டார்கள். இதை என்னால் மறக்க முடியாது என்று. மனம் கலந்த உள் வாழ்த்தோடு, அருளோடு, அன்போடு வாழ்த்துகிறேன் என்று கூறினார்கள். உண்மையிலே தமிழர்கள் எல்லோரும் ஒப்புக் கொள்ளக் கூடிய ஒரு நல்ல காரியம் இது என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். தொடங்கப்பட இருக்கிற இந்த பல்கலைக் கழகத்தில் தெய்வீக நெறியை, ஆன்மீக அடிப்படையை வளர்க்கக் கூடிய ஒரு நெறியை மதத் தத்துவத்தை விசாரணை செய்யக் கூடிய ஒரு நிலத்தை அங்கு கண்டிப்பாக நாம் ஏற்படுத்த வேண்டும். அங்குள்ள மாணவர்கள் கட்டாய பாடமாக அதை பயில வேண்டுமென்ற தங்கள் மூலம் கனம் முதல் அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். அது எதிர்காலத்தில் நம் தமிழக மாணவர்களுக்கு நல்ல ஒழுக்கத்தையும், கட்டுப்பாட்டையும், தேசிய உணர்வையும் வளர்க்கவும், ஆன்மிகத்தைப் பெருக்குவதற்கான நெறியையும் வளர்க்கும் என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். தமிழைப் பற்றிக் கூட பல பேர்கள் பேசினார்கள். கோவிந்தன் அவர்கள் கூட சொன்னார்கள், சரியாக திருக்குறள் படித்தவர்கள் இல்லை என்று. அகநானூறு, புறநானூறு படித்தவர்கள் இல்லை, அங்கொன்றும் இங்கொன்றுமாக பத்து பாட்டுக்களை படித்து விட்டு, பாடத் திட்டத்தில் உள்ளதை படிக்கிறார்கள் என்று சொன்னார்கள். அது உண்மையே. முறையாக தமிழ் கற்று வந்து பேசுகிறவர்கள் குறைவு. எனக்குக் கூட பேச வெட்கமாக இருக்கிறது. முறையாக நான் தமிழ் படித்ததில்லை. அங்கொன்று இங்கொன்றாக படித்தேனே தவிர, அந்தத் துறையிலிருந்து படிக்கும் நிலையில் தமிழ் மாணவர்கள் கற்பிக்கப்படவேண்டும். தமிழை ஓளவிற் காவது குறையற்றப் படிக்கிற அளவிற்கு இந்த பல்கலைக் கழகம் வாய்ப்பாக அமையும் என்று நான் நம்புகிறேன். தென் பாண்டி நாட்டிலுள்ள தமிழ் மதுரையில் இந்தப் பல்கலைக் கழகம் தொடங்குகிற நேரத்தில் சேக்கிழார் மரபில் வந்த பெரியார் கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன்.

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயது எல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்க்கவே"

[திரு. ஏ. எஸ். தக்ஷிணமூர்த்தி கவுண்டர்] [30th July 1965

என்ற பாடலை சைவ வரலாற்றில் படிக்கிறோம். ஞான சம்பந்தர் கூறிய அந்த வாழ்த்தை நான் கூறி மதுரைப் பல்கலைக் கழகம் வாழ்க என்று வாழ்த்தி, அதற்கு என் நல்லாசியையும் வாழ்த்துக் களையும் கூறி ஆலவாய் சொக்கனை வணங்குகிறேன். வணக்கம்.

MR. CHAIRMAN (SRI S. NANJUNDA ROW): Hon. Members are requested not to take more than 5 or 6 minutes each.

*திரு. வை. சங்கரன்: அவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன் பேசிய தமிழ் அறிஞர் திரு. தக்ஷிணமூர்த்தி கவுண்டர் அவர்கள் கூறிய பாட்டில் இரண்டாவது வரியில் ஒரு தவறு ஏற்பட்டு விட்டது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன் "சங்கு அறுப்பார் எங்கள் குலம், சங்காருக்கு வேதகுலம்" என்று வருகிறதாக ஞாபகம். சிறிய தவறு ஏற்பட்டு விட்டது என்று நினைக்கிறேன். இந்த மசோதா எல்லோரும் வரவேற்கக் கூடிய மசோதா. நான் இப்போது எழுந்து நிற்பதற்கு முக்கிய காரணம், குறிப்பாக முதல் அமைச்சர் அவர்களே விசேஷமாக பாராட்டுவதற்காகவே எழுந்தேன். இதன் பூர்வ சரித்திரத்தை தெரிந்து கொண்டால் இதை ஓரளவு புரிந்து கொள்ள முடியும். பல ஆண்டுகளாக இந்த முயற்சி தொடர்ந்து நடந்து கொண்டு வந்திருக்கிறது. கடந்த காலத்தில் சட்டசபை முன்பு இது ஷெல்வ் செய்யப்பட்டு விடுமோ என்று பயந்து இவ்வு காத்த கிளி போன்ற நிலையில் இருந்தோம். ஆக, இந்த பல்கலைக் கழகம் எற்படுவதற்கு பூர்ண ஆக்கம் கொடுத்துள்ள முதல் மந்திரி அவர்களுக்கு முழுப் பாராட்டுதல்களையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஒரு கோடி பேருக்கு மேல் இருந்தால் ஒரு யூனிவர்சிட்டி வைக்கலாம் என்று யூனிவர்சிட்டி கமிஷன் சொல்லியிருப்பதாகத் தெரிகிறது. அதை வைத்துக் கொண்டு வட ராஜ்யங்களில், மஹாராஷ்ட்ரா போன்ற இடங்களில் மூன்று நான்கு யூனிவர்சிட்டிகளுக்கு மேல் வந்திருக் கிறது. நம் ராஜ்யத்திலும் இன்னொரு யூனிவர்சிட்டி வைக்க, ஒரு அஃபிலியேட்டட் யூனிவர்சிட்டி வைக்க இடம் இருக்கிறது. நான் காவது திட்டத்தில் மேற்கொண்டு யூனிவர்சிட்டிகள் வைக்க இடம் கொடுப்பதில்லை என்று இருப்பதாக தெரிகிறது. ஆகவே இடம் கொடுத்தால் வேறொரு யூனிவர்சிட்டி வைக்க ஆட்சேபணை இருக்காது. அதை எல்லோரும் வரவேற்பார்கள். முன்பு மதுரை யூனிவர்சிட்டியில் ஆறு மாவட்டங்கள் சேர்க்கப்படுவதாகச் செய்து வந்தது. ஆனால் இப்போது தஞ்சையும், திருச்சியும் விலக்கப்பட்டு விட்டன. ஓரளவிற்கு மட்டுமே யூனிவர்சிட்டியின் வற்புறுத்தலின் பேரில் இந்த இரண்டு மாவட்டங்களும் விலக்கப்பட்டுவிட்டன. அவர்கள் ஆதிபத்தியம் ஓரளவு குறைந்து விடும் என்ற முறையீட்டினால் தஞ்சையும், திருச்சியும், மதுரை யூனிவர்சிட்டியில் சேருவதிலிருந்து நீக்கப்பட்டுவிட்டன என்று சொல்லப்படுகிறது. முன் பெல்லாம் சென்னை யூனிவர்சிட்டி மதுரை யூனிவர்சிட்டி உருவாவதில் உற்சாகம் காட்டவில்லை. மதுரை பல்கலைக் கழகம் அமைய லவுத் ஜோனிலிருந்து ஒரு குழு அமைத்திருந்தார்கள். அவர்கள் கூட இந்த யூனிவர்சிட்டி வேண்டியதில்லை என்று யோசனை கூறினார்கள். அதன் பிறகு இது ஷெல்வ் செய்யக் கூடிய நிலைமை

30th July 1965] [திரு. வை. சங்கரன்]

ஏற்பட்டது. ஆரம்பத்தில் இருந்தே அவர்கள் இதில் உற்சாகம் காட்டவில்லை. இப்போது கூட இந்த இரண்டு மாவட்டங்களும் எடுக்கப்படுவதற்கு அவர்கள்தான் ஓரளவு காரணம் என்று சொல்லப்படுகிறது. இந்த இரண்டு யூனிவர்சிட்டிகளும் கணிசமான அளவு பகுதிகளைப் பெற்றிருந்தால்தான் இது நல்லமுறையில் செயல்பட முடியும். அந்த இரண்டு மாவட்டங்களை திருப்பிச் சேர்ப்பதில் கஷ்டமில்லை அதையும் மதுரை யூனிவர்சிட்டியில் சேர்ப்பதுதான் முறையாக இருக்கும். முதலில் இருந்ததை இப்போது ஏன் கைவிட வேண்டும்? செக்கக்ஸ்ட் சேம்பர் ஆப் காமேர்ஸ்க்கு சென்ட்டில் இடம் கொடுத்திருக்கிறார்கள். மதுரை யூனிவர்சிட்டியில். அதேபோன்று செக்கக்ஸ்ட் மதுரை—இராமநாதபுரம் சேம்பர் ஆப் காமேர்ஸ்க்கும், பப்ளிக் பாடஸ்க்கும் இங்கும் இடம் கொடுக்க வேண்டும். ஜனநாயகத்தைப் பற்றி கௌன்சில் போன்ற இடங்களில் வானளாவ பேசுகிற சில பிரமுகர்கள் கூட சென்ட்டில் போகும் போது பெட்டிப் பாம்பாக இருக்கிறார்கள். அங்குள்ள மெம்பர்கள் கௌன்சிலில் பிரமாதமாகப் பேசுகிறார்கள். ஆனால் அங்கு பெட்டிப் பாம்பு போல் இருப்பதைப் பார்க்கிறோம். நான் பிரின்சிபால் கள் பெருவாரியாக இருக்கும்போது தீவிரமாக நடவடிக்கைகள் எடுக்க, தீவிரமான சிந்தித்தம் கொண்டு வர அவர்களுக்கு தெம்பு, திசை இல்லை ஜனநாயக அடிப்படை என்று சொல்லி ஒரு பெரிய ஆபிசரின் கீழ் சிறிய உத்தியோகஸ்தர்களைக் கொண்ட ஒரு குழு போட்டால் அவர்கள் எப்படி குறைபாடுகளை எடுத்துச் சொல்ல முடியாத நிலையில் இருப்பார்களோ அதே மாதிரித்தான், அந்த மாதிரி இயங்கும் முறையில் தான் சென்னை சென்ட் இருந்து கொண்டிருக்கிறது என்ற என் அனுபவத்தில் என்னால் சொல்ல முடியும். எவென்றால், அதிகமான பேர்கள் பிரின்சிபாலாக இருப்பதால் செய்யப்படவேண்டிய பல காரியங்களையும் சிந்தித்தங்களையும் எடுத்துச்சொல்வதற்கு பயப் படுகிறார்கள். ஆகவே, நான் அபிஷியல்களை கணிசமான அளவு மெம்பர்களாக போடுவதற்கு வழி வகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வைஸ்-சான்ஸலரை போடுகின்ற விஷயத்தில் சிறிதளவாவது தேசிய உள்ளம் உடையவர்களைப் பார்த்துப் போடுவது நல்லது. இன்றைக்கு வேண்டுமென்றால் சிலர் அரசாங்கத்தோடு ஒத்துப்பாடுவது போல் தோன்றலாம். இவர்களுடைய பழங்கால சரித்திரங்களைப் பார்த்தால் இவர்கள் எல்லாம் தேசத்திற்கு விரோதமாக நாட்டை அடகு வைத்து காட்டிக்கொடுத்தவர்கள் இன்றைக்கு அரசாங்கத்திற்கு ஆதரவாக இருப்பது போல் தோன்றலாம்; அரசாங்கத்திற்கு அடி பணிகிறவர்கள் போல் தோன்றலாம். இப்போர்ப்பட்டவர்கள் வைஸ்-சான்ஸலர் பதவிக்கு வந்துவிடுவார்களோ என்று அச்சத்தோடு வெளியில் சொல்லிக் கொள்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை போடாமல் நல்ல தேசிய உள்ளம் படைத்தவர்களை வைஸ்-சான்சலர் பதவியில் நியமிக்க வேண்டும் என்றும், இந்த யூனிவர்சிட்டியை நல்ல முறையில் நடத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

12-00 noon.

[30th July 1965

*** திரு. செ. மாதவன் :** கனம் தலைவர் அவர்களே, சுதந்திரம் கிடைத்ததற்குப் பின்னால் முதன் முதலாக புதிதாக கொண்டு வந்திருக்கின்ற மதுரை பல்கலைக் கழகத்தை—அதற்காக கொண்டு வரப்படும் இந்த மசோதாவை—நாங்கள் மனதார வரவேற் கின்றோம். இதற்காக முழு முயற்சி எடுத்துக்கொண்ட நம் முடைய முதலமைச்சர் அவர்களுக்கு தென் மாவட்டங்களின் சார்பில் நன்றி கூற கடமைப்பட்டிருக்கின்றோம். இப்படிப்பட்ட புதிய பல்கலைக்கழகங்கள் தொடங்கும்போது முக்கியமாக ஒரு கருத்து பேசப்படுகிறது. பல பல்கலைக் கழகங்கள் தோற்றுவிப் பதினால் கல்வியின் தரம் குறைந்துவிடும் என்ற ஒரு கருத்து நீண்ட காலமாக பேசப்பட்டு வந்த ஒரு கருத்தாகும். ஆனால் சுதந்திரத் திற்கு பின்னால் ஏற்பட்ட கல்விக் கமிஷன் இது பற்றி பரிசீலித்து, பல பல்கலைக்கழகங்கள் தோற்றுவிப்பது கல்வியின் குறைவான தரத்திற்கு அல்லது கல்வியின் தரம் குறைவதற்கு வழி கோலாது என்பதை வற்புறுத்தியிருக்கிறார்கள் என்பதை அரசாங்கம் கவனத் தில் கொண்டிருக்கும் என்று நான் நம்புகிறேன். இன்னும் குறுகிய காலத்தில் பல்கலைக் கழகங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டுமென்று அதே கமிஷன் சொல்லியிருப்பதையும் அரசாங்கம் தன்னுடைய நினைவில் கொள்ளவேண்டும் என்று வற்புறுத்த ஆசைப்படுகிறேன். ஆனால் உண்மையிலேயே கல்வியின் தரம் குறைகின்றதா என்பதை நாம் பரிசீலித்தாகவேண்டும். அண்மையில் இந்த நாட்டில் சுற்றுப்பயணம் செய்து வரும் கல்விக் கமிஷனின் செயலாளர் மூலம் தெரிவித்த கருத்துக்களையும் அரசாங்கம் நினைவில் கொள்ளும் என்று நம்புகிறேன். நம்முடைய பல்கலைக் கழகத்தின் கல்வி முறைகளையும், வெளிநாடுகளிலுள்ள கல்வி முறைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இங்குள்ள கல்வி யின் தரம் அங்குள்ள உயர்நிலைப்பள்ளியின் கல்வியின் தரத்தோடு தான் ஒப்பிட்டுப் பார்க்க முடிகிறது. அந்த அளவுக்கு நம்முடைய கல்லூரியின் கல்வித் தரம் குறைந்து இருக்கிறது என்பதைக் கல்விக் கமிஷன் கூறியிருப்பதை நம்முடைய அரசாங்கம் கவனத் தில் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன். அதோடு போதனு முறைகளைப்பற்றி சொல்லுகின்ற நேரத்தில், வெளிநாட்டிலுள்ள போதனு முறைகளையும் நம்முடைய நாட்டிலுள்ள போதனு முறை களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அதில் வேறுபாடுகள் அதிக மாக இருக்கின்றன. நம்முடைய முறைகள் தரமான கல்விக்கு ஒவ்வாததாக இருக்கின்றன என்பதை கல்விக் கமிஷன் சொல்லி யிருப்பதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்வார்கள் என்று நம்புகிறேன். இந்த மதுரை பல்கலைக் கழகம் தொடங்க வேண்டும் என்ற கருத்து 1948-ம் ஆண்டு எழுந்தது. அதன் பின்னால் இந்தக் கருத்து கல்விக் கமிஷனால் பரிசீலிக்கப்பட்டது. டாக்டர் ராதாகிருஷ்ணன் இந்த கமிஷ னுக்கு தலைவராக இருந்தார். அவர்கள் கருத்து மதுரையைம், திருச்சியையும் சேர்த்து இந்த பல்கலைக்கழகத்தை ஆரம்பிக்கலாம் என்று அறிக்கை சமர்ப்பித்து இருக்கிறார்கள். அதன் அடிப்படை யில் திருச்சியையும் இணைத்துத்தான் இதைப் பரிசீலித்திருப்பார் கள் என்று நம்புகிறேன். இப்போது திருச்சி கைவிடப்பட்டிருக் கிறது. திருச்சியில் தனியாக இன்னொரு பல்கலைக் கழகம் ஆரம்பிக்

30th July 1965] [திரு. செ. மாதவன்]

கலாம் என்ற நினைப்பில் திருச்சி கைவிடப்பட்டிருந்தால் பரவாயில்லை. அத்தகைய ஒரு சூழ்நிலை இல்லாமல் இருந்தால், திருச்சியையும் இணைப்பதற்கு சர்க்கார் முயல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுரையைப் பொறுத்தவரில் கட்டடத்திற்கு மிகவும் பஞ்சம். இந்த நிலையில் பல்கலைக் கழகத்தினுள்ள வேலைகளை விரிவாக துவங்குவதற்கு கட்டடங்களை எல்லாம் நல்ல முறையில் விரிவு படுத்துவதற்கு முழு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். புதிதாக துவக்கப்படுகிற இந்தப் பல்கலைக் கழகத்தில் தமிழுக்கு அதிக முக்கியத்துவம் இருக்க வேண்டும். அதோடு விஞ்ஞான கல்விக்கும், தொழில் கல்விக்கும் தென் மாவட்டங்களில் அதிகமான வாய்ப்பில்லை என்பது என் கருத்தாகும். ஆகவே இந்த இரண்டு துறைகளுக்கும் இந்த பல்கலைக் கழகத்தில் வாய்ப்பும் வசதியும் பெருகவேண்டும். அதற்கான முழு ஒத்துழைப்பையும் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்கலைக்கழகத்திற்கு துணை வேந்தர் பதவிக்கு நியமனம் செய்கின்ற விஷயத்தில், இப்போது சென்னை பல்கலைக் கழக சட்டத்தில் இருக்கக்கூடிய விதிகளுக்கும், புதிதாக கொண்டு வந்திருக்கும் பல்கலைக் கழகச் சட்டத்திற்கும் பல்வேறு மாறுதல்கள் இருக்கின்றன. துணைவேந்தரை தேர்ந்தெடுக்கும் முறையிலும் நிறைய வேறுபாடு இருக்கிறது. அந்த முறையைப் பார்க்கும்போது, அரசாங்கத்திற்கு இதில் அதிகமான அளவு ஆதிக்கம் இருக்க வேண்டும் என்ற எண்ணம் இருப்பதாக தோன்றுகிறது. துணைவேந்தராக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தொடர்ந்து பதவியில் இருக்கலாமா, இருக்கக்கூடாதா என்கின்ற பிரச்னையைப்பற்றி நம்முடைய நாட்டிலுள்ள கல்வி நிபுணர்கள் பரிசீலித்திருக்கிறார்கள். டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையிலுள்ள குழு இதைப்பற்றி பரிசீலித்திருக்கிறது. அவர்கள் ஒரு கருத்தை வற்புறுத்தியிருக்கிறார்கள். துணைவேந்தராக வருகின்றவர்கள் ஒரு முறை பதவி வகிக்கலாம். இரண்டாம் முறையாக துணைவேந்தராக வருகின்ற வாய்ப்பு தருவது தவறான சூழ்நிலையை உருவாக்கப் பயன்படும் என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். புதிதாக கொண்டு வரப்படுகின்ற சட்டத்தில் இரண்டு முறை இருக்கலாம் மறுபரிசீலனைக் குரியது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக, பல்கலைக் கழகம் முழு சுதந்திரத்தோடு, தன்னுரிமை பெற்ற முழுசுதந்திரத்தோடு இயங்கவேண்டும் என்ற கருத்தை நான் வற்புறுத்த ஆசைப்படுகிறேன். ஆட்சியாளர்களைப் பொறுத்தவரையில், சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில் பல்கலைக் கழகத்திற்கான விதிகளை இயற்றலாமே ஒழிய, முறைகளை வகுத்துத் தரலாமே ஒழிய, பல்கலைக் கழகத்தின் செயல்களில் தலையிடக்கூடாது என்கிற கருத்து வற்புறுத்தப்பட்டிருக்கிறது. இதை அரசாங்கம் புறக்கணித்து வருவதாகத் தோன்றுகிறது. இப்போதுள்ள மசோதாவில் 6-வது கிளாசிலுள்ள கருத்துக்களைப்பார்க்கும் போது, அரசாங்கம் நினைத்தால் பல்கலைக்கழக வேலைகளில் தலையிடக்கூடிய வாய்ப்பு இருக்கிறது, அதற்கான வழிவகைகளை

[திரு. செ. மாதவன்] [30th July 1965

இந்தச் சட்டம் உருவாக்குகிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதை மாற்றுவதற்கு அரசாங்கம் முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** திருமதி பி. கே. ஆர். லட்சுமிகாந்தம்:** கனம் தலைவர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் மதுரைப் பல்கலைக் கழக மசோதாவை நான் மட்டற்ற மகிழ்ச்சியுடன் ஆதரிக்கிறேன். பல ஆண்டுகளாக ஒரு யூனிவர்சிட்டி தென் பாகத்தில் வரவேண்டும் என்று ஆசைப்பட்டோம். பிறகு இதை எங்கே வைப்பது என்ற பல பிரச்னைகள் எழுந்தன. கடைசியில் மதுரையம்பதியில் வைப்பது என்ற முடிவுக்கு வந்தபிறகு மசோதா இப்போது வந்திருக்கிறது. அதற்கான வேலைகள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன. சட்ட மன்றத்திலுள்ள அனைவரும் இதை ஒரே முகமாக மிக மகிழ்ச்சியுடன் ஆதரிக்கின்றார்கள். அதைப் பார்க்கும்போது மிக மிக சந்தோஷம் அடைகிறேன். இதற்காக கனம் முதலமைச்சர் அவர்களுக்கும் இந்த மந்திரி சபைக்கும் என்னுடைய பாராட்டுதலையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த யுகமானது, விஞ்ஞான யுகமாக காட்சியளிக்கிறது. அறிவினுடைய வளர்ச்சி மிக மிக வேகமாக வளர்ந்து கொண்டு போகிறது. ஆகவே மதுரையில் ஏற்படக்கூடிய யூனிவர்சிட்டியானது இந்த விஞ்ஞான யுகத்தில், பல வெளிநாடுகள் எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறதோ, அந்த அளவுக்கு உயரக் கூடிய வகையில் இந்தப் பல்கலைக் கழகமும் செயல்பட வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன். அறிவு வளர்ச்சியினுடைய வேகத்திற்கு ஈடுகொடுத்தாற்போல் இந்த யூனிவர்சிட்டி உருவாகும். அதில் இந்த யூனிவர்சிட்டி முதன்மையாகவும் இருக்க வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன்.

கடைசியாக, நான் சொல்ல விரும்புவது, வைஸ்-சான்ஸலர் யாரைப்போடுவது என்பதைப்பற்றி பல அங்கத்தினர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். என்னுடைய கருத்தையும் இதில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். மதுரையைப்பொறுத்த வரை, மதுரை மீனாட்சியம்மன் முதன்மையாக இருக்கிறாள். மதுரையை மங்கையர்க்கரசி என்ற பெண்மணியும் ஆட்சி புரிந்திருக்கிறார். ஆகவே, இப்பேர்ப்பட்ட மதுரையில் ஏற்படக் கூடிய பல்கலைக் கழகத்திற்கு வைஸ்-சான்ஸலராக ஒரு பெண்மணி வரவேண்டும் என்பது மிக மிக அவசியம் என்பதை வற்புறுத்திக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதை கனம் முதல் அமைச்சர் அவர்கள் நினைத்தால் அவசியம் நிறைவேற்றி வைப்பார்கள் என்று எண்ணுகிறேன். அதற்குண்டான தகுதி உள்ள பெண்கள் இல்லை என்று அவர்கள் சொல்ல மாட்டார்கள். தகுதி உள்ள பெண்கள் எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒருவரை கனம் முதல் அமைச்சர் அவர்கள் தேர்ந்தெடுப்பார்கள் என்றும் கருதுகிறேன்.

30th July 1965] *[திருமதி பி. கே. ஆர். லட்சுமிகாந்தம்]*

இரண்டாவதாக, சென்ட் சபையிலேயும் சிண்டிகேட் சபையிலேயும் பெண்களுடைய எண்ணிக்கை குறைவாக இருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இப்போது இச்சபைக்கு ஓரிரு பெண்கள்தான் நான்-அஃபிஷ்யல்ஸ் ஆக வெளியிலிருந்து அனுப்பப்படுகிறார்கள். பாதி பெண்கள் இருக்கிற இந்த நாட்டிலே அவர்களுடைய அளவை அதிகரிக்க வேண்டும் என்பதையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதுவும் மீனாட்சி ஆட்சி புரிகிற மதுரையில் இப்போது யூனிவர்சிட்டி வரும்போது பெண்களுக்கும் அதிக இடம் கொடுக்க வேண்டுமென்று சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

அதுவும் அல்லாமல் நக்கீரர், சிவ பெருமான் நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே என்று சொன்னது மதுரையம்பதி. ஆகவே யூனிவர்சிட்டியில் இருக்கக் கூடியவர்கள் யூனிவர்சிட்டியில் சிறு சிறு குறைகள் இருந்தாலும் எடுத்துக் கூறக் கூடிய அளவுக்கு அதில் அங்கம் வகிக்கிறவர்கள் இருக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மதுரையம்பதியில் பல்கலைக் கழகம் வருவதைப் பெருமையுடன் வரவேற்று, அதற்கு என்ன பெயர் வைக்கப்படவேண்டும் என்று பலர் தங்கள் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்கள். அந்த முறையில் நானும் என்னுடைய கருத்தை தெரிவித்துக்கொள்கிறேன். இதை மதுரை மீனாட்சி யூனிவர்சிட்டி என்று வைத்தால் பொருத்தமாக இருக்கும். மதுரையில் மீனாட்சி கல்லூரி என்று ஒன்று ஏற்பட்டிருக்கிறது. அதற்குப் பொருத்தமாக மதுரை மீனாட்சி யூனிவர்சிட்டி என்று வைக்கவேண்டுமென்று சொல்லிக் கொண்டு, கனம் முதல் அமைச்சர் அவர்களுக்குப் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொண்டு, இவ்வளவு சீக்கிரத்தில் கொண்டு வந்ததற்காக அமைச்சர் அவைக்கே பாராட்டுதலைத் தெரிவித்துக்கொண்டு எனது வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* திருமதி டி. என். அனந்தநாயகி : கனம் தலைவர் அவர்களே, மதுரையிலே ஒரு சர்வகலாசாலையை ஏற்படுத்தக் கூடிய அளவுக்கு ஒரு மசோதாவை கனம் கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருப்பது பாராட்டத்தக்கது. நம்முடைய கனம் கல்வி அமைச்சர் எவ்வளவு தூரதமாகவும், தெளிவாகவும் கல்வியை நாட்டு மக்களுக்குப் பரப்ப வேண்டுமென்பதில் உற்சாகமாக இருக்கிறார் என்பதற்கு எடுத்துக் காட்டு இந்த மசோதா. உண்மையிலேயே இன்றைக்கு தமிழகத்திலே இரண்டு சர்வகலாசாலைகள் இருக்கின்றன. அவைகளின் அமைப்புக்களிலேயே வேறுபாடு இருக்கிறது. இப்போது மூன்றாவது சர்வகலாசாலையாக, மதுரையில், தென் பகுதி மாவட்டங்களை இணைத்து ஒரு யூனிவர்சிட்டி உண்டாக்குவதானது சென்னைக்கே பெருமை தரக்கூடியது என்று நான் கருதுகிறேன். இப்போது வந்துள்ள இந்தச் சட்டம் ஏறக்குறைய சென்னை சர்வகலாசாலைச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தீட்டப்பட்டதாக இருக்கிறது. ஆனால் இதிலே பல நல்ல குறிப்புகளையும் காண்கிறோம். மதுரை யூனிவர்சிட்டியைக் கட்டும்போது ஆசிரியர்களுக்கெல்லாம் க்வார்ட்டர்ஸ் கட்டவேண்டுமென்றும்,

[திருமதி டி. என். அனந்தநாயகி] [30th July 1965

அலுவலர்களுக்கெல்லாம் க்வார்ட்டர்ஸ் கட்டவேண்டும் என்றும் அதற்குச் சற்று ஏறக் குறைய 375 லட்சம் ரூபாய் முதலில் செலவழிக்கப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அத்தகைய சர்வகலாசாலை தமிழகத்தில் ஏற்படவேண்டுமென்றுதான் நான் ஆசைப்படுகிறேன். மேல் நாடுகளில் பார்க்கும்போது ஊருக்கு இரண்டு சர்வகலாசாலைகள் சாதாரணமாக இருக்கின்றன. உள்ளே போய் பார்க்கும்போது ஒரு டவுன்ஷிப் மாதிரி இருக்கும்போது அத்தகைய சர்வகலாசாலை நம் நாட்டில் ஏற்படுமா என்று எண்ணினேனும்; அங்கு இல்லாதது ஒன்றும் இல்லை. கல்லூரி மட்டுமல்ல, ஆசிரியர்கள், மாணவர்கள் தங்க எல்லா வசதிகளும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். மாணவர்கள் மட்டுமல்ல, மாரீட் ஸ்டூடண்ட்ஸ் க்வார்ட்டர்ஸ் என்று கூட கொடுத்திருக்கிறார்கள். மணமானவர்கள் அங்கேயே குடும்பம் நடத்திக்கொண்டு மேலே படிக்கக் கூடிய வாய்ப்புகளை காம்பஸிலேயே கொடுத்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது அந்த முறையில் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக அங்கே பல்கலைக் கழகங்கள் அமைந்திருக்கின்றன. அந்த அடிப்படையில் மதுரையில் இல்லை என்று ஒன்று இல்லை என்று சொல்லத்தக்க அளவுக்கு அதை அமைக்க வேண்டும். குறிப்பாக அண்ணாமலை சர்வகலாசாலையை எடுத்துக்கொண்டால் சட்டப் படிப்புக்கு காலேஜ் கிடையாது. மதுரையில் ஒரு லாகாலேஜ் அமைக்கவேண்டும். எல்லோரும் சென்னைக்கு வந்து படிக்கவேண்டும் என்ற நிலை இருக்கக் கூடாது. ஊரில் இருந்துகொண்டு அட்டெண்டன்ஸ் கொடுத்து வீட்டு பரீட்சை எழுத வாய்ப்பு இருக்கலாம். அந்த முறையில் இல்லாமல் மதுரையிலேயே ஒரு சட்டக் கல்லூரி அமைப்பது அவசியம். சொல்லலாம், விஞ்ஞான ரீதியில் நாடு வளர்ந்துகொண்டு போகும்போது சட்டத்தைப் படித்து என்ன பிரயோஜனம் என்று. சாதாரண பிரஜையாக இருந்தாலும் ஓரளவுக்கு சட்ட அறிவு இருந்தால் நல்லது. அன்றாடம் நாட்டில் இயற்றப்படும் சட்டங்களை ஓரளவு புரிந்துக்கொள்ளக் கூடிய வாய்ப்பு இருக்கும். அந்த முறையில் ஒரு சட்டக் கல்லூரி அங்கே இடம் பெறவேண்டும். விஞ்ஞான பாடங்களுக்கு அதிகமான இடம் தரவேண்டும். இன்றைக்கு யாரைப் பார்த்தாலும் பி.எஸ்ஸி. (கெமிஸ்டரி) கொடு, பி.எஸ்ஸி. (ஸூஆலஜி) கொடு, பி.எஸ்ஸி. (ஃபிஸிக்ஸ்) கொடு என்று கேட்கிறார்களே தவிர இக்கனாமிக்ஸோ, ஹிஸ்டரியோ படிக்க யாரும் வரமாட்டேன் என்கிறார்கள். அதெல்லாம் இல்லை என்று கழுத்தைப் பிடித்துத் தள்ளினால்தான் அதற்குப் போவார்கள் போல் இருக்கிறது. விஞ்ஞானம் படித்து விட்டால் வேலை கிடைக்கும் என்ற எண்ணமோ என்னவோ தெரியவில்லை. இந்தப் பாடங்களுக்கு மிக மிக அதிக நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. எந்த அளவுக்கு அவைகளைப் படிக்க முன்வந்திருக்கிறார்களோ அந்த அளவுக்கு எல்லாக் கல்லூரிகளிலும் விஞ்ஞான சீட்டுகள் விரிவு படுத்தப்படவில்லை. ஃபிஸிக்ஸ், கெமிஸ்ட்ரி ஆகியவைகளுக்கு உண்டான சீட்டுகளின் எண்ணிக்கையை எடுத்துக் கொண்டால், 1947-ல் எவ்வளவு இருந்ததோ அதைவிட 4—5 அதிகமாக இருக்கும் போல் இருக்கிறது. 2—3

30th July 1965] [திருமதி டி. என். அனந்தநாயகி]

பங்கு அதிகமாக வாய்ப்புக் கொடுக்கும் முறையில் குறிப்பாக விஞ்ஞான பாடங்களில் நாம் இடம் கொடுப்பது அவசியம்.

இன்னொன்று சொல்ல ஆசைப்படுகிறேன். கல்வியாளர்களைப் பொறுத்தமட்டில் நன்முக அறிவு படைத்தவர்கள், உபாத்தியாயர் தொழிலுக்கு வர மாட்டேன் என்கிறார்கள். மீபார்ஸ்ட் ரேட், அதாவது நல்ல அறிவாளிகள், நல்ல மார்க் வாங்கிப் புகழோடு பாஸ் செய்தவர்கள் சம்பளம் குறைவாக இருக்கிற காரணத்தினால் வேறு வேலை கிடைக்குமோ என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். வேறு வேலை இல்லை என்றால்தான் ப்ரொஃபசராக, லெக்சரராக வருகிறேன் என்று சொல்லுகிறார்கள். நல்ல சம்பளம் கொடுத்து நல்ல திறம் படைத்தவர்களைப் போடவேண்டும். அப்போதுதான் ஐ.ஏ.எஸ். ஆகலாமா, டெபுடி கலெக்டர் ஆகலாமா, வேறு தொழில் செய்யலாமா, கம்பெனிக்கு போகலாமா என்ற நிலை இருக்காது.

க்ளாஸ் 5-ல் "Disqualification for membership" என்று போட்டிருக்கிறார்கள். அதிலே ஓளவு படிப்பையும் வைத்தால் நல்லது என்று நினைக்கிறேன்.

"Person of unsound mind, adjudicated insolvent or an undischarged insolvent and sentenced by a criminal court of law" என்று மூன்றுதான் போட்டிருக்கிறார்கள். மூன்று மாத்திரம் இல்லாமல் சர்வகலாசாலையில் அங்கம் வகிக்க படிப்பைப் பெற்றிருந்தால் நஷ்டம் இல்லை என்று நினைக்கிறேன். லாபம் இருக்கிறதோ இல்லையோ நஷ்டம் இல்லை என்று நினைக்கிறேன்.

"Educational qualification at least in this respect, must be insisted" என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. அதைச் செய்வார்கள் என்று நான் நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, க்ளாஸ் 6-ம், 48-ம் அதிகாரம் கொடுக்கிறது அரசாங்கத்திற்கு. அரசாங்கத்திற்கு அதிகாரம் கொடுக்கக்கூடாது என்று சொன்னால் அதை வற்புறுத்தமுடியாது. அதிகாரம் இருக்க வேண்டியது மிகவும் அவசியம். இப்படித்தான் நடத்த வேண்டும் என்று கொள்கையைத் திட்டிக்கொடுக்கும்போது, அந்தக் கொள்கையைப் புறக்கணித்தால் கண்காணித்துத் திருத்தும் சக்தி அரசாங்கத்திற்கு இருக்கவேண்டும். அது மிக மிக அவசியம் என்று சொல்லி என்னுடைய கருத்துக்களை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. கு. ச. நல்லசிவம்: கனம் தலைவர் அவர்களே, இந்த மசோதா பொறுக்குக் கமிட்டிக்குப் போகிறது. பின்னால் இன்னும் விரிவாக யோசனை சொல்லச் சந்தர்ப்பம் இருக்கிறது என்று நினைக்கிறேன்.

கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். தற்போது உள்ள பல்கலைக் கழகத்தின் தன்மை என்ன, அது என்ன பயன் அளித்திருக்கிறது என்று பார்த்தோமானால் இப்போது நம் முன்வந்துள்ள

[திரு. க. ர. நல்லசிவம்] [30th July 1965

மசோதாவை எப்படித் திருத்தினால் பலன் உண்டு என்று புரிந்து கொள்ள முடியும். தற்போது உள்ள பல்கலைக் கழகம் எப்பேற்பட்ட மாணவர்களை உற்பத்தி செய்திருக்கிறது என்று நாம் பார்க்க வேண்டும். சமீபத்திலே நமது முதலமைச்சர் அவர்கள் இந்த நாட்டு ஒருமைப்பாடு விரதம் எடுத்துக்கொள்ளுகிற விஷயத்தை பொறுத்த வரையில், ஆரம்பப் பள்ளி, உயர்தரப் பள்ளி மாணவர்களைப் பொறுத்த வரையில், உத்திரவிட்டிருக்கிறார்கள் கல்லூரி மாணவர்களை வற்புறுத்த முடியாமல் இருக்கிறோம். இது ஒன்றே போதுமானது எப்பேர்ப்பட்ட மாணவர்களை உற்பத்தி செய்கிறது என்பதற்குச் சான்று. இது போன்ற முறையில் மாணவர்களை உற்பத்தி செய்யக்கூடிய இந்த மசோதா அமையக் கூடாது. எப்பேர்ப்பட்ட மாணவர்களை இந்த சர்வகலாசாலை உருவாக்கவேண்டுமென்றால், நாட்டுப்பற்று, தாய்மொழிப்பற்று உடைய மாணவர்களை உருவாக்கவேண்டும். ஏதோ பழம் கதை களைப் பேசிக்கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை. பிட்டுக்கு மண் சுமந்த கதையை பேசிக்கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை. எதார்த்த நிலையை மறந்துவிடக்கூடாது. தமிழ் கண்ட மதுரை யாக இல்லை. கோவில்கள் நீண்டு வளர்ந்துகொண்டே போனாலும், அந்த அளவுக்கு மொழி வளர்ச்சி ஏற்படவில்லை. மொழிப் பற்று வளரக்கூடிய வகையில், நாட்டுப்பற்று வளரக் கூடிய வகையில் மாணவர்களை உருவாக்கக்கூடிய முறையில் இந்த மசோதா அமைய வேண்டும். அந்த முறையில் இந்த மசோதாவை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நிலை அபாயகர மானது, கேவலமானது. தனிப்பட்டவர்களை குறை சொல்லி நான் நேரத்தைப் போக்க விரும்பவில்லை. தேச பக்தியும், தாய்மொழிப் பற்றும் உள்ள மாணவர்களை உற்பத்தி செய்யக்கூடிய பல்கலைக் கழகமாக இது அமையவேண்டும். அதற்கேற்றபடி இந்த மசோதா உருவாக்கப்படவேண்டும்.

கனம் தலைவர் அவர்களே, பெண் அங்கத்தினர்கள் கூறியதை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். சமூகத்தில் அவர்கள் பாதி பேர்கள் இருக்கிறார்கள். சட்டசபையில் பிற்திருக்கும் 5, 6 பெண் அங்கத்தினர்களை மட்டும் கணக்கில் வைத்து பார்க்கக் கூடாது. சமூகத்தில் அவர்கள் இருக்கக்கூடிய எண்ணிக்கையின் அடிப்படையில் வைத்துப் பார்த்தால், சரி பாதி பேர்கள் பெண்கள் எல்லாத் துறைகளிலும் இருக்கவேண்டும். அப்படி இப் பொழுது நிலைமை இல்லை. ஷெட்யூல்டு காஸ்டு என்று சொல்லி அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய உரிய நியாயமான பகுதியை அவர்களுக்குக் கொடுத்தால்கூட அது தகும். இந்த எண்ணிக்கை அடிப்படையில் அவர்களுக்கு புதிய பல்கலைக் கழகத்தில் நிச்சயம் சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும் என்று நான் மிகவும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்திற்கு நிச்சயம் இன்னும் ஒரு பல்கலைக் கழகம் தேவை. அதில் எந்த விதமான சந்தேகமும் கிடையாது. வருகிற 5, 6 ஆண்டுகளுக்குள் அது எற்பட்டுவிடும் என்று நான் நம்புகிறேன். என்னுடைய ஜில்லா என்ற அடிப்படையில் நான்

சொல்லவில்லே. கோவை ஜில்லாவில் கோவில்கள் கிடையாது. பழம் பெரும் இதிகாசங்கள் கிடையாது. பல நவீன இதிகாசங்கள் அங்கே இருக்கின்றன. விஞ்ஞான ரீதியாக முன்னேறிக் கொண்டிருக்கிற ஒரு பெரிய நகரம் அது. தொழில் துறையிலும் சரி, விவசாயத் துறையிலும் சரி, அது முன்னேறிக் கொண்டிருக் கிறது. மீதி இடங்களில் 4 மூட்டைகள், 5 மூட்டைகள் உற்பத்தி செய்தால், அங்கே 20, 30 மூட்டைகள் உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள் இருக்கிறார்கள்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சேலத்தில் இன்னும் அதிக மூட்டைகள் எடுக்கிறார்கள்.

திரு. க. ர. நல்லசிவம்: வரும் வருடம் அதையும் மிறுவோம்! கோவையைப் பொறுத்தவரையிலே அது பல்கலேக்கழகம் ஏற் படுவதற்கு சரியான ஒரு இடம் என்பதை கருத்தில் வைத்துக் கொண்டு, அங்கே புதிய பல்கலேக்கழகம் ஒன்று ஏற்படுத்துவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மசோதாவை மனப்பூர்வமாக வரவேற்று என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

*** திரு. சா. கணேசன்:** கனம் தலேவர் அவர்களே, தமிழகத்தில் புதியதாக தோன்ற இருக்கிற ஒரு பல்கலேக்கழகத்திற்கு விதி வகைகளே வகுத்து, நமது அன்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் மசோதாவை மனப்பூர்வமாக வரவேற்று, அதிலே நான் இங்கே சொல்ல வேண்டியவற்றை சொல்லுகிறேன். இனிமேல் இந்த மசோதா செலக்ட் கமிட்டிக்கு செல்லப் போகிறது. அங்கே சொற்கள் அல்லது முறைகள் அல்லது வழிகள் இவற்றிற்கெல்லாம் பல பேர் திருத்தங்கள் கொண்டுவந்து, அவை ஏற்றுக்கொள்ளப்பெற்றே அல்லது நிராகரிக்கப்பெற்றே, அதற்குப் பிறகு பூரணத்துவமான நிலேயிலே சபையின் முன்னலே இந்த மசோதா வரும். ஆகவே, அவற்றின் உள்ளேயெல்லாம் நுழைந்து நான் இப்பொழுது பேச விரும் வில்லே.

முதலிலே பார்க்கிறபொழுது, இதற்குள்ளே மதுரை, ராமநாத புரம், நெல்லே, குமரி ஆகிய நான்கு ஜில்லாக்களேக் கொண்டிருக் கிறது. அதற்குக் காரணங்கள் சொல்லப்படுகின்றன. அது பாண்டிநாட்டு எல்லேயை எல்லேயாகக் கொண்டிருக்கிறது. ஆனல் சரியாகப் பாண்டி நாட்டு எல்லே எது என்று அந்தக் கணக்கை யெல்லாம் எடுத்தால், இதோடு நிற்காது. திருச்சி ஜில்லாவும் அதனுள் வந்துவிடும். பாண்டிய நாட்டிற்கு எல்லே வகுக்கும் பொழுது, 'வெள்ளாறு அது வடக்கு' என்று தொடங்குகிறது. புதுக்கோட்டையையும் உள்ளடக்கக்கூடிய அந்தக் கணக்கை எல்லாம் நாம் இப்பொழுது பார்க்கவேண்டிய தேவையில்லே.

தமிழகத்தில் முழு பரீட்சாதிகாரத்தோடு கூடிய பல்கலேக் கழகம் ஒன்று தான் உண்டு. அது சென்னே பல்கலேக்கழகம். இன் னென்று 'செலிடென்ஷியல் யுனிவர்ஸிடி' என்று சொல்லுகின்ற

[திரு. சா. கணேசன்] [30th July 1965

அளவிலே, போதனைப் பல்கலைக் கழகமாக விளங்குகிறது; அது அண்ணுமலை பல்கலைக் கழகம். பல்வேறு நாட்டு அமைப்புகளை எல்லாம் எடுத்துக்கொண்டு பார்த்தால், இது சற்றும் போதாது என்பது நன்கு தெரியும். அமெரிக்காவை எடுத்துக்கொண்டால், கிட்டத்தட்ட 25 லட்சம், 30 லட்சம் ஜனத்தொகைக்கு ஒரு பல்கலைக்கழகம் இருப்பதை நாம் காண்கிறோம். இங்கிலாந்தை எடுத்துக்கொண்டால், சுமார் 15 பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. (குறுக்கீடு) மன்னிக்க வேண்டும் திருத்தத்திற்கு நன்றி, ஆம் 27 பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. இப்படி கணக்குகளை வைத்துக் கொண்டு பார்த்தால், அங்கெல்லாம் ஜனத்தொகை என்ன? இங்கிலாந்தின் ஜனத்தொகை 5 கோடி, அங்கே இருப்பது 27 சர்வ கலாசாலைகள் அல்லது பல்கலைக்கழகங்கள். இங்கே ஏறன்று கோடிக்கு மேற்பட்ட மக்கள் இருக்கிறார்கள். ஒரு முழு பல்கலைக் கழகம் இருக்கிறது. இன்னொரு போதனைப் பல்கலைக் கழகம் இருக்கிறது. இந்த நிலையிலே திடீரென்று ஒரே சமயத்தில் அவ்வளவையும் அமைத்துவிட முடியாது என்பதையும் நான் உணர்கிறேன். முதற்படியாக மதுரையில் தொடங்கப்போகிறது. இதிலே இப்பொழுது திருச்சி ஜில்லா சேர்க்கப்பட இல்லை. வேறு கணக்குகளை வைத்துக்கொண்டு பார்த்தால் திருச்சி இதோடு சேருவது பொருத்தமாக இருக்கும். திருச்சிக்கும் சென்னைக்கும் இருக்கிற தூர எல்லை அவையும், திருச்சிக்கும் மதுரைக்கும் இருக்கிற தூர எல்லை அவையும் வைத்துக்கொண்டு பார்ப்போமானால் இது பொருத்தமாக இருந்திருக்கும். ஆனால், இப்பொழுது திருச்சியை ஒரு யுனிவர்சிடி சென்டராக ஏற்றுக் கொள்ளப் பெற்றிருக்கிறது. சுமார் ரூ. 20 லட்சம் செலவிட்டு, அங்கு அதற்கு வேண்டிய வாய்ப்பு வசதிகளையெல்லாம் செய்யக் கூடிய நிலையில் திருச்சி அமைந்திருக்கிறது. இதையெல்லாம் பார்க்கிறபொழுது, இப்பொழுது இதை உடனே சேர்த்துவிடாமல், தற்பொழுதைய நிலையில் வைத்துக்கொண்டிருந்து, பின்னால் அதை ஒரு வட்டமாக்கி, அங்கு மற்றொரு சர்வகலாசாலை ஏற்படுத்துவதற்கு இடையூறு இல்லாத நல்ல வழியாக அமைந்திருக்கிறது என்ற நிலையிலே அதை நான் இப்பொழுது வற்புறுத்த விரும்பவில்லை.

பெயர் வைப்பது பற்றி சனம் உறுப்பினர்கள் பலர் பேசினர்கள். பெயரில் ஒன்றுமில்லை. எந்தப் பெயரை வேண்டுமானாலும் வைக்கலாம். பெயரிலே விஷயமே கிடையாது. இங்கே ஏதோ மங்கையர்க்கரசி ஆண்டார் என்று சொல்லப்பட்டது. மங்கையர்க்கரசி மதுரையை எப்பொழுதும் ஆள இல்லை. ஆண்டது மங்கம்மாள் ஒருவர்தான் என்பது பிற்காலத்தில் சரித்திரமாகத் தெரிகிறது. மங்கையர்க்கரசி கூன்பாண்டியரின் மனைவியார். அவர் அரசியாக என்றுமே ஆண்டது இல்லை. (குறுக்கீடு; மீனாட்சி ஆண்டார்.) அது வேறு விஷயம். அது பௌராணிகச் செய்தி. வரலாற்று நெறி நின்று பார்த்தால் மங்கம்மாள் ஆண்டதே மெய்ம்மை. (குறுக்கீடு) அதிலே வேறு தகராறு. சனம் ராமசாமி நாயுடு அவர்கள் வேந்தரைப்பற்றி சொன்னார்கள். பெண்களைப் போட்டால் வேந்தர் என்று கூறவே முடியாது. (குறுக்கீடு) வேந்தி

30th July 1965] [திரு. சா. கணசன்]

என்று சொன்னால் சில பேர்களுக்கு கோபம் வரலாம், சில பேர்களுக்கு சிரிப்பு வரலாம். இந்தச் சொற்களை, பெயர்களையெல்லாம் வைத்துக்கொண்டு நாம் குழம்ப வேண்டாம். நமக்கு வேண்டியது தண்ணீர். தாகம். தண்ணீருக்காகத் தவிக்கிறோம். கொடுப்பவர் 'வாட்டர்', 'பானி', 'ஜலம்' என்று சொல்லி கொடுத்தால் குடிக்க முடியாது. தண்ணீர், என்று சொல்லி கொடுத்தால்தான் குடிப்போம் என்று கூறுவது அறிவுடைமை ஆகாது. பெயரில் ஒன்றும் ஆட்சேபணை இல்லை. வேண்டியது தண்ணீர், தாகம் தீர வேண்டும். அந்த லட்சியத்தில் நின்றதான், அறிவுடை நெறியிலே செம்மையான முறையிலே அணுகி செயல்படவேண்டும் என்பதை தலைவர் அவர்களே, நான் தங்கள் மூலமாக சமர்ப்பித்துக் கொள்கிறேன். மதுரை யூனிவர்சிடி என்று வைத்துக்கொள்ளுங்கள், தமிழ் யூனிவர்சிடி என்று வைத்துக்கொள்ளுங்கள், பாண்டியன் யுனிவர்சிடி என்று வைத்துக்கொள்ளுங்கள். எப்படி பெயர் வைத்தாலும் எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், ஒன்று மட்டும் மறந்துவிடக்கூடாது. இனிமேல் இந்த அடிப்படையில் பெயர்கள் இல்லாமல், பொது அடிப்படையிலே உள்ள பெயர்களாக இருப்பது நமது நாட்டு வளர்ச்சிக்கும், அதனுல் சில இடையூறு ஏற்படாமல் இருக்கிற நல்லாய்ப்புக்கும் அது வழி காட்டும், அந்த முறையில் எந்த பெயர் வைத்தாலும் எனக்கு ஆட்சேபணை இல்லை.

பல்கலைக்கழகம் ஆரம்பிப்பது மட்டும் பெரியதல்ல. மேலை நாடுகள் வகுத்த வழிகளைத்தான் நாம் பின்பற்றுகிறோம், கல்வித் துறையிலே, கல்வி முறையிலே பிரிட்டிஷ் முறையே இங்கு இன்றவரை பின்பற்றப்படுகிறது. பிரிட்டிஷ் ஆதிக்கத்தை நாம் வெறுத்தோம், உடைத்தோம், விடுபட்டோம் என்றாலும், கல்வி முறையில், அவர்கள் அனுஷ்டிக்கின்ற வழிகள், விதிக்கின்ற சட்டங்கள் இவற்றையெல்லாம், 'பார்லிமெண்டரி ப்ரொஸீஜர்' வரையிலே இவற்றைத்தான் பின்பற்றிக்கொண்டு வருகிறோம். காரணம், அவற்றிலுள்ள சிறப்புத் தன்மையைக் கருதி. இதை நாம் மறந்துவிடக்கூடாது. இங்கிலாந்தை எடுத்துக்கொண்டால், பல்கலைக்கழகத்திற்கு அரசாங்கம் எதோ ஒரு தொகையை இத்தனை கோடி என்று ஒதுக்கிக் கொடுத்து விடுவார்கள்; கொடுத்து விடுகிறார்கள். அதற்குப் பிறகு அந்த தேசத்தில் மன்னருக்குக் கூட பல்கலைக்கழகத்திற்குள்ளே ஒரு 'இன்சு' கூட ஆதிபத்தியமோ, அதிகாரமோ கிடையாது. ஒரு சிறந்த நண்பர் 12-3 p.m ஒருவரிடம் கேள்விப்பட்டேன். ஜார்ஜ் V ஒரு சமயம் ஆக்ஸ்போர்ட் யுனிவர்சிடிக்கு விஜயம் செய்தார். அவர் பிரின்ஸிபால் ரூம் வரை வந்தும், பிரின்ஸிபால் வராததால், ரூம் கதவைத் தட்டி, பிறகு பிரின்ஸிபால் வந்ததும், ரூமுக்குள் எடுத்து, அவர்கள் பழக்கப்படி வணக்கம் தெரிவித்துவிட்டு, யுனிவர்சிடியையெல்லாம் சுற்றிப் பார்த்தார். மாணாக்கர்களுக்கும் ஒரு உரையாற்றினார். அவர் போன பிறகு, மாணாக்கர்கள், வழக்கப்படி What about tomorrow? என்று கேட்டார்கள். அதற்கு அந்த பிரின்ஸிபால், Tomorrow is Tuesday. என்று சொன்னாராம். அவர்கள் நாளை

[திரு. சா. கணேசன்] [30th July 1965

கல்லூரி உண்டா என்று கேட்டதற்கு, பிரின்ஸிபால், நானே செவ்வாய்க்கிழமை என்றாராம். ஐந்தாம் ஜார்ஜாக இருந்தால் என்ன, என்னுடைய சர்வ கலாசாலைக்கு நான்தான் அதிபதி என்கிற உணர்ச்சியோடு சொன்னாராம். ஆகவே, அந்த உணர்வு, தன்னம்பிக்கை—திமிர் அல்ல—அறப்பிடிப்பு செம்மையாக அந்தந்த ஸ்தாபனத்தின் தலைவருக்கும் இருக்கவேண்டும். இப்பொழுது புதிதாக ஏற்படுகிற இந்த யுனிவர்ஸிடிக்கு எதாவது சன்மானம் அல்லது உபகார நிதி எவ்வளவு வேண்டுமென்றாலும் எப்படி வேண்டுமென்றாலும் கொடுங்கள். ஆனால் அதன் பிறகு எந்த விதத்திலும் அவர்களைக் கட்டுப்படுத்தாதீர்கள். அதற்கு முன்னே, திறமையும், ஒழுக்கமும், சீலமும், செயல் திறனும் உள்ளவர்களைத் தேர்ந்தெடுத்துப் போடுங்கள். தேர்ந்தெடுத்த பிறகு அவர்களைக் கட்டுப்படுத்துவது சரியாகாது. தவறுகள் ஏற்பட்டால், உடனே கல்தா. அப்படி இருந்தால்தான் கல்லூரிகள் வளரும். அப்படிப் பட்ட கல்லூரிகளில் தான் மாணவர்கள் நல்ல முறையில் வளருவார்கள். இப்பொழுது ஆசிரியர்களிடம் மாணவர்களுக்கும் அச்சம் இல்லை. ஆசிரியரோ நோட்டைக் கொண்டு வந்து பாடம் சொல்லிக்கொடுக்கும் நிலைதான் மிகுதியாக இருக்கிறது. ஆகவே மாணாக்கர்களுக்கு ஆசிரியர்களிடம் மரியாதை வரவில்லை. மாணவன் கேட்கும் கேள்விகளுக்கு உடனே பதில் சொல்லுவதற்கு திராணி இல்லாத ஆசிரியர்களைப் பலர் இருக்கிறார்கள். நேற்று கூடப் படித்தவன் இன்றைக்கு ட்யூடராக வருகிறான். இதை யெல்லாம் மனத்தில் கொண்டு, பரிபூரணகதந்தரம் உள்ளதாக இந்த சர்வ கலாசாலை அமையவேண்டும். அதை விதி வகைகளிலேயே போட்டுவிடவேண்டும். இதை ஒரு எக்ஸ்பெரிமெண்டாக சோதனையாக செய்து பார்க்கலாம். அப்படி ஒரு தனி முறையைக் கையாண்டு பார்த்து அதனால் ஏற்படுகிற பலன், நலன் இவைகளையெல்லாம் நாம் தெரிந்து கொள்ளலாம். அப்படியே பழைய யுனிவர்ஸிடி விதியைக் காப்பியடிப்பதை விட்டுவிட வேண்டும். மெட்ராஸ் யுனிவர்ஸிடி பல துறைகளை வைத்திருக்கிறது. இந்த யுனிவர்ஸிடியில், வேறு பல புதிய பாடங்களை அமைக்கலாம். Bachelor of Architecture, Bachelor of Archaeology Bachelor of Iconography முதலிய பல துறைகளையும் ஏற்படுத்தலாம். அவையெல்லாம் மிக்க அவசியமானவை. வெறுமனே, பி.ஏ., பி.எஸ்ஸி, பி.காம். என்கிற பழைய பாடங்களோடு நிற்க வேண்டுமா? ஒரு 4, 5 துறைகளை எடுத்துக்கொண்டு, 4 ஸ்டெண்ஸ் இருந்தாலும், ஒரு ஆசிரியர், ஒரு துணை ஆசிரியர், முதலியவர்களை வைத்துக்கொண்டு, பார்க்கலாம். அப்புறம் வளம் நோக்கி, பலன் நோக்கி ஏராளமான மாணாக்கர்கள் சேரக்கூடும். பல வருஷங்களுக்குப் பிறகு, அதனால் பணம் விரயம்தான் என்று தெரிந்தால் விட்டுவிடலாம். விரயம் செய்யவேண்டும் என்று சொல்லவில்லை. ஆனாலும் சில துறைகளில் செலவாகும் தொகையை விரயம் என்று கொள்ள முடியாது. இத்தனை வருஷம் ஆயிற்றே. நமது பல்கலைக் கழகத்திலிருந்து எவ்வளவு உலக மேதைகள் வந்திருக்கிறார்கள்? நிஜச் ஸ்காலர்கள் என்பதன்றி உலக மேதைகள் உற்பத்தியாக செய்திகள் உண்டா? மாதமாடிக்ஸில் ஒரு ராமானுஜம் இருந்தார். அவரை உள்ளே தழைய விடமாட்டேன் என்றார்கள். தகுதியுள்ள

30th July 1965] [திரு. சா. கணேசன்]

வர்களுக்கும், கிறன் உள்ளவர்களுக்கும், வாய்ப்புக் கொடுத்து, நிலைச் செய்துகொண்டே இரு என்று விட்டு விடவேண்டும். நர்சரியில் குழந்தைகளைக் கட்டுப்படுத்துவதுபோல, நிலைச் ல்காலமாவது, இப்படிச் செய், அப்படிச் செய், இரண்டு வருஷத்தில் இவ்வளவு பக்கத்தை சொப்பிக் கொடு என்று சொல்லுவது பயன் அற்றது. அவர்களே தங்கள் இஷ்டம் போல் வேலை செய்ய விட்டால்தான் இந்த நகட்டுக்கு, இந்த தேசத்திற்கு, உலகத்திற்கு செம்மையான, வளமான, திறமையான மேதைகளைக் கொடுக்க முடியும். ஒரு சி. வி. ராமன், ஒரு கே. எஸ். கிருஷ்ணன், ஒரு ராமானுஜம் தோன்றினால் போதுமா ஒரு நிலைச் செய்கிற வனுக்கு முழு சுதந்திரம் இருக்கிறதா? இதையெல்லாம் மனதில் கொள்ளவேண்டும். இந்த மாதிரியான அமைப்புகளை இந்த சட்டத்திற்குள்ளேயே தோன்றும்படியாக அமைக்கவேண்டும். அப்படிச் செய்தால், காரியங்களெல்லாம் தொடர்ந்து செம்மை யான நிலையில் போகக்கூடிய வகையில். இதை ஒரு மாதிரி சோதனை சர்வகலாசாலையாக வைத்துப் பாக்கவேண்டும்.

சிலருக்கு 'வாட்டர்' என்றால் சந்தோஷம், தண்ணீர் என்றால் கடஷ்மாக இருக்கிறது. இரண்டும் ஒன்றுதான். பல்கலைக்கழகம், சர்வகலாசாலை இரண்டும் ஒன்றுதான், பிரமாத வித்தியாசம் இல்லை. 'சர்வம்' என்றால் எல்லாம் என்று பொருள். 'பவ்' என்றால், 'பல' என்று பொருள். 'சர்வம்' என்றால் 'all' என்றும் பல என்றால் 'many' என்றும் பொருள். அதன் பிறகு, யூனிவேர்சிடி என்பதா, உப அத்யகூகர் என்பதா என்று ஒரு பிரச்சினை. இந்த வார்த்தைகளுக்கெல்லாம் அதிக வித்தியாசம் இல்லை. அந்தக் காலத்தில் சமஸ்கிருதத்தில் 'அத்யகூகர்' என்று மொழிபெயர்த்தார்கள். இப்பொழுது, காவலர் என்றும் சொல்லு கிறார்கள். நாம் இந்தப் பெயர்களையெல்லாம் மறந்துவிடவேண்டும். வெறும் வார்த்தைப் பிரம்பம் பண்ணிக் கொண்டு இருக்க வேண்டாம். தமிழ் மாநாட்டுக்கு எற்ற வகையில் நடந்துகொள்ள வேண்டும். ஜாவாவிலிருந்தும், மலேயாவிலிருந்தும் செம்பு, தாமிரம் வந்தது. அதனால், நடராஜ விக்கிரகத்தையும், தட்சிணாமூர்த்தி விக்கிரகத்தையும் நாம் வணங்க மறுத்து விட்டோமா? வேண்டாம் என்று விட்டு விட்டோமா? ஆகவே, சொற்களை வைத்துக்கொண்டு விருப்பு வெறுப்பு அடைய வேண்டாம். சொற்களின் அடிப்பகுதி— எடிமாலஜி-க்குள்ளெல்லாம் சென்று நாம் இடர்ப்படவேண்டாம்.

அதன் பிறகு, தெற்கே ஒரு பல்கலைக்கழகம் அமைத்ததுடன் நம் பணி தீர்ந்து விட்டது என்று கருதிவிடக்கூடாது. அடுத்தாற் போல, திருச்சி, கோயம்பத்தூர், வட ஆர்க்காடு என்று பல இடங் களில், நம் மாநிலத்திற்கு குறைந்தது 5, 6 யுனிவர்சிடிகளாவது இருக்கும் வகையில் செயல் படவேண்டும். அதற்கும் மேல், வாய்ப் புகளும், வசதிகளும் கொண்டு வளமான எல்லைக்குள்ளே, ஒரே காம்பஸில் இருக்குமானால், அங்கெல்லாம் செஸிடென்ஷியல் யுனி வர்சிடிகள் அமைக்க வேண்டும். அவற்றிலெல்லாம் தகுதியுள்ளவர் களை நியமித்து, அவர்களிடம் வெறும் கணக்குக் கேட்காமல், சுதந் திரமாகக் காரியம் செய்யவிட்டுவிட்டால் மாநிலத்திற்கு, நாட்

[திரு. சா. கணேசன்] [30th July 1965

டிற்கு நல்ல பயனை உண்டாக்க முடியும். இப்பொழுது நேரம் இன்மையால், பிறவற்றையெல்லாம் வேறு இடங்களில் கூறலாம். கருத்துக்களையும் திருத்தங்களையும் சமர்ப்பிக்கலாம் என்கிற நிலையில் இந்த அடிப்படைக் கருத்துக்களை மட்டும் கூறி, இந்த யுனிவர்சிடி மசோதாவை வரவேற்கிறேன். தக்கவரை, யோக்கியதை உள்ளவர்களை நியமித்து, அவர்களை அலுவலியமாக நிர்ப்பந்தப் படுத்தி, அடிமையாக்க முடியாத ஒரு சட்டத்தை பரிபூரண சுதந்தரம் கொடுக்கும் சட்டத்தை, இயற்றி மெட்ராஸ் யுனிவர்சிடியிலோ அல்லது மற்ற இந்தியன் யுனிவர்சிடியிலோ இல்லாமல் இருந்தாலுங்கூட, பிற வேறு துறைகளை பட்டப் படிப்புக்குக் கொண்டு வரவேண்டும். அதற்குத் தகுதிப்பட்ட ஆசிரியர்களை அமைக்கவேண்டும். இவற்றிற்காகும் செலவுகளை, இவ்வளவு என்று வரையறை செய்து கொடுத்து விடவேண்டும் போதாது என்றால், வேறு இடங்களிலே நன்கொடையாக அவர்கள் வாங்கிக்கொள்ளும் உரிமையையும் கொடுத்து விடவேண்டும். இப்படியெல்லாம் செய்தால், கல்வித் துறையாளர்கள் பூரணமான சுதந்திரத்தோடு அமைந்தால், பரிபூரண பொறுப்போடும், அக்கறையோடும், உணர்வோடும் நன்கு செயலாற்றுவர். அதனால், நமது மாநிலம் வளம் பெறும், நாடு வளம் பெறும், உலகம் வளம் பெறும் என்று சொல்லி என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, முத்தமிழ் கொழித்த மதுரையில் புதியதொரு பல்கலைக்கழகத்தை தோற்றம் கொள்ளச் செய்யும் அளவுக்கு முயற்சி எடுத்திருப்பதை மகிழ்ச்சியோடு வரவேற்கத்தக்க ஒன்றாகும், மதுரையில் பல்கலைக் கழகம் ஒன்றைத் தோற்றுவதற்கான முயற்சி எடுத்து, அதற்கான மசோதாவை உருவாக்கி, அதை மேலும் பரிசீலனை செய்து அதிலே வழிவகை கூறுவதற்கான வகையில் பொறுக்குக் குழு நியமிப்பதற்கான முறையில், கனம் முதல் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருப்பது பாராட்டுதலுக்குரியதாகும். நீண்ட பெருங்காலமாகவே இருந்து வந்த ஒரு பேராவலை, இந்த மசோதா கொண்டுவருவதன் மூலம் நிறைவேற்றி வைக்கின்ற கனம் முதல் அமைச்சர் அவர்களை இந்த மன்றத்தில் இருக்கிற உறுப்பினர்கள் அத்தனை பேரும் பாராட்டுகின்றார்கள்.

புதிய பல்கலைக்கழகங்கள் தமிழகத்திலே தோன்ற வேண்டிய தற்கான இன்றியமையாக் காரணங்களை மன்ற உறுப்பினர்கள் பலரும் தெளிவுபட எடுத்துத் தெரிவித்தார்கள். இந்த மசோதாவை எடுத்த எடுப்பிலே மன்றத்திலே கொண்டுவந்து நிறைவேற்றிவிடாமல், அதை பொறுக்குக் குழுவுக்கு விடுவதன் மூலமாக மேலும் இதைச் செம்மையாக ஆக்கி இதைக் கொண்டு வருவதன் மூலம் நல்ல பலன் ஏற்படும். இந்த அவையினுடைய செயல்முறை பரிந்துரைக் குழுவின் வேண்டுகோளுக் இணங்க, கனம் முதல் அமைச்சர் அவர்கள் இதைப் பொறுக்குக் குழுவிற்கு விட முன்வந்தது மகிழ்ச்சியோடு வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

30th July 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

மதுரையிலே பல்கலைக்கழகம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற உணர்வு நாட்டிலே உள்ள அத்தனை பேருக்கும் நீண்ட பெருங்காலமாக இருந்து வந்திருக்கிறது. பல்கலைக்கழக நிதிக் குழுவினர் கூட, இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்த வரையிலும், ஒரு கோடி மக்களுக்கு ஒரு பல்கலைக் கழகமாவது அமைகின்ற நிலை ஏற்பட்டால்தான் எதிர்காலத்திலே நாட்டின் தேவையை நிறைவேற்ற முடியும் என்ற கருத்தை தெரிவித்திருக் கிறார்கள். ஒரு கோடி மக்களுக்கு ஒரு பல்கலைக்கழகம் உருவாக வேண்டும் என்ற நோக்கத்தோடு அரசாங்கங்கள் பணிபுரிய வேண் டும். அதையொட்டிப் பார்க்கும்போது, தமிழகத்தில் நான்கு பல் கலைக்கழகங்களாவது குறைந்த பட்சமாக அமையவேண்டும், இங்குள்ள மக்கள் எண்ணிக்கைக் கணக்குப்படி. இங்கு முழு உரிமையுள்ள பல்கலைக்கழகமாக சென்னை பல்கலைக்கழகம் மட்டுமே இருக்கிறது. பயிற்சி அளிக்கிற ஒரு முறையிலே மட்டும் அண்ணா மலைப் பல்கலைக்கழகம் தொண்டு புரிந்து வருகிறது. மதுரைப் பல்கலைக்கழகம் ஏற்படவேண்டும் என்ற கருத்து இருந்தது. அது உருப்பெற்று வந்திருப்பது மிக மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

இந்தப் பல்கலைக் கழகம் எப்படி இருக்கவேண்டும் என்பதற் கான காரணங்கள் மன்ற உறுப்பினர்களால் எடுத்து வைக்கப் பட்டன. பொறுக்குக் குழு தக்க முடிவுகள் எடுப்பதற்கான வகையில் இங்கே கூறப்பட்ட பல்வேறு பரிந்துரைகள் பயன்படு வனவாக அமையக்கூடும். அந்த வகையிலேதான் மன்றத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை மாவட்டம், நெல்லை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம் ஆகிய நான்கு மாவட்டங்களையும் உள்ளடக்கிய பகுதிகளில் உள்ள கல்லூரிகளையெல்லாம் ஒன்றாக இணைத்துப் பணி புரியும் அளவில் அமையும் என்று கூறப்பட்டிருக்கிறது. முதலில், ஆறு மாவட்டங் கள் அடங்கும் என்று கூறப்பட்டது. இப்பொழுது நான்கு மாவட்டங்களை அதன் கீழே கொண்டுவந்திருக்கிறார்கள். ஓரளவிற்கு இதுவும் வரவேற்கத்தக்க ஒன்றுதான். ஏனென்றால் இப்பொழுது சென்னைப் பல்கலைக்கழகத்தின் கீழே இருக்கிற அத்தனைக் கல்லூரிகளையும் எதிர்காலத்திலே வரவிருக்கின்ற மூன்று பல்கலைக் கழகங்களின் கீழே கொண்டுவர வேண்டும் என் கிற முயற்சி இருந்துவருவதன் காரணமாக இப்பொழுது தெற்கே உள்ள நான்கு மாவட்டங்களை ஒரு பல்கலைக்கழகத்தின் கீழே கொண்டுவருவதன் மூலம் இன்னும் சில பல ஆண்டுகளிலே, இடை யிலே இருக்கும் தஞ்சை, திருச்சி, கோவை, சேலம் ஆகிய மாவட்டங்களிலுள்ள கல்லூரிகளை ஒன்றாகச் சேர்த்து வேறு பல் கலைக் கழகங்களின் கீழே கொண்டுவர வாய்ப்பு ஏற்படும். அப்பொழுது நேரடியாகச் சென்னைப் பல்கலைக்கழகத்தின் கீழே இருந்த கல்லூரிகளை அந்தப் புதிய பல்கலைக் கழகங்கள் எடுத்துக் கொள்வதற்கு வாய்ப்பாக அமையும். இப்பொழுது மதுரைப் பல்கலைக்கழகம் என்கிற புதிய அமைப்பின் கீழே வைத்து, மாறுதல்கள் பல ஏற்படுத்தி, மீண்டும் சிலபல ஆண்டுகளிலே வேறு

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [30th July 1965

பல்கலைக்கழகங்கள் உருவாகும்போது அவற்றின் கீழே கொண்டு வருவதைவிட மற்ற கல்லூரிகளையும் இப்பொழுது உள்ளபடி சென்னைப் பல்கலைக்கழகத்தின் கீழேயே இருக்க வைத்து, இப்பொழுது நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த கல்லூரிகளை மட்டும் மதுரைப் பல்கலைக் கழகத்தின் கீழே கொண்டுவந்திருப் பதுபோல, மற்றவற்றைப் படிப்படியாக மேலும் இரண்டு மூன்று பல்கலைக்கழகங்கள் வைப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்து எடுக்கும்போது அவைகளை சேர்த்துக்கொள்வதற்கு வாய்ப்பாக அமையும். அந்த முறையில் நான்கு மாவட்டங்களை மட்டும் அந்தப் பல்கலைக் கழகத்தின் பொறுப்பின் கீழே கொண்டு வந்தது வரவேற்கத்தக்க ஒன்றுதான்.

மதுரைப் பல்கலைக் கழகத்தை, அது அமையக் கூடிய இடத்தின் சிறப்பு, வரலாற்றுச் சிறப்பு, புகழ், பெருமை, மக்கள் ஆவல் ஆகிய வற்றை நிறைவேற்றுகின்ற வகையில் அமைக்கவேண்டும் என்ற எண்ணம் இருப்பதாகக் கனம் முதல் அமைச்சர் தம்முடைய மூன்னுரையில் தெரிவித்தார்கள். அதைத்தான் மன்ற உறுப் பினர்கள் பலரும் தெரிவித்தார்கள். நானும் அதைத்தான் வலியுறுத்துகிறேன். தமிழ் வளர்ச்சிக்கும் தமிழுக்கும் பெயர் போன தமிழை வளர்த்த அத்தகைய ஒரு இடமாக அது அமைந் திருப்பதால், இந்தப் பல்கலைக் கழகத்தின் மூலம் தமிழ் வளரவும், தமிழ் ஆராய்ச்சி சாலைகள் வளரவும் தமிழ் மூலமாக எல்லாவற்றை யும் இயற்றிக் காட்ட முடியும் என்று எதிர்காலத்தில் நிலைமையை உருவாக்கவும் எல்லா அறிவியல் துறைகளையும், எல்லா அலுவல் துறைகளையும் தமிழின் மூலமாகச் செய்வதற்கு வாய்ப்பு வசதிகளை அதிகமாக ஏற்படுத்தித் தருவதற்குப் புதிதாக ஏற்படுத்தப்பட் டிருக்கிற மதுரைப் பல்கலைக்கழகத்தை நாம் துவக்கக் காலத்தி லிருந்தே பயன்படுத்திக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு பல்கலைக் கழகமும் எதற்காக அதனுடைய சட்டதிட்ட விதிமுறைகள், பல்கலைக்கழக அமைப்பு எப்படி இருக்கவேண்டும், எப்படிச் செயல் படவேண்டும் என்பது சென்னைப் பல்கலைக்கழகத்தின் சட்ட திட்டங்களின் அடிப்படையிலே அமைந்தாலும் அந்தப் பல்கலைக் கழகம் கொடுக்கின்ற கல்வி அறிவும் ஆற்றலும் சென்னைப் பல்கலைக் கழகத்திலே கொடுப்பதைப் போலவே முழுக்க முழுக்க இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஒரு பல்கலைக்கழகம் அடிப் படைத் தேவையாகச் சொல்லிக்கொடுக்கவேண்டிய அறிவு எந்த அளவுக்கு இருக்கவேண்டுமோ அந்த அடிப்படை அறிவு மதுரைப் பல்கலைக் கழகத்திலும் இருந்தே தீரவேண்டும். ஒரு பல்கலைக் கழகத்தில் என்ன என்ன துறைகள் இருக்கவேண்டுமோ, என்ன என்ன நிலைகள் இருக்கவேண்டுமோ, என்ன என்ன பாடங்கள் பயிற்றுவிக்கப்படவேண்டுமோ, அந்தப் பாடங்களும் அந்தத் துறை களும் மதுரைப் பல்கலைக்கழகத்தில் இருக்கும்படி பார்த்துக் கொண்டு, அதற்கு மேலாக, சிறப்பியல்களாக மதுரைப் பல்கலைக் கழகத்தில் சில பகுதிகளை ஏற்படுத்தலாம். சாதாரணமாக, மேல் நாடுகளில் இருக்கும் பல்வேறு பல்கலைக்கழகங்களில் ஒவ்வொரு பல்கலைக் கழகமும் ஒவ்வொரு துறையிலே சிறப்பு எய்தி புகழ் பெற்ற ஒன்றாக அமைந்திருக்கக் காண்கிறோம். ஆக்ஸ்போர்டு

30th July 1965] [திரு. இரா. தெடுஞ்செழியன்]

பல்கலைக்கழகம் ஒரு துறையில் சிறப்பாகப் புகழ்பெற்ற ஒன்றாக அமைந்திருப்பதைக் காண்கிறோம். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் ஒரு துறையில் சிறப்பாகப் புகழ்பெற்ற ஒன்றாக அமைந்திருப்பதைக் காண்கிறோம். அதேபோல், ஹார்வார்டு பல்கலைக்கழகம் இன்னொரு துறையில் சிறப்பாகப் புகழ்பெற்ற ஒன்றாக அமைந்திருப்பதைக் காண்கிறோம். சில பல்கலைக்கழகங்கள் கலையியலை வளர்த்து கலைத் துறைக்கு பெயர்போன பல்கலைக்கழகமாக விளங்குகின்றன. கலையியலிலே விருப்பமுள்ளவர்கள் அந்தப் பல்கலைக்கழகங்களில் சேர்ந்து பயில முயல்கிறார்கள். சில பல்கலைக்கழகங்கள் அறிவியல் துறைகளில் பெயரும் புகழும் சிறப்பும் பெற்று விளங்குகின்றன. அந்தத் துறைகளைப் பயில விரும்புகிறவர்கள் அவற்றிலே சேர்ந்து அந்தத் துறைகளைப் பயில முயல்கிறார்கள். அந்த முறையில், சென்னைப் பல்கலைக்கழகம் சில சிறப்பியல்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது என்றால் மதுரைப் பல்கலைக்கழகம் வேறு சில சிறப்பியல்களுக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் வகையில், அதற்கான முறைகளில் அவற்றிற்கான பாடத்திட்டங்கள் வகுத்துத் தரப்படுமானால், அந்தச் சிறப்பியல்களைப் பெற முயல்கிறவர்கள் தமிழகத்திலே உள்ள மதுரை பல்கலைக்கழகத்தில் சேரவும், சென்னைப் பல்கலைக்கழகத்தில் உள்ள சிறப்பியல்களைப் படிக்க விரும்புகிறவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து பாடங்களைப் படிப்பதற்குமான பெரு வாய்ப்பு ஏற்பட முடியும். அதற்கான முறைகளில், பல்கலைக்கழகத்திற்குத் தேவையான அடிப்படைப் பயிற்சிப் பாடங்கள் அத்தனையும் வைக்கத்தக்குப் பிறகு, தமிழை மிகச் சிறப்பான பகுதியாக வைத்து, ஆராய்ச்சி அதிகமாக அந்தப் பல்கலைக்கழகத்தின் மூலம் ஏற்பாடு செய்வதற்கும், தமிழ் மேலும் மேலும் வளர்வதற்கும் இந்த மன்றத்திலுள்ள அத்தனை பேருடைய நோக்கமும் நிறைவேறுவதற்கான அளவுக்கு என்ன என்ன முயற்சிகள் எடுக்கவேண்டுமோ அந்த முயற்சிகளை எடுப்பதற்கு வழிவகைகளை அந்தப் பல்கலைக்கழகத்தின் மூலம் செய்வதற்கு முயலுதல் வேண்டும். அந்த முறைகளிலே இதைச் செய்ய முடியும். இந்தப் பல்கலைக்கழக அமைப்பைப் பொறுத்த மட்டிலும், சொல்கிற போது, பல்கலைக்கழகம் பயிற்றுவிக்கின்ற முறையிலேயும், மாணவர்களை உருவாக்குகின்ற முறையிலேயும் முழுத் தன்னாட்சி, பெற்றுள்ளதாகப் பல்கலைக்கழகங்கள் விளங்குதல் வேண்டும். அதற்கு நிதி வசதி செய்து, நிர்வாக அமைப்பைப் பார்த்துக் கொள்ளும் அளவிற்குத்தான் அரசாங்கத்தின் தலையிடு இருக்க வேண்டும். கல்விப்பயிற்சியை தன்னாட்சி உரிமை பறிக்கப்படாமல் இருக்கவேண்டும். இந்த மசோதா பொறுக்குக் குழுவிற்குச் செல்கிறபோது அந்த வகையிலே நன்கு ஆராய்ந்து பல்கலைக் கழகத்திற்கு உரிய, சிறப்பாக இருக்கவேண்டிய தன்னாட்சி உரிமை பறிக்கப்படாத அளவிற்கு, மேலும் வலிவுபடுத்தும் அளவுக்கு சட்டதிட்டங்களிலும் முறைகள் வகுக்கப்படவேண்டும்.

இப்பொழுது அண்ணாமலைப் பல்கலைக்கழக சனைட் அவையிலும், சென்னைப் பல்கலைக்கழக சனைட் அவையிலும் இந்த மன்றத்திலிருந்து சென்று வருகின்ற உறுப்பினர்கள் பெற்ற அனுபவங்களி

[திரு. இரா. தெடுஞ்செழியன்] [30th July 1965

லிருந்து அந்த மன்றத்தினுடைய நடவடிக்கைகளையும் முறையையும் நாம் அடிக்கடி பார்க்கின்றபோது, தேர்ந்தெடுக்கப்பட்டுச் செல்கிறவர்கள் கருத்துக்களை எவ்வளவு காரசாரமாகவும் அமுத்தந்திருத்தமாகவும் எடுத்து வைத்தாலும்கூட, எடுபடாத சூழ்நிலைகள்தான் அமைந்திருக்கின்றன. குறிப்பிட்ட சிலர் அதிகாரத்தைப் பெற்றால் அந்த அதிகாரத்தை தொடர்ந்து நீலைநாட்டுவதற்கான வழிவகைதான் அங்கே அமைந்திருக்கிறதே தவிர ஜனநாயக உணர்ச்சியோடு வருகின்றவர்கள் தங்களுடைய பணிகளைச் செம்மையாக ஆற்றுவதற்கு வழி இல்லை என்று கூறுகிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பல்கலைக்கழக சென்டில் அதிகமாக இடம் பெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்த களம் முதல் அமைச்சர் அவர்கள் முன்வருதல் வேண்டும். பொறுக்குக் குழுவும் அதைப் பரிசீலனை செய்து, அதிகமான உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு முயற்சி செய்தல் வேண்டும். இந்த மன்றத்திலிருந்து அனுப்பப்படுகிற உறுப்பினர்கள் இருவர் என்றுதான் கருதுகிறேன். அந்த எண்ணிக்கையை அதிகப்படுத்தி, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அதிகமாக இருக்கிற அளவிற்கு—எதத்தாழ 50 : 50 என்ற விகிதத்தில் அமையும் அளவிற்கு—இருந்தால் இரு பகுதியினரும் சரியாகக் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளவும், தேர்மையான கருத்து, தேவையான கருத்து, விரும்பப்படுகிற கருத்துக்கு நல்ல ஆதரவு இரண்டு பக்கத்திலிருந்து வருவதற்கு வழி ஏற்படக்கூடும். அந்த முறையில் அதிகாரத்தில் உள்ளவர்கள் நியமிக்கப்படுகிற

(கனம் சபாநாயகர் தலைமை)

எண்ணிக்கைக்குச் சமமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் எண்ணிக்கையும் அமையக்கூடிய நிலை ஏற்பட்டால், நடவடிக்கைகள் சுமுகமான முறையில் நடைபெறவும் சரியான கருத்துக்கள் நேர்மையான கருத்துக்கள் இடம்பெற்று நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கான வழிவகை ஏற்பட முடியும். அந்த முறையிலே இந்தித்து செயல்முறைகளை மேற்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் எதிர்காலத்தில் வேறு பல பல்கலைக் கழகங்களை—வெளிநாடுகளில் உள்ளதுபோல தொழில் நுட்பத்துறைக்கு என்பதாக, விவசாயத்திற்கு என்பதாக தனித்தனிச் சிறப்பு அம்சங்கள் அடங்கியவனவாக அமைக்க முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். வேறு நாடுகளில் எல்லாம் அவ்வாறு இருக்கின்றன. வேளாண்மைத்துறைக்கென்றே தனியாக அமைந்தவை இருக்கின்றன. அவற்றைப் போல நம் மாநிலத்திலே உடனடியாக ஏற்படுத்தாவிட்டாலும் பிற்பாடாவது ஏற்படுத்த வாய்ப்பை உண்டாக்கி வைக்கவேண்டும். வேளாண்மைத் துறை மூலமாகத்தான் நாம் எல்லாவகையான வாழ்வையும், வளத்தையும் பெறவேண்டியிருக்கிறது—வேளாண்மைத்துறையையே நம் நாடு பெரும்பாலும் நம்பியிருக்கவேண்டி இருப்பதால் வேளாண்மைத் துறைக்குத் தனிப் பல்கலைக் கழகத்தை வைத்து வளத்தையும் வளர்ச்சியையும் நாம் காணவேண்டும். அதுபோலவே தொழில் நுட்பத் துறையையும் நாம் வளர்க்கவேண்டியவர்களாக இருக்கிறோம். ஆயினும் இன்றையதினம் நாம் மதுரையில் தவங்க

30th July 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

இருக்கிற பல்கலைக் கழகம், அதன் பாடத் திட்டங்கள் வாழ்க்கையோடு பொருந்தியதாக இருக்க வேண்டும் என்று செலுத்தவேண்டும். ஆரம்ப காலத்திலேயே அதை நன்கு ஆராய்ந்து அமைத்து விடுவோமானால் தொடர்ந்து வருகிற காலத்தில் அவை செம்மை பெற்று விளங்க வழியேற்படும். வாழ்க்கைச் சூழ்நிலையோடு தொடர்புடைய படிப்பைப் பெறுகிறவர்கள் சூழ்நிலையில் இருக்கிற வளங்களையும் களிச் செல்வங்களையும், மூலப் பொருள்களையும் நாட்டுக்கும் சரி, தங்களுக்கும் சரி பயன்படுத்துகிற முயற்சியை மேற்கொள்ள வாய்ப்பாக இருக்கும். அவர்கள் பெறுகின்ற அறிவு தாங்களாகவே முயன்று தங்களுடைய வாழ்வை வளப்படுத்திக் கொள்ளவும், தேசப் பொருளாதாரத்தை வளப்படுத்தவும் பயன்படக் கூடியதாக அமையவேண்டும்.

இப்போது பியு.சி. படித்து வருகிறவர்கள் அத்தனை பேர்களும் பொறியியல் கல்லூரியில் சேருவதற்குத் தக்க, மருத்துவக் கல்லூரியில் சேருவதற்குத் தக்க ஆர்வம் உடையவர்களாக இருக்கிறார்களே தவிர வேறு கல்லூரிகளில் சேர விரும்பவில்லை. எப்படியாவது பி.எஸ்.ஸி. படித்துவிட்டாவது மருத்துவ கல்லூரியில் சேர்வதற்கே முயற்சி செய்கிறார்கள். அந்த இரண்டு துறைகள் தான் இன்றைக்கு வாழ்வளிக்கக் கூடியது என்ற கருத்து இருக்கிறது. அதன் காரணமாக இப்போதே நான் கேள்விப் படுகிறேன். எஸ்.எஸ்.எல்.சி. படிக்கிறபோதே, புதுமுக வகுப்பு படிக்கிறபோதே அந்த இரண்டு துறைகளுக்கான பாடங்களைப் பொறுத்த மட்டில் அதிகமாக பார்க்குதன் பெற முயல்வதும் எல்லாப்பாடங்களிலும் 'சி' வாங்கியிருக்கக்கூடியவர்கள் கூட இந்தப் பாடத்தைப் பொறுத்த வரையில் 'டி' 'எ' வாங்குவதும் நாம் காணக் கூடியவைகள் தாம். இத்தகைய குறைபாட்டுக்கு நான் யாரையும் குற்றம் சொல்ல வரவில்லை. மாணவர்களின் நோக்கம் இந்த இரண்டு துறைகளில் எதாவது ஒன்றில் தழைந்தால்தான் வாழ்க்கையை கூட்டேற்ற முடியும் என்று இருப்பதுதான். இதன் காரணமாகவே இன்று கல்லூரிகளை எடுத்துக்கொண்டால் இந்த வகுப்புகளுக்குத்தான் இடநெருக்கடி. மாணவர்களாகிலும் அறிவியல் இல்லாவிட்டாலும் கணக்கு இயல் எடுத்துக்கொண்டால் பொறியியல் கல்லூரியில் சேரலாம் என்று எடுத்துக்கொள்கிறார்கள். பெண்களைப் பொறுத்த வரையில் அறிவியல் ஒன்றுக்குத்தான் அதிக நெருக்கடி உள்ளது. டாக்டராகப் போக வேண்டும் என்பதேதான் அதற்குக் காரணம். இரண்டொரு சந்தர்ப்பங்களில் நான் போகிறபோது பார்க்கிறேன். இடமில்லை என்று கல்லூரி முதல்வர் கதவைத் தாளிட்டுக் கொண்டிருக்கிறார். இதை எல்லாம் ஆராய்ந்து எந்த படிப்பைப் படித்தாலும் தங்களால் வாழ முடியும், தங்களுடைய முயற்சியின் மூலமாக சொந்த வாழ்வை அமைத்துக்கொள்வதோடு தேசப் பொருளாதாரத்தைப் பெருக்குகின்ற வகையில் பணியாற்ற முடியும் என்கிற நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் மதுரைப் பல்கலைக்கழக பாட திட்டங்களை நன்கு ஆராய்ந்து அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். இந்த மசோதா பொறுக்குக் குழுவுக்குச் சென்று மீண்டும் இந்த அவைக்கு வரச் சந்தர்ப்பம் இருப்பதனால்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [30th July 1965

மேலும் பல தெளிவான கருத்துக்களைப் பலரும் சொல்ல பின்னால் சந்தர்ப்பம் உண்டு என்பதனால் இப்போது இதை மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். நம்முடைய நோக்கம் ஈடேறும் வகையில் மேலும் தனித்தனி சிறப்பு அம்சம் பொருந்திய பல்கலைக்கழகங்கள் வருவதற்கு ஏற்ற வகையில் இதுவும் தனிச் சிறப்பு அம்சம் பொருந்தியதாக விளங்க வழிவகுக்கவேண்டும் என்று தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மதுரைப் பல்கலைக்கழக மசோதாவை மன்ற உறுப்பினர்கள் எல்லோரும் மனப்பூர்வமாக வரவேற்றுப் பாராட்டுதல்கள் தெரிவித்தார்கள். அவர்களுக்கு நன்றி செலுத்திக்கொள்கிறேன். இது எல்லோராலும் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்டதுதான். சீக்கிரமாக வந்துவிடும் என்று இன்றைக்கு எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், கனம் அங்கத்தினர்கள் இந்த மசோதா பற்றிய விவரங்கள் பற்றிக் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கருத்துக்கள் எல்லாம் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்ட பிறகு கவனிக்கவேண்டியவை. வேறு சில யோசனைகள் பொறுக்குக் குழு பரிசீலனை செய்யும்போது யோசிக்கலாம்.

இந்தப் பல்கலைக் கழகத்தின் பெயர் எதுவாக இருந்தால் என்ன என்பதாகச் சுதந்திரா கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அதுவேதான் என்னுடைய கருத்தும். பெயரிலே ஒன்றும் இல்லை. ஆனால் கனம் அங்கத்தினர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் பேசும்போது பாண்டியன் என்ற உணர்ச்சி இருந்தது. அந்த உணர்ச்சி மனத்திலே இருந்தையினால் பாண்டியன் பெயரை வைக்கலாம் என்றார்கள். அதைப்பற்றி நான் ஆட்சேபிக்கவில்லை. கனம் அம்மையார் பேசியபோது மீனாட்சி கல்லூரி என்று வைக்கவேண்டும் என்றார்கள். பல்கலைக் கழகம் விரிவானது அதன் நோக்கமும் பரந்தது. இங்கு ஆசியாவில் உள்ள அத்தனை மொழிகளையும் கூடச் சொல்லித்தர வகை ஏற்படவேண்டும் என்று விரும்புகிறோம். அதோடு சங்கங்கள் எல்லாம் கூட மதுரைத் தமிழ்ச் சங்கம் என்றே பெயர்பெற்று விளங்கியிருக்கின்றன. அந்தக் காலம் தொட்டே மதுரை என்ற பெயர் சிறப்பாக விளங்கிவந்திருக்கிறது. ஆகவே மதுரை என்ற பெயர் இருக்க வேண்டும் என்பதே என் விருப்பம். அதை மாற்றக் கூடாது. மதுரைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் என்று வைக்கலாம் என்றும் யோசனை சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில்தான் வைக்கிறோம். தமிழ் என்று எதற்காகச் சொல்லிக்கொள்ளவேண்டும்? இங்கிலாந்தில் இங்கிலிஷ் யுனிவர்சிடி என்று இருக்கிறதா? எங்காவது ப்ரெஞ்சு யுனிவர்சிடி என்று இருக்கிறதா? சந்தேகம் இருந்தால் தமிழ் என்று போர்டு போட்டுக்கொள்ள வேண்டும். கனம் எதிர்க்கட்சித் தலைவர் பேசியபோது ஒவ்வொரு சர்வகலாசாலைக்கும் ஒரு சிறப்பு அம்சம் விளங்கவேண்டும் என்று சொன்னார்கள். என் கருத்து இந்த மதுரை பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில் தமிழ் சிறப்பு அம்சமாக விளங்கவேண்டும் என்பதுதான். சிறப்பு

30th July 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

இயல்களில் ஒன்றாக தமிழ் இங்கே நன்கு ஆராயப்படவேண்டும், வளர்ச்சி அடையச் செய்யவேண்டும் என்பதுதான். ஆகவே, தமிழ் என்ற பெயர் வைக்கவேண்டிய அவசியம் இல்லை.

அதுபோல் வைஸ்-சான்சலரைப் பொறுத்த வரையில் நல்ல திறமை உடையவர் தான் நியமிக்கப்படுவார். முற்றிலும் தகுதி உடையவர்தான் இருப்பார் அரசியல் நோக்கம் கொஞ்சம்கூட இல்லாமல் மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு துணைவேந்தர் அமைவார். இதுபற்றி முன்பே நான் உறுதி கூறினேன். அதுவும் ஒரு பெண்ணை இருக்கவேண்டும் என்று மனம் அம்மையார் அவர்கள் சொன்னார்கள். இதுவும் ஒரு உணர்ச்சிதான். சாதி உணர்ச்சி, வகுப்பு உணர்ச்சி, மத உணர்ச்சி போல இது பால் உணர்ச்சி. பெண் வரக் கூடாது என்று சொல்லவில்லை. நானே அந்த அம்மையார் பேசுகின்றபோது பெண்களிலே யாரை இங்கே வைஸ்-சான்சலராகப் போடலாம் என்பதற்கு ஒரு பாவல் கொடுக்கும்படி கேட்டலாம் என்று நினைத்தேன். பெண்களிலே அதற்குரிய தகுதி உடையவர் இருந்தால் போடக் கூடாது என்பதல்ல. இன்றைக்கு அப்படித் தகுதி உள்ளவர் யாரும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அதனால் பெண்களைப் பற்றி குறைவான அபிப்பிராயம் இல்லை. கல்வியையே பெண் தெய்வமாக, சரஸ்வதியாக வைத்துத்தான் நாம் கும்பிடுகிறோம். இன்னும் இரண்டு மாதத்தில் கூட சரஸ்வதி பூசை வர இருக்கிறது. ஆண்கள் என்பதற்காக பிரும்மாவை வைத்து நாங்கள் யாரும் கும்பிடவில்லை. ஆனால் இன்றைக்கு சர்வகலாசாலை உப அத்தியட்சகராக இருக்கத்தக்க தகுதி உடைய பெண்கள் இருந்தால் அவர்கள் சொல்லலாம். ஆனால், அப்படிப்பட்டவர்கள் பெண்களிலே இப்பொழுது கிடைப்பது அரிது என்பது என்னுடைய அபிப்பிராயம். நான் இப்படிச் சொல்கிறேன் என்று பெண்மணிகள் கோபித்துக் கொள்ளக்கூடாது.

இப் பல்கலைக் கழகத்திலே முக்கியமாக ஆராய்ச்சிகள் செய்வதற்கு வழிசெய்வது கவனிக்கப்படும். இரண்டு அங்கத்தினர்கள் 'லீடர்ஷிப்' வேண்டுமென்பதைக் குறிப்பிட்டார்கள். அதை நான் மிகவும் வரவேற்கிறேன். என்ஜினியரிங் காலேஜ்களில் என்ஜினியர்கள் தயாரிக்கப்படுகிறார்கள். அதுமட்டும் போதாது. மதுரைப் பல்கலைக் கழகத்திலே என்ஜினியர்கள் தயாரிக்கப்படுவது மட்டுமல்ல. என்ஜினியர் லீடர்களும் தயாரிக்கப்படவேண்டும். அப்படிப்பட்ட பல்கலைக்கழகங்கள் ஒன்றிரண்டு மேலைநாடுகளில் இருக்கின்றன. அமெரிக்காவில் பர்டியூ யுனிவர்சிடி இதைப்போல் இருக்கிறது. அங்கே என்ஜினியர்கள் தயாரிக்கிறார்கள்; என்ஜினியரிங் லீடர்ஷிப்பும் இருக்கிறது. அந்தப் பல்கலைக் கழகத்திற்கு நம் முடைய நாட்டிலேயிருந்து ஒரு பேராசிரியர் போயிருந்தார். அப்பொழுது அங்கேயுள்ளவர்கள் 'நீங்கள் கொஞ்சம் மேதமேடிக்ஸ் படிக்கவேண்டும்' என்று சொன்னார்களாம். ஆகவே, அப்படிப்பட்ட உயர்ந்த தரமுள்ள பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. அதே மாதிரி நம்முடைய மதுரைப் பல்கலைக் கழகமும் உயர்ந்த தரமுள்ளதாக இருக்கவேண்டுமென்பது என்னுடைய எண்ணம். 1-00 p.m.

[திரு. எம். பக்தவத்சலம்] [30th July 1965

மற்றப்படி, என்னென்ன மொழிகள் இடம்பெற வேண்டுமென்பது எல்லாம் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டதற்குப் பிறகு கவனிக்கப்பட வேண்டியவை. சட்டத்தில் எஷியன் லாங்வேஜஸ் என்று ஏன் போட்டிருக்கிறீர்களென்று கேட்டார்கள். இதைப் பற்றி செலக்ட் கமிட்டியிலே பேசிக் கொள்ளலாம். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சிறப்பியல்கள் ஸ்பெஷல் ஃபீச்சர்ஸ், வேண்டுமென்று சொன்னார்கள். என்ஜினியரிங்குக்கு ஒரு பல்கலைக் கழகம், விவசாயத்திற்கு ஒரு பல்கலைக் கழகம் இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் இது ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறது. இது என்னுடைய கருத்து. நான் குறை கூறுகிறேன் என்று நினைக்கக்கூடாது. பல்கலைக்கழகம் என்றால் என்ன பொருள்? பல கலைகளைக் கற்கின்ற இடம் என்பதுதான். ஆகவே, அங்கே பல கலைகளும் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் அது பல்கலைக்கழகமாக இருக்கும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன மாதிரி, சிற்சில கலைகளிலே விசேஷ கவனம் செலுத்தப்படும். என்னுடைய விருப்பம், தமிழைப்பற்றிப் படிப்பதில் அதிக கவனம் செலுத்த தமிழ் விசேஷமாக இடம் பெறவேண்டும். இரண்டாவதாக விவசாயம். விவசாயத்தை எடுத்துக்கொண்டால், மண்வள ஆராய்ச்சி, மண்வளப் பாதுகாப்பு இவைபோன்ற சிறப்பியல்கள் எல்லாம் பாதுரைப் பல்கலைக் கழகத்திலே இடம்பெற வேண்டும்.

பண்டையக் காலத்திலே நம்முடைய நாட்டிலே பல்கலைக் கழகங்கள் இருந்தன. நாகார்ஜுன சாகரிலே பல்கலைக் கழகம் இருந்தது. நான் அங்கே போய் பார்த்திருக்கிறேன். இப்பொழுது அது இல்லை, தண்ணீரில் மூழ்கிவிட்டது. அங்கே எத்தகைய அற்புதமான அமைப்பு இருந்தது! சானிடரி கண்டிஷன்ஸ் எப்படி யெல்லாம் அற்புதமாக இருந்தது! அதுபோல் இன்றைக்கு கூடப் பார்க்கமுடியாது. அவ்வளவு அற்புதமாக அந்தக் காலத்தில் பல்கலைக்கழகம் அமைந்திருந்தது. அந்தக் காலத்திற்கு ஏற்றவாறு அறிவை அளித்தார்கள். நாமும் இந்தக் காலத்திற்குத் தகுந்தவாறு அறிவை அளிக்கவேண்டும். பண்டைக் காலத்தில் நம்முடைய நாட்டிலேயிருந்த பல்கலைக் கழகங்கள் ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டிருந்தன. காஞ்சியிலே இருந்து ஒரு பேராசிரியர் நளாந்தா பல்கலைக் கழகத்திற்கு அழைக்கப்பட்டார். அங்கே போய் அந்தப் பேராசிரியர் தொண்டாற்றினர் என்றால் அப்பொழுதிருந்த விரிவான மனப்பான்மையை நாம் சிந்திக்கவேண்டும். பல மொழிகளையும், கலைகளையும் கற்றிருந்த, பன்மொழிப் புலவராக இருந்த ஒருவர் ஒரு பல்கலைக் கழகத்திலிருந்து இன்னொரு பல்கலைக்கழகத்திற்குப் போய் அங்கே பேராசிரியராக தொண்டாற்றக்கூடிய அகன்ற மனப்பான்மை, அகன்ற ஆற்றல் இவற்றை நாம் கவனிக்கவேண்டும். ஆகவே, நாம் இப்பொழுது அதைவிட இன்னும் அதிகமாகக் கற்கவேண்டும். பல்கலைக் கழகங்கள் கிணற்றுத் தவளைகளாக இருக்கக்கூடாது. நாமும் பல இடங்களிலிருந்து பேராசிரியர்களை அழைத்து அவர்களிடமிருந்து அறிவைப் பெற்றுக்கொள்ளவேண்டும்; அறிவைப் பெருக்கிக்கொள்ளவேண்டும். ஆகவே, இந்தப் பல்கலைக் கழகத்

30th July 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

தின் எதிர்காலம் இங்கேயுள்ள மன்ற உறுப்பினர்கள் எதிர்பார்க் கிறபடி விளங்கக்கூடிய முறையிலே இருக்கும் என்று நம்புகிறேன். மதுரையின் பேருக்கும், புகழுக்கும் ஏற்றவாறு மதுரைப் பல்கலைக் கழகம் விளங்கும் என்று நம்புகிறேன்.

இதிலே சட்டக் கல்லூரி வைக்கவேண்டுமென்று அம்மையார் அவர்கள் சொன்னார்கள். இதெல்லாம் பல்கலைக் கழகம் ஆரம் பிக்கப்பட்ட பிறகு கவனிக்கவேண்டிய விஷயம்.

சென்ட்டிலே எவ்வளவு பேர்கள் இருப்பது, அதிகமான பேர் கள் இருப்பது என்றால் அதையும் நாம் செலக்ட் கமிட்டியிலே பேசிக்கொள்ளலாம். மீபைனன்ஸ் செகரட்டரி வேண்டாம் என்று சொன்னார்கள். மீபைனன்ஸ் செகரட்டரி இருப்பது நல்லதா என்று சொன்னால், இருப்பது நல்லது என்ற யோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதனால்தான் வைத்து இருக்கிறோம். வெளியார் தலையீடு இல்லாமல் நடைபெறவேண்டுமென்பதை முற்றி லும் நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அதற்கும் ஒரு வரம்பு உண்டு. சுதந்திரம் என்றால் தனிப்பட்டவன் எல்லா வகைகளி லும் இஷ்டம்போல் இருக்கமுடியாது. அதுபோல வெளியார் தலையீடு, அரசியல் தலையீடு இல்லாமல் நடந்துகொள்ளவேண்டும். ஆனால் அதற்கும் ஒரு வரம்பு இருக்கிறது.

கடைசியாக நான் ஒன்றைக் கூறவிரும்புகிறேன். யுனிவர்சிடி கிரான்ட்ஸ் கமிஷனிடமிருந்து உதவி கிடைக்கும். மத்திய அர சாங்கத்திடமிருந்து உதவி கிடைக்கலாம். இப்பொழுது வேறு ஒரு பல்கலைக் கழகம் அமைக்கவேண்டுமென்று சொன்னார்கள். நானும் ஒப்புக்கொள்கிறேன். இது போதாதுதான். என்னுடைய சொந்த ஆசை என்னவென்றால் திருச்சியை மையமாக வைத்து ஒரு பல்கலைக்கழகம் வைத்தால் நல்லதுதான். அதற்குமேலும், முடிந்தால் கோவையிலே ஒரு பல்கலைக் கழகம்கூட வைக்கலாம். நான் குறுக்கே நிற்கவில்லை. ஆனால், நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் வேறு ஒரு பல்கலைக் கழகம் அமைப்பதற்கில்லை. எனென்றால் நிதி நிலை அவ்வாறு இருக்கிறது. இந்தப் பல் கலைக் கழகம்கூட முன்னாலேயே ஒப்புக்கொள்ளப்பட்டதால் ஆரம் பிக்கப்படுகிறது. ஆகவே, இதற்குமேலே நான்காவது திட்டத்தில் இன்னொரு பல்கலைக் கழகத்தை—அவசியத்தையொட்டி யல்ல, நிதி நிலைமையை ஒட்டி—எதிர்பார்க்கவில்லை.

இந்த மதுரைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையிலே தொழில் ஸ்தாபனங்கள், மற்ற தர்ம சிந்தனையுடையவர்கள், தர்ம ஸ்தாபனங்கள் இவைகள் எல்லாம் முன்வந்து அவரவர்களுக்குத் தோன்றிய முறையிலே எண்டோமென்ட்ஸ் வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சட்டம் வருவதற்கு முன்பே அவர்கள் எல்லாம் முன் வருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். அதற்கு கலம் உறுப்பினர்களும் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். இந்தப் பல்கலைக் கழகத்திலே நான்கு மாவட்டங்கள் சேர்ந்திருக் கின்றன. ஆகவே ஒவ்வொரு இடத்திலுமுள்ள தொழில் ஸ்தாபனங் கள், தர்ம ஸ்தாபனங்கள் எல்லாம் தாராளமாக முன் வந்து எண்டோமென்ட்ஸ் வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம். பக்தவத்சலம்] [30th July 1965

அந்தப் பிராந்தியத்திலே முருகப் பெருமான் கோயில் இருக்கிறது. முருகப் பெருமான் என்றால் ஞானப்பண்டிதன் இருக்கிறார். ஆகவே, முருகப் பெருமான் ஆலயத்திலிருந்து பல்கலைக் கழகத்திற்கு ஊக்கியளிப்பது மிகவும் பொருத்தமாக இருக்கும். இதைத் தவிர திருப்பரங்குன்றம், பழனி, திருச்செந்தூர், இராமேஸ்வரம், கன்னியாகுமரி ஆகிய தேவஸ்தானங்கள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் தங்களால் இயன்ற அளவுக்கு எண்டோமென்ட்ஸ் வைப்பார்கள் என்று நம்புகிறேன். அப்படியென்றால் அவர்கள் வைத்து விடுவார்கள் என்று நினைத்து அதுவே போதுமானது என்று யாரும் நினைக்கக்கூடாது. ஆகவே, தொழில் ஸ்தாபனங்கள், தர்ம ஸ்தாபனங்கள், மற்றவர்கள் தரும சிந்தனையுள்ளவர்கள் இவர்கள் எல்லாம் முன்வந்து தருமம் செய்யலாம். மீண்டும் நான் மனப் பூர்வமாகக் கேட்டுக்கொள்வது, எல்லோரும் இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்பதுதான்.

செலக்ட் கமிட்டியில் யாரைப் போட்டாலும் அவர்கள் இந்த மன்றத்தின் பிரதிநிதிகளாகத்தான் இருக்கிறார்கள். எண்ணிக்கை இவ்வளவு பேர் இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை. ஆகவேதான், இத்தச் சபையிலிருந்து 12 பேரும், மேல் சபையிலிருந்து 6 பேரும் ஆக 18 பேர் இருக்கட்டும் என்று போட்டோம். கனம் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அவர் கொடுத்தத் திருத்தத்தில் உள்ளபடி போட்டாலும் சொம்ப அதிகமாகப் போய்விடும் அல்லது அவருடைய திருத்தத்தை அப்படியே ஏற்றுக் கொள்ளக் கூடாது என்றாலும் கொஞ்சம் எண்ணிக்கையைக் குறைத்துக் கொண்டு 16 பேர் 8 பேர் என்றோ, 14—7 என்றோ போட்டுக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். அவ்வாறு குறைத்து நான் ஏற்றுக்கொண்டால் கனம் கலியாணசுந்தரம் அவர்களுடைய திருத்தத்தை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்றுதான் இப்படிச் செய்தேன் என்று கூறலாம். எனவே, 12—6 என்று பதினெட்டாகவே இருக்கட்டும். ஆகவே, திரு. கலியாணசுந்தரம் அவர்கள் அவருடைய திருத்தத்தை வலியுறுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படியானால், இப்போதே அந்தப் பெயர்களைப் படிக்கின்றேன்.

MR. SPEAKER: What about the amendment of the hon. Member Sri M. Kalyanasundaram ?

SRI M. KALYANASUNDARAM: Sir, I am pressing my amendment.

MR. SPEAKER: The question is—

"In the Government Motion for referring the Madurai University Bill, 1965 (L.A. Bill No. 11 of 1965) to a Joint Select Committee—

(i) For the figure '18', substitute the figure '27';

(ii) For the figure '12', substitute the figure '18'; and

(iii) For the figure '6', substitute the figure '9'."

The amendment was put and lost.

30th July 1965]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I will now read out the names of the twelve Members.

1 The Hon. Sri M. Bhaktavatsalam.

2 Dr. B. Natarajan.

3 Sri A. P. C. Veerabahu.

4 Sri R. Swaminathan.

5 Sri V. Sankaran.

6 Sri P. K. Mookiah Thevar.

7 Sri R. Subramaniam.

8 Sri V. R. Nedunchezhiyan.

9 Sri Saw. Ganesan.

10 Sri S. Madhavan.

11 Sri M. Kalyanasundaram.

12 Sri P. Ramachandran.

MR. SPEAKER : The question is—

" That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of 18 members (12 members of the Legislative Assembly and 6 members of the Legislative Council) to consider the Madurai University Bill, 1965 (L.A. Bill No. 11 of 1965) and that the following members of the Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee :—

1 The Hon. Sri M. Bhaktavatsalam.

2 Dr. B. Natarajan.

3 Sri A. P. C. Veerabahu.

4 Sri R. Swaminathan.

5 Sri V. Sankaran.

6 Sri P. K. Mookiah Thevar.

7 Sri R. Subramaniam.

8 Sri V. R. Nedunchezhiyan.

9 Sri Saw. Ganesan.

10 Sri S. Madhavan.

11 Sri M. Kalyanasundaram.

12 Sri P. Ramachandran."

The motion was put and carried.

[30th July 1965

(4) The Madras Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1965.

* The Hon. Sri M. BHAKTAVATSALAM : Sir, I introduce the Madras Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1965 and move—

" That the Bill* be taken into consideration. "

கனம் சபாநாயகர் அவர்களே, சற்று முன்பு நான் விளக்கியதை போல் சுப்ரீம் கோர்ட்டில் கொடுத்த ஒரு தீர்ப்பின் காரணமாகத் தான் இந்த மசோதாவைக் கொண்டு வர வேண்டிய அவசியம் ஏற்பட்டது. 1957-க்கு முன்பு இருந்த சட்டத்திலே சில தர்ம ஸ்தாபனங்கள் செய்கின்ற கட்டளைகள் சீராக நிர்வாகம் செய்யப் படுவதற்காக அறநிலைய இலாகா மூலம் மேற்பார்வை செய்வதற்கும் விதி விதிக்கலாம் என்றும், நோடிபிகேஷன் செய்து அதைச் சேர்த்துக் கொள்ளலாம் என்றும் சட்டம் இருந்தது. அதற்குப் பிறகு 1957-லே அந்தச் சட்டம் அப்படியே நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டத்தின்கீழ் சில ஸ்தாபனங்கள் கட்டளைகள் நோடிபிகேஷன் செய்யப்பட்டு இந்த அறநிலையப் பாதுகாப்பு இலாகாவில் மேற்பார்வைக்கு வந்தது. அப்படி வரும்போது அறநிலையப் பாதுகாப்பு இலாகாவினர் நிர்வாக அதிகாரியைப் போடக்கூடிய ஒரு அதிகாரம் இருக்கிறது. இவ்வாறு நடை பெற்றுக் கொண்டிருந்தது. ஆனால் திருவாரூர்க் கட்டளைக்காரர் கள் இது செல்லாது என்று ஹைகோர்ட்டுக்குப் போய், கடைசியில் சுப்ரீம் கோர்ட்டுக்கும் போனார்கள். சுப்ரீம் கோர்ட்டில் சட்டம் கூடாது என்று சொல்லவில்லை. நோடிபிகேஷன் செய்யக்கூடாது என்று சொல்லவில்லை. நோடிபிகேஷன் போடுவதற்கு மூன்னால் அந்த தர்ம ஸ்தாபனத்தை ' நாங்கள் மேற்பார்வை செய்யப் போகிறோம்; அதற்கு என்ன சமாதானம் சொல்லுகிறீர்கள்?' என்று கேட்டு அதற்குப் பிறகு ஒப்புக்கொள்ளவில்லை என்றால் பிறகு நோடிபிகேஷன் போடலாம் அவர்கள் சமாதானம் கூற வேண்டிய நிமித்தம் இருக்கிறது. அது இதிலே நிறைவேறவில்லை. ஆகவே, கொடுக்கப்பட்ட தீர்ப்பு சரியான நீதி என்று சொல்வதற்கில்லை. 'நேச்சுரல் ஜஸ்டிஸ்' இதிலே இல்லை என்றுதான் சுப்ரீம் கோர்ட் தள்ளி விட்டார்கள். அதனால் இங்கே விபரீத விளைவுகள் ஏற்படக் கூடும். தருமபுர ஆதீனத் தார் இந்தக் கட்டளைகளையெல்லாம் மேற்பார்வை பார்த்து வரு கிறார்கள் இவையெல்லாம் திருப்திகரமாக இருக்க வேண்டுமென் பதுதான் அரசாங்கத்தின் எண்ணம். மதுரைப் பல்கலைக் கழகத் திற்கு என்டோமென்ட் வைக்க வேண்டுமென்று சொல்லும்போது மடங்களைப் பற்றிச் சொல்ல மறந்து விட்டேன். மடங்கள் தாராளமாக என்டோமென்ட் வைக்கவேண்டும். தமிழைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. சில பேர் ஏதோ செய்கிறார்கள்; மறுக்கவில்லை. தங்களுடைய ஆதிக்கத்தில் இருக்கிற கட்டளைகளைப் பற்றி யாரும் கேட்கக்கூடாது. நிர்வாக அதிகாரி கூடப் போடக் கூடாது, எங்கள் இஷ்டம் போல்

* Published in the Fort St. George Gazette Extraordinary, dated 23rd July 1965.

30th July 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

செய்வோம் என்று கூறும் நிலைமை இருக்கிறது. அந்த நிலைமைக்கு இடம் கொடுக்காத வகையில் சட்டம் செய்யப்பட்டது. அதன்படி நோடிபிகேஷன் செய்யப்பட்டது. சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு என்ன வென்றால், முதலிலே நோட்டீஸ் கொடுக்கவேண்டும். அதற்கு என்ன சமாதானம் சொல்கிறார்கள் என்று பார்த்து அதற்குப் பிறகு அரசாங்கம் உத்தரவு போடலாம். நோட்டீஸ் கொடுக்காவிட்டால் 'நேச்சுரல் ஜஸ்டிஸ்' இல்லை. அதற்கு இணக்க மாகத்தான் இந்த மசோதா வந்திருக்கிறது. இதிலே இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எல்லாம் தவறுதலாகப்போய்ப் பெரிய குழப்பம் ஏற்படும். அல்லாமலும் தங்கள் இஷ்டம் போல் தர்ம ஸ்தாபனங்களைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடும். அதைத் தவிர்க்க இது அவசரச் சட்டமாகப் பிரயோகம் செய்யப்பட்டது. இதுவரையில் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் சட்ட பூர்வமான நடவடிக்கைகள் என்று கருதப்படும். இதற்குப் பிறகும் நீடிக்க வேண்டுமென்றால் நோட்டீஸ் கொடுத்து இதை நீடிப்பது என்பதுதான் இந்த மசோதாவினுடைய நோக்கம். ஆகவே, இந்த மசோதாவைக் கனம் அங்கத்தினர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, இது பற்றி சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்தது என்று கனம் முதல மைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தத் தீர்ப்பு எப்போது வந்தது? அதற்குப் பிறகு ஆர்டினன்ஸ் எப் போது வந்தது? ஆர்டினன்ஸ் 17-ம் தேதி வெளியிடப்பட்டதாக கூறப்படுகிறது. அந்த நேரத்திலே ஆர்டினன்ஸ் கொண்டு வர வேண்டிய அவசியம் இருந்ததா? சட்டசபை ஆரம்பித்ததற்குப் பின் கொண்டுவர வாய்ப்பு இருந்ததா என்பதை அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தத் தீர்ப்பு எந்தத் தேதி வந்தது என்று நினைவு இல்லை. இரண்டு மாதத்திற்கு முன்பு வந்தது. இதனால் ஏற்படக் கூடிய விளைவுகளைத் தவிர்க்க சட்டம் செய்ய வேண்டும். சட்டம் செய்வது என்றால் தாமதமாகலாம். ஆகவே, அவசரச் சட்டம் பிறப்பிப்பது என்று முடிவு செய்யப் பட்டது. அதற்கும் மத்திய அரசாங்க அனுமதி வேண்டியிருக் கிறது. அவர்கள் சில யோசனைகளை சொன்னார்கள். அந்த அளவிற்குத்தான் தாமதம் ஏற்பட்டது. அந்த மாதிரிச் செய்யாமல் இன்றைக்கு இந்த மசோதாவை இந்த மன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றிக் கொள்ளலாம் என்றாலும் இன்றைக்கே அந்தச் சட்டத்தை இந்த மன்றம் நிறைவேற்றி விடும் என்று எதிர் பார்ப்பதற்கில்லை.

பிரினஸ் அட்வைசரி கமிட்டி இருக்கிறது. இன்று வந்தாலும் இந்த பத்து நாட்களில் விபரீதம் ஏற்படலாம், 15 நாட்களில் விபரீதம் ஏற்படலாம். ஒரு நாள் கூட தாமதிக்கக் கூடாது. ஒரு நாள் கூட தவிர்க்கக் கூடிய வகையில் தாமதப்படுத்தக் கூடாது. இந்த மசோதாவை தயாரிக்கும்போது சட்ட நிபுணர்களுடன் கலந்துதான் செய்யப்பட்டது. ஒரு நாள் கூட தாமதிப்பது சரி

[திரு. எம். பக்தவத்சலம்] [30th July 1965

யல்ல. அதனால் விபரீதம் ஏற்படலாம் என்றுதான் இது அவசரச் சட்டமாக பிரகடனப்படுத்தப்பட்டது. இவ்வளவு நாட்களுக்குள் வரலாம் என்று வரம்பு இருக்கிறது. ஆகவே, சட்டசபை கூடுகிற வரை என்றில்லாமல் சபாநாயகர் அவர்களின் அனுமதி பெற்று கெசட்டில் பிரசுரித்து இந்த சபை தொடங்கிய நான்காவது நாள் இந்த மன்றத்திற்கு வந்திருக்கிறது.

MR. SPEAKER : The question is—

'That the Madras Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1965 be taken into consideration'.

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 to 6 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

'That the Madras Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1965 be passed'.

The motion was put and carried and the Bill was passed.

1-21 p.m. MR. SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE

A. Statutory Rules and Orders.

* 174. *Notification issued with G.O. Ms. No.* 1311, *Home, dated the 9th April* 1965, *directing that the tax payable in respect of lorry bearing registration No. MDJ* 1358 *belonging to the St. Mary's High School and Orphanage, Vellore, be fixed as Rs.* 180 (*Rupees one hundred and eighty only*) *per quarter, so long as the said lorry is used exclusively for the transport of materials, for the construction of buildings for the said educational institution and orphanage and for carrying foodstuffs to the orphanage from the market.* [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931).]

* 175. *Notification issued with G.O. Ms. No.* 2023, *Home, dated the 9th June* 1965 *exempting from payment of tax leviable under the Madras Motor Vehicles Taxation Act,* 1931, *the vehicle bearing registration No. MDE* 8585 *belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to Sri Avanashilingam, Home Science College, Coimbatore.* [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931).]

* Placed on the Table of the House on the 29th July 1965.

30th July 1965]

*176. *Notification issued with G.O. Ms. No.* 623, *Rural Development and Local Administration, dated the* 13*th March* 1965 *amending the rules relating to restriction and control to regulate the use of porambokes in ryotwari tracts by panchayats published with the Rural Development and Local Administration Department Notification S.R.O. No. A-*489 *of* 1961 *(Notification No.* 33), *dated the* 26*th April* 1961, *on pages* 35–36 *of Supplement to Part V of the* Fort St. George Gazette, *dated the* 10*th May* 1961. [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act XXXV of* 1958).]

177. *Notification issued with G.O. Ms. No.* 759, *Home, dated the* 3*rd March* 1965 *amending the Home Department Notification* II-1 *No.* 2740 *of* 1964, *dated the* 20*th June* 1964, *published at page* 1131 *of Part II—Section* 1 *of the* Fort St. George Gazette, *dated the* 24*th June* 1964. [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931).]

178. *Notification issued with G.O. P. No.* 1909, *Revenue, dated the* 23*rd June* 1965, *amending the First Schedule of the Madras General Sales Tax Act,* 1959. [*Laid on the Table of the House under section* 53 (5) *of the Madras General Sales Tax Act,* 1959 (*Madras Act I of* 1959).]

B. Reports, Notifications and other papers.

†36. *The Madurai University Bill,* 1965 (*L.A. Bill No.* 11 *of* 1965).

TRUTH ALONE TRIUMPHS

* Placed on the Table of the House on the 29th July 1965.

† Despatched to Members on 28th July 1965.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS